தமிழர் தோற் கருவிகள்



ஆர். ஆளவந்தார்

தமிழர் தோற்கருவிகள்

ஆர். ஆளவந்தார்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
அடையாறு, சென்னை—600020.
International Institute of Tamil Studies
ADAIYARU, MADRAS—600020.

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	—	Tamizar Thorkaruvikal
Author	—	R. Alavandar Research Officer International Institute of Tamil Studies, Madras-600 020
Publication Number	—	43
Language	—	Tamil
Edition	—	First
Date of Publication	—	December, 1981
Paper used	—	18 Kg D/Demy(F)White Printing
Size of the book	—	Demy Octova
Printing type used	—	10 Point
No. of Copies Printed	—	2200
No. of Pages	—	XVIII + 246 + 12 = 276
Price	—	**Rs. 10 (Rupees Ten)**
Printers	—	Novel Art Printers, Madras-600 014.
Binding	—	Paper Back
Artist	—	Eswari
Subject	—	Musical Instruments-Percussion Instruments of the Tamils.
Summary	—	This book deals with the Musical Instruments— Percussion Instrument of the Tamils.

செ. அரங்கநாயகம்
கல்வித்துறை அமைச்சர்

புனித ஜார்ஜ்கோட்டை
சென்னை—600 009

நாள். 30—12—81

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தமிழர் பண்பாட்டை உணர்த்தும் நூல்கள் பலவற்றை வெளியிட்டுள்ளது. தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும், தமிழர் ஆடைகள், தமிழர் நாட்டு விளையாட்டுகள், தமிழக நாட்டுப்புறக் கலைகள், தமிழர் உணவு போன்றவை குறிப்பிடத்தக்கன.

இயற்றமிழ் பற்றிப் பல நூல்களை நிறுவனம் வெளியிட்டுள்ளது. இசைத்தமிழ் பற்றி நிரம்ப நூல்கள் வருதல் வேண்டும். சுவாமி விபுலானந்த அடிகளின் 'யாழ்நூலும்' அபிரகாம் பண்டிதரின் 'கருணாமிர்த சாகரமும்' மிகச் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை. தமிழில் முதன்முதலாகத் தமிழர் தோற் கருவிகள் பற்றி உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இந்நூலைக் கொணர்கிறது. இதனைத் தொடர்ந்து துளைக்கருவிகள், நரம்புக் கருவிகள், கஞ்சக்கருவிகள் போன்ற நூல்களை நிறுவனம் வெளியிடும் என்று நான் எதிர்பார்க்கிறேன். தமிழரின் இசைக் கருவிகளுள் நாகசுரம் மிகச் சிறப்பாகக் குறிப்பிடக்கூடியதொன்று. அதேபோன்று தமிழர்க்கே தனித்துரிய தோற்கருவிகளைப் பற்றித் தெரிந்துகொள்ள இந்நூல் மிகவும் துணைபுரியும். இந்நூலை எழுதிய திரு. ஆளவந்தார் அவர்களைப் பாராட்டுகிறேன். நிறுவனம் இதுபோன்ற நூல்களை வெளியிட வேண்டும் என்று விரும்புகிறேன்.

செ. அரங்கநாயகம்

அணிந்துரை

சங்கீத வித்வான் அருட்டிரு தாமஸ் செல்லத்துரை, சே. ச.,
B A, B T., Dip. Mus. (Ind)
98, சாந்தோம் நெடுஞ்சாலை,
ஐக்கிய ஆலயம்,
சென்னை, 600028.

இன்று தமிழ்நாடெங்கும் தமிழிசை மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளதை நாம் காண்கிறோம். தமிழல்லாத பிறமொழிகளில் பாடினால்தான் அது உண்மையான இசை, தரமான இசை என்ற மிகத்தவறான எண்ணம் சிறிது சிறிதாக மாறி, முழுக்க முழுக்கத் தமிழிலேயே அரங்கிசை நிகழ்த்திவரும் மனத்திண்மை வாய்ந்த பரம்பரை இசைப்புலவர்கள் (வித்வான்கள்) சிலர் நம்மிடை இருப்பதை நோக்குமிடத்து நம் உள்ளம் பேருவகை கொள்கிறது. பொருள் அறிந்து பாடப்படுகின்ற பாடல்தான் பாடுகிறவருக்கும் பாட்டைக் கேட்பவருக்கும் கலையின்பத்தையும் உள்ள நிறைவையும் அளிக்கவல்லது என்பதை இன்று எல்லோரும் ஏற்றுக் கொள்கின்றனர். தமிழ்நாட்டில் தமிழிசைக்குத்தான் முதன்மை அளிக்க வேண்டும் என்று திரும்பத்திரும்ப எடுத்துச் சொல்லவேண்டிய அவலநிலை மாறிவருவது மகிழ்ச்சிக்குரியது.

இந்த வேளையிலே தமிழிசை பற்றியும், தமிழிசைக் கருவிகளைப் பற்றியும் ஆழ்ந்த ஆய்வு நடத்தப்படுவது மிகத் தேவையானது திருவாளர் ஆர். ஆளவந்தார் M.A., B.T. அவர்கள் பண்டைய தோற்கருவிகளைப்பற்றி ஒரு சிறந்த ஆய்வு செய்துள்ளார். அதன் பயன்தான் இந்நூல். எத்தனை பழந்தமிழ் நூற்கள் கிடைக்கக்கூடுமோ அவற்றையெல்லாம் நன்றாக அலசிப்பார்த்துத் தோற்கருவிகளைப் பற்றிய அனைத்து விவரங்களையும் செம்மையாக இந்நூலில் தொகுத்துள்ளார். இப்பணியில் எனக்கும் ஒரு சிறு பங்கு கிடைத்ததை எண்ணி இன்பமடைகிறேன். இந்நூலில் தரப்பட்டுள்ள செய்திகள் இசையில் ஈடுபாடுள்ள கலைஞர்களுக்கும், இசை பயிலும் மாணவ-மாணவியருக்கும் மட்டுமல்லாமல், தமிழார்வம் கொண்ட அனைவருக்கும் மிகவும் பயனுள்ளவை என்பதில் சிறிதும் ஐயம் இல்லை. பண்டைய

கருவிகள் பல இன்று நடைமுறையில் இல்லாவிட்டாலும், நம் முன்னோர் எவ்வாறு வெவ்வேறு வகைக் கருவிகளைக் குறிப்பாகத் தோற்கருவிகளை வெவ்வேறு சூழ்நிலையில் பயன்படுத்தி வந்துள்ளனர் என்று தெரிந்து கொள்வது நம் அறிவுக்கு விருந்தாகும்.

திரு. ஆர். ஆளவந்தாரின் முயற்சி மிகவும் பாராட்டுதற்குரியது. இது தமிழ்நாட்டு மக்களுக்கு அவர் செய்துள்ள சிறந்த சேவை. இந்நூலைப்போன்றே, காற்றுக் கருவிகளைப் பற்றியும், நரம்புக் கருவிகளைப் பற்றியும் அவர் செய்துவரும் ஆய்வுகள் நூற்கள் வடிவில் வெளிவந்து தமிழிசைக் கருவிகளைப் பற்றிய அறிவுக் கருவூலமாக விளங்கவேண்டும் என வாழ்த்துகிறேன்.

இங்ஙனம்

7-12-1981 **தாமஸ் செல்லத்துரை சே.ச.,**

சென்னை-28. B.A., B.T., Dip (Mus.)

முன்னுரை

டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
அடையாறு, சென்னை - 600020.

ஓர் நாகரிகத்தின் தன்மையினை அம்மக்களால் போற்றி வளர்க்கப்படும் கலைகளைக் கொண்டு அளவிடும் போக்கு, பண்பாட்டு வரலாற்றில் சிறப்பிடம் பெறும். பண்பாட்டு வரலாற்றிற்கு உறுதுணையாக அமைவது மக்களின் புழங்குபொருள் சார்ந்த பண்பாட்டு வளர்ச்சி. அவற்றுள்ளும் நாகரிக வளர்ச்சியினைக் கணிக்கும் காரணிகளாக அவர்கள் போற்றிப் பாதுகாத்துவரும் கலைகள் அமைகின்றன. அக்கலைகளுள்ளும் கவின்கலைகள் மக்களுடைய மனத்தின் உணர்ச்சியைத் தூண்டி இன்பம் பயந்து அறிவினைத் துலங்கச் செய்யும் திறம்பெற்று விளங்குகின்றன. எனவே பண்பாட்டு வரலாற்றாசிரியர்களிடையே கவின்கலைகளின் வளர்ச்சியை நாகரிக வளர்ச்சியாகக் கணிக்கும் போக்குக் காணப் படுகின்றது.

மனிதனது உள்ளத்தைத் தன்வயமாக்கி இயக்கும் ஆற்றல் கலைகளுக்கு உண்டு. அவற்றுள்ளும் கவின்கலைகளை உள்ளம், கண், காது இவற்றால் முறையே உணர்ந்தும் கண்டும் கேட்டும் உவகை எய்துகிறோம். கவின்கலைகள் கட்டடக்கலை, சிற்பக் கலை, ஓவியக்கலை, இயற்கலை, இசைக்கலை, நாட்டியக்கலை என அறுவகைப்படும். இக்கவின்கலைகள் மனிதனுக்கு நிறை மனத்தை அளிக்கின்றன. இக்கலைகளுள் இசைக்கலை ஓரறிவு உயிர் முதல் ஆறறிவு உயிர்வரை அனைத்தையும் தன் வயப் படுத்தும் ஆற்றல்பெற்று விளங்குகின்றது. இசைகேட்டு மயங்கா உயிரினம் இல்லை என்பதை மகுடியின் இசையில் மயங்கும் பாம்பு முதற்கொண்டு இசைகேட்டுச் செழித்து வளரும் தாவரங் கள் வரையிலான செயல் கொண்டுணரலாம். இன்பத்திலும் துன்பத்திலும் உள்ளத்து உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் ஆற்றல் இசைக்கு உண்டு. மேலும் துன்பத்திற்கு ஆறுதலளிக்கும் நன்மருந் தாக இசை பயன்பட்டு வருவதும் கருதத்தக்கது.

செவிவழிப் புகுந்து இதய நாடிகளைத் தடவி உயிரினங்களை இசைய-பொருந்த வைக்கின்றபொழுது இனிய ஒலிகள் இசை என்ற பெயரைப் பெறுகின்றன. இவ்வொலிகள் செவியை மட்டும்

எட்டி உள்ளத்தைக் கவராது நின்றுவிடின் அவை ஓசை என அழைக்கப்படுமேயன்றி இசை என்று பெயர் பெறுவதில்லை. இசை என்பது இதயத்தைத் தொடுவதோடு அதனை ஈர்க்கவும் வல்லதாக அமையவேண்டும். இசை என்னும் சொல்இசைவிப்பது— தன்வயப்படுத்துவது எனப் பொருள்படும். இனிமையான ஒலி களின் சேர்க்கையால் பெறப்படுவது இசையாகும். இது உயிர்களின் உள்ளத்தை உருக்கும் தன்மை வாய்ந்தது; இனிமை மிக்கது; எழில் வாய்ந்தது. இசை மக்களுக்கு மகிழ்ச்சியூட்டும் தன்மையும் எழுச்சியூட்டும் வன்மையும் அமையப் பெற்றதாய் இருக்கின்றது. மனிதன் நாடு, மொழி, இனம், பண்பாடு ஆகிய நிலைகளில் வேறு பட்டிருப்பினும் அவனை உள்ளம்சார்ந்த ஒருமை நிலைக்குக் கொணரும் ஆற்றல் பிற கவின்கலைகளிலும் இசைக்கலைக்கே உரியது என்பது கருத்தில் கொள்ளத்தக்கது.

உலகின் பண்பட்ட மொழிகள் பலவற்றுள்ளும் தமிழ் மொழியினை அதன் பண்பு அடிப்படையில் பகுத்துப் பெயரிட்டு அழைக்கும் மரபு காணப்படுகின்றது. அது இயல், இசை, நாடகம் என மூன்றாக வகுக்கப்பட்டு 'முத்தமிழ்' எனப் பண்டைத் தமிழரால் போற்றி வளர்க்கப்பட்டது. சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பண்டைத்தமிழர் முத்தமிழுக்கும் உரிய இடத்தினை அளித்துப் போற்றிய தன்மையினை முச்சங்க நூல்களின் வகைப் பாட்டால் உணரலாம். தமிழரின் வாழ்வு இசையில் தொடங்கி இசையோடு முடிவதனைக் குழந்தையின் பிறப்பில் தாலாட்டுத் தொடங்கி முதியோரின் இறப்பு ஒப்பாரியில் முடிவதுகொண்டு அறியமுடிகின்றது. தமிழரின் வாழ்வின் ஒவ்வொரு வாழ்க்கை நிகழ்ச்சிகளிலும் இசையும் இன்பமும் நகமும் தசையும்போல இரண்டறக் கலந்து நிற்பதனைக் காணலாம்.

இசை, எழுத்துக்கு முன் தோன்றியதென்பதனை மொழி யியலாரும் ஒத்துக்கொண்டுள்ளனர். வாய்ப்பாட்டினின்று தோன்றிய இசை, காலப்போக்கில் அறிவு வளர்ச்சி முன்னேற்றத் தால் புதிய கருவிகளை உருவாக்கி இனிமை கண்டது. இக்கருவிகள் மக்களின் உளப்போக்கு, சூழல், இடம், காலம் ஆகிய காரணி களால் நாட்டுக்கு நாடு வேறுபட்டு விளங்குகின்றன. தமிழரின் இசை மரபு இந்திய இசை வளர்ச்சிக்குப் பெருந்தொண்டாற்றி யுள்ளது என்பதை இசைவல்லுநர் பலர் ஏற்றுக்கொண்டுள்ளனர். பண்டு ஏற்றம்பெற்றிருந்த தமிழிசை இடைக்காலத்தில் அரசியல் மற்றும் சமயச்சூழலால் பாதிக்கப்பட்டு இந்துஸ்தானி இசை

கர்நாடக இசை எனப் புதுப்பெயர்பெற்று விளங்கத் தொடங்கியது. சுதந்திரத்திற்குப் பின்னர் தமிழுணர்ச்சி மிக்க சிலர் இதுவரை வழக்கில் இருந்த 'கர்நாடக இசை' என்ற பெயரை நீக்கித் 'தமிழிசை' என்ற பெயரை வழக்கில் கொணர்ந்தனர்.

தமிழர் ஒலியுணர்வு மிக்கவர்களாக விளங்கினர் என்பதை அவர்கள் படைத்தளித்துச் சென்றுள்ள இலக்கண, இலக்கியங் களால் அறியமுடிகின்றது. தமிழில் காலத்தால் முற்பட்ட கிடைக்கும் இலக்கண இலக்கியமாகத் தொல்காப்பியமும் சங்க இலக்கியமும் விளங்குகின்றன. இலக்கியங்கள் பல தோன்றிய பின்னர் இலக்கணம் முகிழ்ப்பது மரபு என்ற நிலையில் தொல் காப்பியத்தை நோக்குவோமேயானால் தொல்காப்பியத்தில் காட்டப்பட்டிருக்கும் ஒலியுணர்வுகள் பழந்தமிழரின் செம்மாந்த சீரிய வாழ்க்கையினைத் தெளிவுபடுத்தும் நிலையினதாக அமை வதனை உணரமுடியும். தமிழ் எழுத்துக்களை ஒலியமைப்பு நிலையில் வல்லினம், மெல்லினம், இடையினம் எனப் பகுத்திருப் பதைச் சான்றாக்கலாம்

தொல்காப்பியம் இயற்றமிழுக்கு இலக்கணம் வகுத்துள்ள தெனினும் அதனுள் இசைத்தமிழும் நாடகத்தமிழும் விரவிக் கலந்து நிற்பதனைக் காணாமல் இருக்கமுடியாது. முத்தமிழ் என்ற வழக்கு ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்த நிலையினால் ஏற்பட்ட சொல்லாட்சியாகக் கருதத்தக்கதாக அமைவதும் நினைவில் கொள்ளத்தக்கது. மேலும் இயற்கலை, இசைக்கலை, நாடகக்கலை என்ற மூன்றும் தனித்தனியே இயங்குவதில்லை என்பதும் மூன்றும் கலந்த நிலையில் மக்களால் போற்றப்படு கின்றமையும் இக்கூற்றிற்குச் சான்றாக அமைகின்றது. தொல் காப்பியர், இயற்றமிழ் அமையவேண்டிய நிலையினை உலகியல் வழக்கு, நாடக வழக்கு என்பனவற்றிற்குப் பாலமமைத்துப் பாடல் சான்ற புலனெறி வழக்காகக் காட்டி இசை வகுத்தமைத்திருப்பது கொண்டு முத்தமிழும் விரவிய காட்சியினை ஓரளவு உய்த்துணர லாம். மேலும் கருப்பொருளை வகுத்துக் கூறுமிடத்து இசையின் பகுதிகளாகப் பறை, யாழ் ஆகியவை இடம்பெறுவதும் கவனிக்கத் தக்கது. இசைக்கருவிகளை இன்னின்ன காலங்களில் பயன்படுத்த வேண்டுமென்ற கொள்கை நிலவியதனைப் பறை மற்றும் யாழ் பற்றிப் பேசும் சங்கப் பாடல்களால் அறிகின்றோம்.

இசைத்தமிழுக்கு, இலக்கண நூல்கள் பல இருந்துள்ளன என்பதை நாம் சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார்

வாயிலாக அறிகிறோம். அகத்தியம், இசை நுணுக்கம், இந்திர காளியம், பஞ்ச பாரதீயம், பஞ்ச மரபு, பெருங்குருகு, பெருநாரை, தாளவகையோத்து, தாளசமுத்திரம், இசைத்தமிழ்ச் செய்யுட் கோவை ஆகியவை இசைத்தமிழ் நூல்களாக இருந்தன என்பது தெரியவருகின்றது. சிலப்பதிகாரத்திற்கு அடியார்க்கு நல்லார் எழுதிய உரை கிடைக்காமலிருப்பின் இவ்விசைநூற்களைப் பற்றி யாதும் தெரிந்திருக்க வாய்ப்பில்லாமல் போயிருக்கும். மேற் காட்டிய நூற்களில் பஞ்சமரபும், தாளசமுத்திரமும் அச்சிடப் பட்டுள்ளன.

இலக்கிய மரபில் ஐவகை நிலத்தாரும் ஐவகைப் பண்களை வழக்கில் கொண்டிருந்திருக்கின்றனர். இவ் ஆதிப் பண்களிலிருந்து படிப்படியாக முன்னேறிப் **பன்னிராண்டாயிரம்** பண்களைக் கண்டுள்ளனர் தமிழர் ஐவகை நிலத்தாரும் அவரவர்களின் நிலத் திற்குரிய பண்ணை மீட்டுவதற்குரிய சிறுபொழுதினையும் வரை யறுத்துள்ளனர். அவை முறையே குறிஞ்சிப்பண் பாடுவதற்குரிய காலம் யாமம் என்றும், முல்லைப்பண் பாடுவதற்குரிய காலம் மாலை என்றும், மருதப்பண் பாடுவதற்குரிய காலம் விடியல் என்றும், நெய்தற்பண் பாடுவதற்குரிய காலம் எற்பாடு எனவும், பாலைப்பண் பாடுவதற்குரிய காலம் நண்பகல் எனவும் பண்டைத் தமிழர் வகுத்துரைத்துள்ளனர். இவ்வாறு பகுதிப்படுத்திய மரபு இலக்கிய வழக்கில் சிறப்புற்றிருந்தது எனினும் உலகியலில் பிறவற்றையும் பாடியிருக்கலாம்.

தமிழர்கள் இசை வேறுபாட்டினைப் பழங்காலத்திலே அறிந் திருந்தனர் என்பதை அவர்கள் ஒவ்வொரு வகையினையும் வேறு படுத்திப் பெயரிட்டழைத்திருப்பது கொண்டறிய முடிகின்றது. தொல்காப்பியர் நான்கு வகைப் பாவிற்கும் ஓசையுணர்வடிப்படை யில் வேறுபடுத்திப் பெயரிட்டழைத்திருப்பது அவர்கால இசை யுணர்வினை அறிதற்கு வாய்ப்பளிக்கின்றது ஒவ்வொரு ஓசை யினையும் அதன் பண்பு விளங்கித் தோன்றும் நிலையில் பெயரிட்டு அழைத்திருப்பதனை உயிரினங்களின் ஒலி எழுப்பும் தன்மைகள் சங்கப்பாடல்களில் காட்சிப்படுத்தப் பட்டிருப்பது கொண்டறிய முடிகின்றது. ஒவ்வொரு வகைப்பாவினை இன்னின்ன ஓசை யுடைத்தாய்ப் பாடவேண்டுமென்ற வரையறை அவர்களின் நுண்மான் நுழைபுல அறிவுத்திறத்தினை வெளிப்படுத்தும்.

சங்கப் புலவர்கள், நிலத்தியல்பு விளங்கக் கருத்துப் புலத்தைக் காட்சிப்புலமாக்கக் கையாண்ட உத்தி முறைகளில் இசையுணர்வும்

பெரும்பங்கு வகிப்பதனை நாம் சங்கப்பாடல்கள் கொண்டறியலாம். குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த குறவர்கள் குறிஞ்சிப் பண்ணைப்பாடி மகிழ்ந்ததோடு அதற்கு மேலும் இனிமை சேர்க்கக் குறிஞ்சியாழினையும் தொண்டகப் பறையினையும் துணைக்கருவிகளாகக் கொண்டனர். முல்லை நிலத்தில் உறைந்த ஆயர்கள் முல்லைப்பண்ணைப் பாடி அதற்கு மெருகூட்ட முல்லையாழையும் ஏறுகோட்பறையினையும் இசைத்து இன்புற்றனர். மருத நிலத்தில் வாழ்ந்த உழவர்கள் மருதப்பண்ணைப் பாடி மருதயாழும் மணமுழவும் மீட்டிக் களிப்புற்றனர். நெய்தல் நிலத்தில் வாழ்ந்த பரதவர் நெய்தற்பண்ணைப் பாடி இன்புற்று விளரியாழும் மீன் கோட்பறையும் இசைத்து மகிழ்ந்தனர். பாலைநில எயினர் பாலைப்பண்ணைப் பாடி உவகையுற்றனர். இவர்கள் பாலையாழை மீட்டி நிரைகோட்பறையை முழக்கி மகிழ்ந்துள்ளனர்.

இசை வாழ்வினைத் தொழிலாகக்கொண்டு வாழ்ந்த பழந் தமிழ்மக்கள் குழுவினராகப் பாணர்,விறலியர், கூத்தர், பொருநர், கோடியர், வயிரியர் ஆகியோர் விளங்கக் காண்கிறோம். இவர்களுள் பாணர்கள் பண்டுதொட்டுப் பாடுவதையே தொழிலாகக் கொண்டு வாழ்ந்தவராவர் இவர்கள் தொழிலடிப்படையில் மூன்று பிரிவினராக இசைப்பாணர், யாழ்ப்பாணர், மண்டைப் பாணர் என வகுபட்டிருந்தனர். இசைப்பாணர் என்போர் வாய்ப் பாட்டில் சிறந்து விளங்கினர். யாழ்ப்பாணர் யாழை மீட்டிப் புரவலர்களை மகிழ்வித்து வாழ்ந்தோராவர். இவர்களில் சீறியாழ் மீட்டுவோர் சிறுபாணர் எனவும் பேரியாழ் மீட்டுவோர் பெரும் பாணர் எனவும் அழைக்கப்பட்டனர். இவ்வாறு இவர்கள் வேறு படுத்தி அழைக்கப்பட்டதற்குக் காரணமாக அமைந்தது அவர்கள் பயன்படுத்திய யாழின் நரம்புகளின் எண்ணிக்கை. சீறியாழ் ஏழு நரம்புகளையும் பேரியாழ் இருபத்தொரு நரம்புகளையும் கொண்டு விளங்கியது. இதனை நாம் பத்துப்பாட்டில் பாணாற்றுப்படை நூல்கள் கொண்டுணரலாம். மண்டைப் பாணர் என்போர் மண்டையோட்டில் இரந்துண்டு வாழ்க்கை நடத்தியவர் ஆவர். பாணர் மரபில் இசை வளர்த்த பிற்காலத்தவராக திருநீலகண்ட யாழ்ப்பாணர், திருப்பாணாழ்வார், பாணபத்திரர், மதங்கசூளாமணியார் முதலியோர் விளங்குகின்றனர். கேரளத்திலும் இலங்கையிலும் இம்மரபினர் பரவிய நிலையினை நாம் வரலாற்று நிலையில் ஆராய்வது பண்டைய தமிழ்க் குடியின் தொன்மையினையும் இன்றைய நிலையினையும் அறிவதற்கு வாய்ப்பளிக்கும்.

தமிழிலக்கியம் சமயங்களின் எழுச்சியால் வளமையுற்றிருக்கிறது என்பதை எளிதில் மறுத்தற்கியலாது. ஏனெனில் தமிழர் நடுவே தம் செல்வாக்கை நிலைநாட்ட அவர்களின் கொள்கை வழியில் சென்று தன்வயமாக்கிப் பின்னரே தங்களது கொள்கையினைச் செல்வாக்குப் பெறச் செய்துள்ளனர் சமயவாதிகள் என்பது வரலாற்று உண்மையாகும். அந்நிலையில் தமிழில் பக்தி இயக்கம் தமிழிசையை வளர்த்துள்ளது என்பதும் நினைவில் கொள்ளத்தக்கது. இதற்கு ஆழ்வார்களும் நாயன்மார்களும் தமது பக்திப் பாசுரங்களில் புதுப்புது வகையான பண்களால் இறையனுபவத்தை வெளியிட்டிருப்பது சான்றாக அமைகின்றது. சமணர்கள் இசையை வெறுத்தனர் என்றாலும் அவர்களின் கொள்கையினை நிலைநாட்டத் தமிழர் விரும்பும் நெறியில் சென்றே திசை மாற்றியுள்ள போக்கையும் காணமுடிகின்றது. பெருங்கதை, சீவகசிந்தாமணி போன்ற சமணசமயத் தமிழ்க் காப்பியங்களில் காப்பியத் தலைவர்களை இசையில் வல்லவர்களாகக் காட்டி வளர்த்துச் சென்று இறுதியில் அவர்கள் இல்லறத்தை வெறுத்துத் துறவறத்தை நாடிய நிலையினைத் தெளிவுறுத்திச் சென்றுள்ள போக்கைக் காண்கிறோம். இந்நிலை இசையை வெறுக்கும் கொள்கையினர் அதன் வளர்ச்சிக்கும் வழிகாட்டியுள்ள நிலைமையினைத் தெளிவுறுத்தும். மேலும் இப்போக்கு தமிழர்களின் இசையுணர்ச்சியை வெளிப்படுத்தும் பாங்கில் அமைந்திருப்பதும் கவனத்தில் கொள்ளத்தக்கது.

தனிநாயக அடிகள் உலகின் தொன்மையான மொழிகளை அதன் பண்படிப்படையில் கூறும்போது தமிழைப் பக்தியின் மொழி என்பார். தமிழிலக்கிய வரலாற்றில் பக்தி இயக்கம் பல முன்னேற்றங்களுக்கு வழியமைத்துக் கொடுத்திருந்ததைப் போன்றே இசை வளர்ச்சிக்கும் பெருந்தொண்டாற்றியுள்ளது. பக்திப் பாமாலைகளைப் பாடிய அடியார்கள் புதுப்புது மரபுகளைப் புதிய பண்களில் அமைத்து வெற்றிகண்டுள்ள நிலை, தமிழிசை வளர்ச்சிக்கு அடிகோலியுள்ளனர் என்பதைத் தெளிவுறுத்தும். அப்பர், மகேந்திரவர்மன் என்ற பல்லவ மன்னனைச் சமண நெறியினின்று சைவ நெறிக்குத் தழுவச் செய்ததுடன் அவன் மூலம் கலை வளர்ச்சிக்கும் தொண்டாற்றியுள்ளார். மகேந்திரன் புதிய இசையை உருவாக்கினான். இதனால் இவனுக்குச் சங்கீரணசாதி என்ற சிறப்புப்பெயர் உண்டானதென்பதை இசைக் கல்வெட்டாகிய குடுமியான்மலைக் கல்வெட்டு தெரிவிக்கின்றது. இது கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் வழங்கி வந்த இசை மரபுகளைத் தெரிவிக்கின்றது.

ஆழ்வார்களும் நாயன்மார்களும் தத்தம் பக்தி வெளியீட்டிற்குப் புதியபுதிய பண்களில் இசை வகுத்துப் பாடியமை இசை வளர்ச்சிக்கு அடிகோலியது. மேலும் அக்காலத்தில் விளங்கிய தமிழக அரசர்களான பல்லவ, சோழ, பாண்டிய அரசுகளின் ஆதரவு அமைந்தமையும் தமிழிசை சிறப்புறக் காரணமாயமைந்தது. முற்காலத்தில் 11991 ஆதி இசைகள் இருந்தன என்ற குறிப்பை அடியார்க்குநல்லார் சிலப்பதிகார உரையில் எழுதிச் செல்கிறார். தேவார ஆசிரியர் காலத்திற்கு முன் தமிழில் 103 பண்கள் இருந்துள்ளதெனினும் தேவாரத்தில் 23 பண்கள் மட்டுமே காணப்படுகின்றன அவற்றில் பல இன்று மறைந்துவிட்டன. தேவாரப் பண்களின் இசை மரபு கி பி 16-ஆம் நூற்றாண்டு வரை தமிழகத்தில் மங்காதிருந்து வந்தது தஞ்சையில் மராட்டியர் ஆட்சி ஏற்படத் தொடங்கிய காலம்முதல் பிறநாட்டு இசைக் கலப்பினாலும் பிறமொழிப் பாடல்களைத் தமிழ் இசைக் கலைஞர்கள் பாடும் வழக்கம் மிகுதிப்பட்டதாலும் தமிழ்ப்பண் உருவங்கள் சிதைந்தும் மறைந்தும் போயின. இக்காலகட்டத்தில் தான் தமிழிசை கர்நாடக இசை என்ற பெயரைப் பெற்றது என்பதும் கவனத்தில் கொள்ளத்தக்கது

வாய்ப்பாட்டிற்கு இனிமை யூட்டவும் இசைக்குச் செறிவூட்டவும் பலவகைக் கருவிகள் துணைக் கருவிகளாகப் பயன்பட்டன அக்கருவிகள் இசைக்கருவிகளாகும். இக்கருவிகள் தோற்கருவிகள் துளைக்கருவிகள் நரம்புக் கருவிகள், கஞ்சக் கருவிகள் என நான்கு வகைப்படும். மேலும் மிடற்றுக்கருவிகளையும் சேர்த்து ஐந்தாகக் கூறும் மரபுண்டு. இக்கருவிகளுள் தோற்கருவி முதலில் தோன்றியதா, துளைக்கருவி முதலில் தோன்றியதா என்பது பற்றி அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுண்டு. இவற்றில் எது முதலில் தோன்றியது என்பது குறித்து இன்னும் ஆராய்ச்சியாளர்கள் முடிவுக்கு வரவில்லை. எனினும் இன்று இந்தியாவில் ஐந்நூற்றிற்கும் மேற்பட்ட இசைக்கருவிகள் இருப்பதாகவும் அவற்றில் தமிழ்நாட்டிற்குரியனவாக ஏறக்குறைய இருநூற்றைம்பது இசைக்கருவிகள் தெரியவருவதும் தமிழரின் இசைமரபு தொன்மை வாய்ந்தது, பரந்த பரம்பரையைக் கொண்டது என்பதைத் தெளிவாக்குகின்றன.

தமிழரின் இசை மரபு பற்றி அறிய நாம் பொதுவாக இலக்கியங்களையும் கல்வெட்டுக்களையும் இன்றைத் தமிழின மக்களின் வாழ்க்கையில் பயன்பட்டுவரும் இசைக்கருவிகளையும் ஒத்து

நோக்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகின்றோம். இலக்கியச் சான்றுகள் வரலாற்றுக்குத் துணைச்சான்றாகவே அமைகின்ற. நிலையில் அதனை மட்டும் சான்றாகக் கொண்டு வரலாற்றை அமைப்பது பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. எனினும் முதன்மைச் சான்றுகள் கிடைக்காத நிலையில் துணைமைச் சான்றுகளை ஏற்றுக் கொள்வதில் தவறில்லை. இலக்கியத்தில் உயர்வுநவிற்சி இடம்பெறுவது இயல்பெனினும் அவை முழுதும் அவ்வாறு அமையும் எனக் கூறமுடியாது. இலக்கியத்தில் மரபு வழியாகப் பேசப்பட்டிருக்கும் செய்திகள் அவர்களின் பண்பட்ட வாழ்க்கை முறையினைத் தெரிவிப்பன என்பதையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். அந்நிலையில் நாம் தமிழிலக்கியங்களில் பேசப்பட்டிருக்கும் இசைபற்றிய செய்திகளைத் தொகுத்துப் பார்த்தும் அதனைப் பிற சான்றுகளோடு உறழ்ந்தும் உண்மையினை உலகிற்கு உணர்த்த வேண்டும்.

தமிழ் இலக்கியத்தில் பேசப்பட்டிருக்கும் இசைபற்றிய குறிப்புகளை நாம் பண், கருவி, பயன்பாடு என்ற முப்பரிமாண நோக்கில் காணப்புகுவோமேயானால் பல புதிய உண்மைகள் வெளிவரும் என்பதில் ஐயமில்லை. அவ்வாறு காணும்நிலை தமிழரிடையே வளராததால் தான் தமிழாராய்ச்சி கற்பனையின் பாற்பட்டதென்ற அவச்சொல்லுக்கு ஆட்பட வேண்டியதாயிற்று. அத்தன்மையினைப் போக்கும் நிலையில் உண்மையினைக் காணவேண்டும் அதனை உலகிற்கு உணர்த்த வேண்டும் என்ற நோக்கிலேயே உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தமிழ்ப் பண்பாடு பேணும் துறைகளில் ஆய்வினைத் தொடங்கியுள்ளது. அந்நிலையில் தமிழர் காலங்காலமாகப் போற்றி வந்திருக்கும் கலைச்செல்வங்களுள் ஒன்றான இசைக்கலை பற்றிய ஆய்வினைப் பலவாறாகப் பகுத்துச் செய்ய முனைந்திருக்கின்றது.

இசை பற்றிய ஆய்வு பரந்த நிலையினதாகையால் அவற்றைப் பண்டையோர் மரபில் பகுத்துக் காணவேண்டியுள்ளது. அந்நிலையில் முதலில் தமிழர் தோற்கருவிகள் என்ற நூல், வெளிவருகின்றது. இதைத் தொடர்ந்து துளைக்கருவிகள், நரம்புக் கருவிகள், கஞ்சக் கருவிகள் என்ற தலைப்புகளில் ஆய்வு விரிவுபட்டு இசைக்களஞ்சியம் என்ற தொகுப்பும் வெளிவரும். இவற்றில் தமிழருக்கே உரிமையுடைய செய்திகள் முதன்மையாகவும் ஏனைய பிறசெய்திகள் கருத்து விளக்கங்களுக்காகவும் இடம்பெற வேண்டுமென்பது எதிர்பார்க்கப்படுகின்றது. இந்நூலின் கண் தமிழர் அன்றுதொட்டு

இன்று வரை பயன்படுத்திக் கொண்டிருக்கின்ற 86 தோற்கருவிகளை இலக்கிய இலக்கணச் சான்றுகள், தொல்பொருளியல், மற்றும் பயன்பாட்டுச் சான்றுகள் அடிப்படையில் தொகுத்தும் வகுத்தும் அளிக்கப்பட்டிருக்கின்றது. பின்னிணைப்பில் இந்நூலின்கண் தரப்பட்டுள்ள தோற்கருவிகள் பற்றிய தமிழிலக்கியச் சான்றுகள் இலக்கிய வரிசையடிப்படையில் தொகுத்துரைக்கப் பட்டுள்ளன.

திரு. ஆளவந்தார் மிகுந்த முயற்சியோடு குறிப்பிட்ட காலமாகிய ஓராண்டிற்குள் 'தமிழர் தோற்கருவிகள்' என்ற இந்நூலைச் சிறப்பாகத் தொகுத்தும் வகுத்தும் முறைப்படுத்தியும் தந்துள்ளமை பாராட்டிப் போற்றத்தக்க ஒன்று. இதைத்தொடர்ந்து தமிழர் துளைக்கருவிகள், நரம்புக் கருவிகள், கஞ்சக் கருவிகள் எனத் தனித்தனி நூல்களாகச் செய்து தருவார் என நான் நம்புகிறேன். தமிழர் தோற்கருவிகள் பற்றிய முதல்நூலாக இது அமைகின்றது. இதனைக் கற்போர் இதில் விடுபட்டுள்ள செய்திகள் ஏதாவது இருந்தால் நிறுவனத்திற்குத் தெரிவித்தால் அவைகளையும் இணைத்து அடுத்த பதிப்பை வெளியிடுவோம். இந்நூல் பற்றிய திறனாய்வுக் கருத்துகள் வரவேற்கப்படுகின்றன.

இந்நிறுவனத்தின் ஆக்கப் பணிகள் அனைத்திற்கும் முழுநிலையில் ஊக்கம் தந்து ஆதரிக்கின்ற மாண்புமிகு கல்வியமைச்சர் செ. அரங்கநாயகம் அவர்கட்கு நிறுவனத்தின் சார்பில் அன்பான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உரிய காலத்துள் சிறப்பாக அச்சிட்டுத்தந்த நாவல் ஆர்ட் அச்சக உரிமையாளர் கவிஞர் நாரா. நாச்சியப்பன் அவர்கட்கும் நன்றியுடையேன்.

அன்பன்

ச. வே. சுப்பிரமணியன்

என்னுரை

''இசைத்தமிழ்க் கலைக்களஞ்சியம்'' தொகுத்து வெளியிட வேண்டும் என்ற திட்டத்தின் கீழ் அதற்குத் தேவையான செய்திகள் திரட்டும் பணி நடைபெற்று வருகிறது. அதன் தொடர்பாக முதலில் இசைக்கருவிகள் பற்றிய செய்திகள் திரட்டப்பெறுகின்றன. தோற்கருவிகள் பற்றிய செய்திகளைத் திரட்டி முதலில் இந்நூலை அளிக்கின்றோம். கிடைத்த செய்திகளின் தொகுப்பு ஆய்வுசெய்வோருக்கு ஓரளவு பயன்படும் என்ற நோக்கத்துடன் இந்நூல் வெளிவருகிறது. தோற்கருவிகளைப் பற்றி நம் பழந்தமிழ் நூல்களில்கிடைத்தஅனைத்துச்செய்திகளும்திரட்டித்தரப்பெற்றுள்ளன. அதே சமயம் இன்று நம்மிடையே வழக்கிலுள்ள ஒரு சில கருவிகளும் அவற்றின் விளக்கங்களும் கூட இந்நூலில் இடம்பெற்றுள்ளன. அக்கருவிகளும் நம் பழந்தமிழரின் இசைக்கருவிகளுடன் ஏதாவது ஒரு வகையில் தொடர்புடையனவாக இருக்குமோ என்று ஆய்வு செய்யப் பயன்படலாம் என்றே அந்த விளக்கங்களும் சேர்த்துத் தரப்பெற்றுள்ளன.

கிடைத்த காலம், பிற வாய்ப்பு இவற்றிற்கேற்பத் தொகுக்கப் பெற்ற இந்நூல் முழுமையான ஒரு நூல் எனக் கூற இயலாதாயினும் இசைக்கருவிகள் பற்றி, அதுவும் தோற்கருவிகள் பற்றி முதல் தொகுப்பு நூல் என இதைக் கொள்ளலாம். பிற கருவிகள் பற்றியும் தொகுத்து அளிக்க முயற்சி நடைபெறுகிறது

தோற்கருவிகள் பற்றி நூல்களில் கிடைத்த எல்லாத் தொடர்களும் பின்னிணைப்பாகக் கொடுக்கப் பெற்றுள்ளன. அவ்வாறே சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் அகராதியில் இடம்பெற்றுள்ள தோற்கருவிகள் பற்றிய சொற்களும் விளக்கங்களும் தொகுத்து இங்கே தரப்பெற்றுள்ளன. பேராசிரியர் P. சாம்பமூர்த்தி அவர்களுடைய இசை அகராதியில் (ஆங்கிலம்) இடம்பெற்றுள்ள தோற்கருவிகள் பற்றிய சொற்களும் விளக்கங்களும் ஈற்றில் இணைக்கப் பெற்றுள்ளன.

இவண்

ஆர். ஆளவந்தார்

நன்றியுரை

இந்நூல் வெளிவருவதற்குக் காரணமான பலரையும் நான் என்றும் மறக்க முடியாது. செய்திகள் திரட்டுவதற்குத் தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி சென்றபொழுது பேராசிரியர் திருப்பாம்புரம் திரு. சண்முகசுந்தரனார் அவர்களின் தொடர்பு ஏற்பட்டது. அத் தொடர்பு அன்று முதல் தொடந்து நின்று எல்லா வகையிலும் எனக்கு உதவியாக இருந்தது என்பதை அவசியம் கூற வேண்டும். பல சூழ்நிலையில் மனம் தளர்ந்தபோது தான் உதவியதோடு மட்டு மல்லாமல் பிறர் மூலமும் உதவினார் சங்கீத வித்வான் அருட்டிரு தாமஸ் செல்லத்துரை சே.ச.B.A.,B.T.,Dip. Mus (Ind) அவர்களை எனக்கு அறிமுகப்படுத்தி உதவினார். யான் சென்ற பொழுதெல் லாம் ஊக்கம் அளித்ததோடு நூலை முழுமையும் படிக்கக் கேட்டு அங்கங்கே தம் அரிய கருத்துக்களையும் கூறியதோடு அணிந்துரை யும் கொடுத்துதவிய துறவியை மறக்க முடியாது. எங்கள் நிறுவனத் தில் பணிபுரியும் அன்பர்கள் பேராசிரியர் திரு. ஆ. சிவலிங்கனார், திரு.மு.கோ. இராமன், டாக்டர் க.காந்தி ஆகியோர் செய்த உதவி யையும் கூறியே ஆக வேண்டும். திரு மர்ரே இராஜம் அவர்கள் கல் வெட்டுச் செய்திகளைத் திரட்டிக் கொள்ளுவதற்குப் பேருதவி புரிந்தார்.

'இசைக் கலைக் களஞ்சியம்' வெளியிட வேண்டும் என்ற திட் டத்தைத் தீட்டி, தேவையான செய்திகள் திரட்டும் பணியை எனக்கு அளித்து உதவியவர் எங்கள் நிறுவன இயக்குநர் பெருமதிப்பிற் குரிய டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் அவர்கள் என்பதை நான் கூறாமல் இருந்தால் செய்ந்நன்றி போற்றும் தமிழன் என்று என்னைக் கூறிக்கொள்ள முடியாது. என்னை அடிக்கடி ஊக்கி, அரிய கருத்துக்களைக் கூறி, தேவையான முறையில் இந்நூலை உருவாக்கிய பெருமை அவருக்கே உரியது என்றால் உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை. "என்னால் தன்னை வன்கவி பாடும் என் வைகுந்த நாதன்" என்ற பூர்வாசாரியர் கூறியதுபோல என்னால் இந்நூலை இயக்குநர் அவர்கள் முடித்தார் என்பதைத் தவிர இதில் நான் செய்தேன் என்று கூறிக் கொள்ளுவதற்கு ஒன்றுமில்லை. என்னால் இந்நூல் முடிந்தது என்று பிறர்கூற எனக்கொரு வாய்ப் பளித்து, இந்நூலை அப்பெரியவரே உருவாக்கினார் என்றுதான் கூறவேண்டும். அன்னாருக்கு என் நன்றியைப் பணிவன்புடன் கூறிக் கொள்ளுவதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்.

இவண்

ஆர். ஆளவந்தார்

பொருளடக்கம்

சுருக்க விளக்கம்

அகநா.—அகநானூறு
அமுத. - அமுதசாகரம்
இன்னா.—இன்னா நாற்பது
உத.குமா.—உதயணகுமார காவியம்
ஐங்குறு.—ஐங்குறுநூறு
ஐந்.ஐம்.—ஐந்திணை ஐம்பது
ஐந்.எழு.—ஐந்திணை எழுபது
கம்ப.—கம்பஇராமாயணம்
கல்.—கல்லாடம்
கலி.—கலித்தொகை
கலிங்.—கலிங்கத்துப்பரணி
களவழி.—களவழி நாற்பது
கார்.—கார் நாற்பது
குறள்.—திருக்குறள்
குறிஞ்சி.—குறிஞ்சிப்பாட்டு
குறுந்.—குறுந்தொகை
சிதம். செய்.—சிதம்பரசெய்யுட் கோவை
சிலம்பு.—சிலப்பதிகாரம்
சிறுபாண்.—சிறுபாணாற்றுப் படை
சீவக.—சீவகசிந்தாமணி
சூளா.—சூளாமணி
செ. ப. த. அ —சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதி
தி. மா. நூற்.—திணை மாலை நூற்றைம்பது
தி மொ.ஐம்.—திணை மொழி ஐம்பது
திருமுருகா.—திருமுருகாற்றுப் படை
தேவா.—தேவாரம்
தொல்.—தொல்காப்பியம்
நற்றி. – நற்றிணை
நவநீத.—நவநீதப் பாட்டியல்
நாக.காவி.—நாககுமார காவியம்
நாலடி.—நாலடியார்
நாலாயிர.—நாலாயிர திவ்வியப் பிரபந்தம்
நான்மணி.—நான்மணிக்கடிகை
நீல.—நீலகேசி
நெடுநல்—நெடுநல்வாடை
பட்டின.—பட்டினப்பாலை
பத்து.—பத்துப்பாட்டு
பதிற்று.—பதிற்றுப்பத்து
பரி.—பரிபாடல்
பழ.—பழமொழி
பன்னிரு. — பன்னிருபாட்டியல்
பார.—வில்லிபாரதம்
பு.வெ மா.—புறப்பொருள் வெண்பாமாலை
புறநா.—புறநானூறு
பெருங்.—பெருங்கதை
பெரும்பாண்.—பெரும்பாணாற்றுப்படை
பொருந.—பொருநராற்றுப் படை
மணிமே.—மணிமேகலை
மதுரைக்.—மதுரைக்காஞ்சி
மலைபடு.—மலைபடுகடாம்
முதுமொழி—முதுமொழிக் காஞ்சி
யசோ.—யசோதர காவியம்
யா.விருத்தி.—யாப்பருங்கல விருத்தி
வெண் பாட் —வெண்பாப் பாட்டியல்

தமிழரின் இசைக் கருவிகள்

தோற்கருவி

ஓர் அறிமுகம்

உலகிலுள்ள மொழிகளுள் தொன்மையான மொழி தமிழாகும். வளம்பெற்றுத் திகழ்ந்த மிகப்பழைய மொழிகள் பல. அவற்றுள் தமிழே பண்டையது, முதன்மையானது என்பது ஆராய்ச்சியாளர்கள் கண்ட உண்மை. நமக்குக் கிடைத்துள்ள தமிழ் நூல்களில் தொல்காப்பியமே மிகப்பழைய நூலாகும். தொல்காப்பியத்தில் **'என்ப'** என்றும், **'என்மனார் புலவர்'** என்றும் கூறப்படும் தொடர்களும் தமிழின் பழமையையும், அக்காலத்திலேயே அது வளம் பெற்றிருந்ததென்பதையும் புலப்படுத்துகின்றன. இனிமை என்று பொருள்படும் தமிழை ஆன்றோர்கள் இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என மூன்று வகையாகப் பிரித்துள்ளனர். இயலும் இசையும் நாடகமுமாகப் பொலிந்து விளங்கிய **'முத்தமிழ்'** நம் தமிழ்மொழி. உலகிலுள்ள மற்ற மொழிகள் பலவற்றுள்ளும் இலக்கியமும் இசையும் நாடகமும் இல்லாமல் இல்லை. ஆனால் மொழியை இந்த வகையில் பிரித்து வகைப் படுத்திய பெருமை நம் தமிழுக்கே, தமிழருக்கே உரிய தனித் தன்மையாகும். ஆகவே நம் அரும்பெரும் தமிழ் ஒன்றே முப் பெரும் பிரிவாய்ப் பிரிக்கப்பட்டு **'முத்தமிழ்'** எனத் திகழ்ந்து சிறந்து விளங்கியது.

இசை

இயற்றமிழின் இலக்கிய இலக்கணங்கள் அவற்றைக் கற்று அறிந்த அறிஞர்களையே இன்புறுத்தும். ஆனால் இசையோ கற்றவர், மற்றவர், விலங்குகள், பறவைகள் ஆய எல்லா உயிரினங்

களையும் இன்பம் அடையச் செய்யும். வண்டுகள் இசைபாட மலர்கள் மலர்ந்தன. இசைக்குப் பாம்பு அடங்கி ஆடியது. பரிக்கோல், குத்துக்கோல் கொண்டும் பாகனால் அடக்கமுடியாத மதம் பிடித்த யானைகள் இசைக்கு அடங்கி மண்டியிட்டன. தினைக்கதிரைத் தின்னப் பசியோடு வந்த யானை கூட, கொல்லையைக் காத்துநின்ற பெண்ணின் குறிஞ்சிப் பண்ணைக் கேட்டு, மயங்கி, பசியையும் மறந்து தினையை உண்ணாமல் நின்றது. கண்ணன் ஊதிய குழலிசைக்குப் பசுக்கள் வயப்பட்டன. இனிய இசையைக் கேட்டு அசுணமா இன்புற்று மயங்கி நிற்கும். இன்னாத இசையாகிய பறையொலியைக் கேட்டு மூர்ச்சையுற்றுக் கீழே விழுந்து விடும் என்ற செய்தியும் அசுணமா இசையின் வயப்படும் தன்மையையே உறுதிப்படுத்துகிறது. வண்டிமாடும், ஏற்றக்காளைகளும் கூட, தெம்மாங்கு, ஏற்றப்பாட்டு முதலிய இசைப்பாக்களைக் கேட்டு, தங்கள்வேலையை வருத்தம் இல்லாமல் செய்வதும் இசையின் பெருமைக்கு எடுத்துக்காட்டே. அன்னையின் தாலாட்டைக் கேட்டுக் குழந்தைகள் அழுகை ஓய்ந்து உறங்குகின்றன. ஆறலை கள்வர்களாகிய வன்மனத்தவர் கூட, பொருநரின் பாலைப் பண்ணைக்கேட்டு, மயங்கித் தம் வன்றொழிலை மறந்து நின்றனர். நோய்கண்டு வருந்துகின்றவர்களும் இசையால் நோய் நீங்கிக் குணம் அடைவர் என்ற செய்தியும் இசையின் பெருமையே.

''காட்டில் விலங்கறியும் கைக்குழந்தை தானறியும்
பாட்டின் சுவையதனைப் பாம்பறியும்''
(குயில்பாட்டு—பாரதியார்)

இறைவனே இசையின் வடிவமாய் இருப்பவன். இசையை விரும்புபவன். இசையைக் கேட்டு மகிழும் ஆர்வத்தால்தான் கம்பளர், அசுவதரர் என்ற இசைவல்ல கந்தருவர் இருவரைத் தன் காதுகளில் குழைகளாக வைத்துக் கொண்டுள்ளார். இசையை விரும்பும் இறைவனை ஆழ்வார்களும், நாயன்மார்களும் இசையாலேயே பாடிப் பேறு பெற்றுள்ளனர்.

பழங்காலத்திலேயே தமிழர்கள் முத்தமிழைச் சங்கங்கள் வைத்து ஆய்ந்தனர். இயற்றமிழ், நாடகத்தமிழ் இவற்றைப் போலவே இசைத்தமிழும் ஆராயப்பட்டது. இசைப் பயிற்சியும் சிறந்து விளங்கியது. இசைவாணர் பலர் இசைக்கலையை வளர்த்தனர். பல இசைநூல்களை யாத்தனர்.

தமிழிசையைப் பற்றி ஆராயும் யாரும் தொல்காப்பியத்தை மறப்பதில்லை. ஏனெனில் நமக்குக் கிடைத்துள்ள நூல்களில்

தொல்காப்பியம் மிகவும் தொன்மை வாய்ந்தது என்பது மட்டு மன்று. பொதுவாக இலக்கண நூல்தான் தொல்காப்பியம். இசை யின் இலக்கணத்தையும் நம்மால் அத்தொல்காப்பியத்தில் ஆய்ந்து காண முடிகிறது.

நிலத்தின் இயற்கைத் தன்மையை அடிப்படையாகக் கொண்டு நிலத்தை வகைப்படுத்திக் கூறுகின்றது. முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என நிலத்தை வகைப்படுத்துகிறது. அவ்வந் நிலங்களுக்கு முதற்பொருளையும், கருப்பொருளையும், உரிப்பொருளையும் கூறுகிறது.

ஒவ்வொரு வகைநிலத்துக்கும் இசையுண்டு எனக் கூறப்பெற் றுள்ளது. இசைக்கருவிகளில் முக்கியமாக யாழ், பறை போன்ற வையும் இடம்பெறுகின்றன. இசையைப் பற்றிய செய்திகளை விரி வாக அறிய இயலவில்லையாயினும் ஒவ்வொரு நிலத்திற்கும் ஒவ்வொரு வகையான பண் இருந்தது என்பது பாடல்கள் மூலம் அறியப்படுகின்றது. பண் என்ற சொல் இசையைக் குறிக்கவே தொல்காப்பியத்தில் ஆளப்பெறுகிறது. மேலும் இசைபாடும் இடங்கள் பண்ணை எனவும், பாடல்களை இசைக்கேற்ற வண்ணம் பாடும் அமைப்பைப் பண்ணத்தி எனவும் குறிப்பிடுகிறது. மேலும் இசை வல்லுநர்கள் பாணர் எனவும், பொருநர் எனவும் அழைக்கப் பெற்றனர். மகளிரில் இசைவல்லுநர் விறலி எனப்பெற்றனர்.

எட்டுத்தொகையில் ஒன்றாகிய பரிபாடல் இசைத்தமிழ்ப் பாடல்களைக் கொண்ட நூலேயாகும். ஒவ்வொரு பாடலிலும் அந்தந்தப் பாட்டுக்குரிய பண் இன்னதென்பது குறிக்கப் பெற் றுள்ளது.

சிலப்பதிகாரத்தில் பல இசைப் பாடல்களும் செய்திகளும் இடம் பெற்றுள்ளன. அவற்றிற்கு விளக்கம் கூறும் அடியார்க்கு நல்லார் பல இசைநூல்களிலிருந்து மேற்கோள் காட்டுகிறார். அவற்றுள் சில மேற்கோள் இன்ன நூலைச் சார்ந்தன என்று நம் மால் அறிய முடியவில்லை. அடியார்க்கு நல்லார் கூறும் பல இசை நூல்களின் ஆசிரியர் யார் என்பதும் அறிய முடியவில்லை.

அவர் இசைநூல்களாக பெருநாரை, பெருங்குருகு, பஞ்ச மரபு, தாளசமுத்திரம், பஞ்சபாரதீயம் சுத்தாநந்தப் பிரகாசம், இசைமரபு, பரத சேனாபதீயம் போன்றவற்றைக் கூறுகிறார். இவற்றுள் பஞ்சமரபு, தாளசமுத்திரம், பரதசேனாபதீயம் என்ற நூல்கள் மட்டுமே இப்போது வழக்கில் உள்ளன.

இறையனார் அகப்பொருளுரையில் முதுநாரை, முதுகுருகு, சிற்றிசை, பேரிசை முதலிய நூல்களின் பெயரைக் காண்கிறோம். மேற்கோள்கள் பல நூல்களிலிருந்து காட்டப்படுகின்றன. மேலும் நூலின் பெயரே தெரியாத மேற்கோள்களும் இடம் பெறுகின்றன. நூலில் அங்கங்கே காணப்பெறும் சில செய்திகள், உரையாசிரியர் கூறியுள்ள விளக்கங்கள், தற்போது வெளிவந்துள்ள ஒருசில பண்டைய இசைநூல்கள் தவிர, இசைபற்றிய பிற விவரங்களை அறிய முடியவில்லை. இசைத்தமிழ்க் கூறுகளாக ஆளத்தி, பண் வகை, வட்டப்பாலை, பன்னிருபாலை, இசைப்பா, இசையளவுபா, தேவபாணி முதலிய செய்திகளும் அவற்றைப் பற்றிய விளக்கங் களும் கூறப்பட்டுள்ளன.

இடைக்காலப் பக்தி இலக்கியங்கள் பெரும்பாலும் இசையுடன் பாடக்கூடியவைகளாகவே அமைந்துள்ளன. யாப்பியலிலும், பல வகைப் பாடல்கள், சந்த விருத்தம், தாண்டகம், வண்ணங்கள், சிந்துக்கள், கும்மி, ஆனந்தக்களிப்பு போன்றவை பிற்காலத்தில் எழுந்தன. இவை நம் பைந்தமிழின் இசையை வளர்த்து மொழிக்கு இசைகூட்டியன என்பதில் ஐயமில்லை.

இசைக்கருவிகள்

இசையை இசைப்பதற்கும், இசைக்கு மேலும் செறிவூட்டவும் பலவகைக் கருவிகள் துணைக்கருவிகளாகப் பயன்படுத்தப்பெற்றன. இசைக்குத் துணைக் கருவிகளாக இருந்த அக்கருவிகளே இசைக் கருவிகள்.

இசையின் பல புதியபாணிகள் தோன்றியதே இசைக்கருவி களால் தான் என்றால் மிகையாகாது. கோயில்களில் இறைவழி பாட்டில் முக்கியமாக இடம்பெறும் இசை, இசைக்கருவிகளின் துணையால் கேட்போரை வயப்படுத்தியுள்ளது.

அண்மைக்காலங்களில் பலஇசைக்கருவிகள் துணையுடன் நடைபெறும் இசைநிகழ்ச்சியும் (Orchestration) — மெல்லிசை நிகழ்ச்சிகளும் பல புதிய பாணிகளை உருவாக்கப் பயன்பட்டன என்பது இசைஅறிஞர்களின் கருத்து. அதாவது அந்தப் பல்வகை இசைக் கருவிகளே புதிய பல இசைப்பாணிகளை உருவாக்குவதில் இன்றியமையாத இடத்தைப் பெறுவதாகக் கூறுகின்றனர்.*

தொகுதிகளாக நின்று முழங்கப்பெறும் இவைபோன்ற இசைக் கருவிகளின் மூலம் கீர்த்தனையில் வரும் பல்லவிக்கு முன்னர் முன்னிசையென்றும், அனுபல்லவிக்கு முன்னும் பின்னும் இடையிசையென்றும், சரணத்தின் பின்னர் பின்னிசையென் றும் இசையமைத்து இசைப்பது இக்காலத்தில் நடைபெறும் புதுமுறைப் பாணியாகும்.
(இச்செய்தி புலிதர் செல்லதுரை சே. ச. அவர்களிடம் உரை யாடியபோது தெரிந்தது)

ஐந்நூறு இசைக்கருவிகளுக்கு மேலாக இந்தியாவில் இருக்கின் றனவாம். அவற்றில் நம் தமிழ்நாட்டில் நூல்களில் கூறப்படுவன, அவையொழிய வழக்கில் உள்ளன இவை எல்லாம் ஏறக்குறைய இருநூற்றைம்பது இசைக்கருவிகள் என்று அறிகிறோம்.

இத்தகைய இசைக்கருவிகளை இசைக்கும், தரத்திற்கும் ஏற்ப வகைப்படுத்தியது தமிழரின் தனிச்சிறப்பு என்றே கூறவேண்டும்.

தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி என நான்கு வகையாகவும், மிடற்றுக் கருவியும் சேர்த்து ஐந்து எனவும் வகைப்படுத்தியுள்ளார்கள். இக்கருவிகளைப் பற்றிய செய்திகளை யும் விளக்கங்களையும் பஞ்சமரபிலும் அதன் உரையிலும் பரக்கக் காணலாம். சிலப்பதிகாரத்தின் உரையாசிரியராகிய அடியார்க்கு நல்லார் இசைக்கருவிகளான யாழ், குழல், தண்ணுமை முதலிய கருவிகளின் விளக்கங்களைத் தெளிவாகக் கூறியுள்ளார்.

நரம்புக்கருவியாகிய யாழும், துளைக்கருவியாகிய குழலும் தனித்து இருந்து இசையை அளிக்கும் தனிப்பெருமை கொண் டவை.

''குழலினிது யாழினிது என்பர் தம்மக்கள்
மழலைச்சொற் கேளா தவர்''

என்றார் வள்ளுவப் பெருந்தகை.

தாளம்—லயம்—அதாவது ஒரு நிலையில் நம்மை நிலைப் படுத்தும் தன்மை. இசையைப் பாடும்பொழுது அந்த இசைக் குரிய காலப்பிரமாணங்களை நிர்ணயிப்பது தாளமேயாகும். அந்தத் தாளம் முறைமாறினால் இசைமாறும். அதாவது இசை கெடும். ஆகவே இசைக்குத் தாளம் முக்கியமானது. உயிர் என்றே இசையறிஞர்கள் கூறினர்.

பாடுவோர் தாளத்தைக் கையாற்போட்டுப் பாடினர்—பாடு கின்றனர். திருஞானசம்பந்தர் தம் பிள்ளைப்பருவத்தில் தேவாரப் பாக்களைக் கையால் ஒற்றித் தாளம்போட்டுப் பாடினார். அவ்வாறு பிஞ்சுக்கரங்களால் தாளம்போடப்போட அவை சிவந்து கன்றின. பிள்ளையின் கைகளைக் கண்டு இறைவன் பொற்றாளம் வழங்கியருளினார்.

இப்படியெல்லாம் தாமே தாளம்போட்டுப் பாடுவதைப் பிறர் கேட்டு அனுபவித்து இன்புறத் தாளம் ஆற்றிய பணியை ஆற்றப் பக்கவாத்தியங்களாக உதவியவையே இசைக்கருவிகள்.—

அவற்றுள் லயம் பற்றிய—தாளம் பற்றிய கருவிகளாகப் பெரும் பாலும் தோற்கருவிகளே அமைந்தன.

ஆகவே தான் தோற்கருவியாகிய தண்ணுமை என்னும் தாளக்கருவியை—அதன் ஓசையை உயிர் என்றார் கம்பர்.

''ஊனை ளைந்த வுடற்குயி ராமெனத்
தானை ளைந்து தழுவின தண்ணுமை''
(கம்ப-அயோ. பள்ளி. 811-16:2)

தோற்கருவிகள்

நாம் மேற்கண்டவாறு, இசையின் உயிராகக் கருதப்பட வேண்டியவை தோற்கருவிகள்.

தோல் போர்த்தப்பட்ட கருவிகள். தோற்கருவிகள். இசையின் உயிராகக் கருதப்படும் தோற்கருவிகள் பயன்பட்ட வகைகள் பல. அவற்றை நாம் ஆய்ந்து அறியும்பொழுது செய்தி அறிவிக்கவும் தோற் கருவிகள் பயன்பட்டன எனத்தெரிகிறது.

தந்திமூலம் செய்தி அனுப்பும் முறையைக் கண்டுபிடிப்பதற்குப் பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே மனிதன்—மிக விரைந்து ஓடும் மனிதனைவிட குதிரையைவிட—ஒலி இன்னும் மிக விரைவாகச் செல்லும் தன்மையது என்பதை அறிந்திருந்தான். பறை அல்லது டாம்—டாம் இவற்றில் அடிக்கும் குறியீடுகள் (Codes) மூலம் செய்திகளை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு அனுப்பினர். ஒவ்வொரு குறியீட்டைக் குறிக்கவும் ஒவ்வொரு வகையாக அடித்தனர். வெகுதொலைவில் உள்ள மலையுச்சியில் ஒருவன் இவ்வாறு பறையறைந்து செய்தி அறிவிப்பான். அடுத்த மலையிலுள்ளவன் அதைக்கேட்டு அவனுக்கு மறுமொழியாகக் குறியீட்டு முறையில் பறையறைவான். அடுத்த மலையிலுள்ளவனுக்கு அதேபோல் செய்தியைக் குறியீட்டின் மூலம் அனுப்புவான். இவ்வாறு தொடர்ந்து அனுப்பப்படும் செய்தி பல நூற்றுக்கணக்கான மைல்களுக்கு அப்பால் உள்ள மக்களைச் சென்றடைந்தது.[1]

1. Drums
Thousands of years before the telegraph was invented men knew that sound and sight travelled faster than the speediest runner or horse. Primitive tribes sent messages by beating out codes on drums or tom-toms. Each drum-beat had a particular meaning Far away on a hill top, the next drummer could hear the message, answer it and pass it on. A long chain of drummers might repeat the drum beat, until the message travelled hundreds of miles.
The New Book of knowledge -Vol 3 p. 437.

இசைக்கு உதவியாக இசை நிகழ்ச்சிகளில் இக்கருவிகள் பயன் பட்டன. கோயில்களில் இறைவழிபாடு நடைபெறும்பொழுது இயக்கப்படும் தோற்கருவிகளும் உண்டு. இறைவன் பவனிவரும் போதும் பயன்படுத்தப்பட்டன. ஒரு மாட்டின் முதுகில், யானையின் முதுகில், நாலுசக்கரவண்டியில் நகரா என்ற கருவியை வைத்து ஒரு பையன் அதை முழக்கிச் செல்லுவான். தொடர்ந்து இறைவன் பவனி வருவார். இறைவனை வழிபட வாசலில் நீர் தெளித்து, கோலம்போட்டுத் தேங்காய் பழத்துடன் தயாராய் இருக்கும் மக்கள் இந் நகரா ஒலியைக் கேட்டு, இறைவன் பவனி வருதலை அறிந்து வெளிவருவர். முறைப்படி வழிபட்டு அருள் பெறுவர்.

போர்ப்பறைகளாகவும் சில தோற்கருவிகள் பயன்பட்டன. போர் நிகழப்போவதை அறிவிக்க, வீரர்களைப் போரில் கலந்து கொள்ளுமாறு அழைத்து ஏவ, போர் நிறுத்தத்தை அறிவிக்க இப்படிப் பலவகைகளில் போர்க் கருவிகளாகப் பயன்படுத்தப் பட்டன.

செய்திகளை மக்களுக்கு அறிவிக்க இக்கருவிகள் பயன்படும் என்பதை முதலிலேயே கண்டோம். அரசாணையை மக்களுக்கு இவை அறிவிக்கும். வெள்ளம் பெருகிவருதல், அதைத்தடுக்க ஆட்கள் தேவை என்பன போன்ற செய்திகளை அறிவிக்கத் தோற் கருவிகள் பயன்பட்டன. சாவைப் பற்றிய செய்திகளும் அறிவிக்கப் படும். துக்கச் செய்தியென்று அறிவிக்க அடிக்கப்படும் ஒலியே ஒரு வகையாக இருக்கும். அவ்வகை ஒலியைக் கேட்ட மக்கள் செய்தி அறிந்து அந்த இல்லத்திற்குச் சென்று, துக்கத்தால் செயலற்று இருப்பவர்களை ஆறுதல் கூறித் தேற்றுவர். உடனிருந்து மற்ற வற்றையும் கவனித்து உதவுவர். இவையெல்லாம் நம் மக்களின் பண்பாட்டை அறிவிக்க உதவுவதை நாம் குறித்தே ஆகவேண்டும்.

மேலும் நாட்டுப்பாடல்கள் பாடும்பொழுதும் கருவிகள் பயன்பட்டுள்ளன. இவ்வாறெல்லாம் தோற்கருவிகள் பயன் பட்டுள்ளன.

இனி தோற்கருவிகளின் வளர்ச்சி, வகை இவற்றைப்பற்றி யெல்லாம் ஓரளவு பார்ப்போம்.

தோற்கருவிகள் இசைபாடுவோருக்குப் பக்க இசைக்கருவியாக இருந்து உதவிக் காலப்பிரமாணத்தைக் காத்து இசையை வளர்த்தன. செய்திகள் அறிவிக்கப் பயன்பட்டன. அரசர்களின் ஆணைகளாக இருக்கலாம். கொள்ளைக்காரர்கள் போன்றோர் களின் வருகையைத் தொலைதூரத்திலுள்ளோர்க்குக் காவலர்கள்

அறிவிக்கும் செய்திகளாக இருக்கலாம். போர் பற்றிய செய்தி களாக இருக்கலாம். பொதுவாக எல்லா வகையான அறிவிப்பு களுக்கும் பயன்பட்டன என்பன போன்ற செய்திகளை முன்னமேயே கண்டோம்.

இந்த வகையிலெல்லாம் பண்டை மக்களால் வளர்ச்சிபெற்ற, பயன்படுத்தப்பட்ட தோற்கருவிகளில் கையால் முழக்கப்படுபவை ஒருவகை. மிருதங்கம் போன்றவை. குச்சிகள் கொண்டு தாக்கி முழக்கப்படுபவை மற்றொருவகை. டமாரம் போன்றவை. கையாலும் குச்சிகள் கொண்டும் முழக்கப்படுபவை வேறொரு வகை. தவில்போன்றவை. தாமே முழங்குவன ஒருவகை. தமரு, உடுக்கை போன்றவை. ஒரு பக்கம் அடித்துத் தாக்குவதாலும், மறுபக்கம் தடவி வருடி உராய்வதாலும் முழங்குவன ஒருவகை. பெருமாள் மாடு வாத்தியம் போன்றவை.

இந்தப் பலவகையில் முழங்கப்படும் தோற்கருவிகளை ஒரு முகமுடைய கருவிகள் என்றும், (இரண்டோ, மூன்றோ, நான்கோ, ஐந்தோ என்று) பல முகமுடைய கருவிகள் என்றும் பிரித்துக் கூறலாம். உடுக்கை, பஞ்சமுக வாத்தியம் போன்று தோல் மட்டும் பரப்பப்பட்ட சமமான முகமுடைய (Plain face) கருவிகள் என்றும், இரண்டு மூன்று வளையங்களாக அடுக்கித் தோல் பரப்பப்பட்ட மையமுடைய வெவ்வேறு வகையான முகமுடைய (Complex faces) கருவிகள் என்றும் அவற்றையே வகைப் படுத்தலாம்.

மிருதங்கம், தவில், கஞ்சிரா போன்று இசைக் கச்சேரிகளுக்குப் பயன்படுபவையாகவும், நகரா, பேரிபோன்று இசைக்கச்சேரிகள் போன்றவற்றிற்குப் பயன்படாமல் வேறு பல வகைகளில் பயன்படு பவையாகவும் உள்ளன.

இசைக் கச்சேரிகளுக்குப் பயன்படும் கருவிகளிலும் கூட சில கருவிகள் இன்றியமையாதவையாகின்றன. அவையின்றி இசைக் கச்சேரிகள் நடைபெறவே முடி ாது. அவ்வாறின்றிக் கச்சேரி செய்வோரின் விருப்பத்திற்கேற்ப, கச்சேரியின் வகைக்கேற்பப் பயன்படும் கருவிகளும் உண்டு. அதாவது இக்கருவிகளின்றி இசைக் கச்சேரிகள் நடைபெறும். முன்வகைக் கருவிகள் பிரதம தாள வாத்தியக் கருவிகள் என்றும், பின்வகைக் கருவிகள் உபதாள வாத் தியக் கருவிகள் என்றும் அமைகின்றன.

மேலும் ஒரே குறிப்பிட்ட சுருதியில் மட்டுமே முழக்கப்படக் கூடியவை யென்றும், தம் தேவைக்கேற்ப, விருப்பத்திற்கேற்பச்

சுருதிகளை அமைத்துக் கொள்ளக்கூடிய முறையில் அமைந்தவை என்றும் கூட வகைப்படுத்திக் கூறலாம்.

நூல்களிலும், வழக்காற்றிலுமாக நமக்குக் கிடைத்த தோற் கருவிகள் பல. அவை:

அடக்கம், அந்தரி, அமுதகுண்டலி, அரிப்பறை, ஆகுளி, ஆமந்திரிகை, ஆவஞ்சி, உடல், உடுக்கை, உறுமி, எல்லரி, ஏறங் கோள், ஒருவாய்க் கோதை, கஞ்சிரா, கண் விடுதூம்பு, கணப்பறை, கண்டிகை, கரடிகை, கல்லல், கல்லலகு, கல்லவடத்திரள், கிணை, கிரிக்கட்டி, குடமுழா, குண்டலம், கும்மடி, கைத்திரி, கொட்டு, கோட்பறை, சகடை, சந்திரபிறை-சூரியபிறை, சந்திரவளையம், சல்லரி, சல்லிகை, சிறுபறை, சுத்தமத்தளம், செண்டா, டமாரம், தக்கை, தகுணித்தம், தட்டை, தடாரி, தண்டோல், தண்ணுமை, தபலா, தமருகம், தமுக்கு, தவண்டை, தவில், தாசரிதப்பட்டை, திமிலா, துடி, துடுமை, துத்திரி, துந்துபி, தூரியம், தொண்டகச் சிறுபறை, தோலக், நகரி, நிசாளம், படவம், படலிகை, பம்பை, பதலை, பறை, பாகம், பூமாடுவாத்தியம், பெரும்பறை, பெல்ஜியக் கண்ணாடி மத்தளம், பேரி, மகுளி, மத்தளம், மிருதங்கம், முரசு முருடு, முழவு, மேளம், மொந்தை, விரலேறு, ஜமலிகா என்பனவாகும்.

பஞ்சமரபு என்ற இசை நூலிலும் உரையிலுமாக மேற்கூறிய கருவிகளில் முப்பத்துநான்கு கருவிகள் கூறப்பெற்றுள்ளன. இவற்றின் வகை, முறைமை, இவற்றிற்குரிய தெய்வம் ஆகிய செய்திகளும் கூறப்பெற்றுள்ளன. இச்செய்திகள் எல்லாம் ஒரு தனி அட்டவணையின் மூலமும் கொடுக்கப்பட்டுள்ளன.

தோற்கருவிகளுள் முக்கியமாக 'முரசு' பயன்பட்டு வந்த செய்திகளைப் பண்டைய இலக்கியங்களில் பரக்கக் காணலாம். அரசனுடைய வெற்றிச் சின்னங்களில் முரசு ஒன்றாகும். கொடியை எப்படிப் பாதுகாப்பார்களோ அப்படியே முரசையும் பாதுகாப்பது வழக்கமாகும்.

அரண்மனையில் தெய்வ வழிபாட்டிற்குரிய பெருமை யுடன் தனியிடத்தே கட்டிலமைத்து முரசை வைத்து வழிபட்டு வந்தார்கள். இந்த முரசு வைத்து வழிபடும் கட்டில், முரசுகட்டில் எனப் பெற்றது. முரசு கட்டிலுக்கு எந்தவிதமான அவமரியாதை யும் செய்யக்கூடாது என்பதும், செய்பவர் கடுந்தண்டனைக்கு ஆளாவர் என்ற செய்தியும் புறநானூற்றில் மோசிகீரனார்

பாடலிலிருந்து தெரிய வருகிறது. அப்பாடலில் முரசின் பெருமையும் அதைக் காட்டிலும் தமிழ்ப்புலவர்பால் அரசன் தகடூர் எறிந்த பெருஞ்சேரலிரும்பொறை கொண்ட மதிப்பும் புலனாகின்றது.[1]

பகைநாட்டரசனை வென்று அவன் காவல் மரத்தை வெட்டி அதனின்றும் செய்த முரசை வெற்றி முரசென்று கூறுவார்கள். எட்டுவகையான மங்கலப் பொருள்களில் ஒன்றாகவும், தலைவனின் தசாங்கங்களில் ஒன்றாகவும் முரசு விளங்குகிறது. தருமபுத்திரனின் கொடியின் சின்னமே முரசுதான். இசைக் கருவிகளைக் கொடியில் சின்னமாகப் பண்டைக் காலத்திலமைப்பது வழக்கம் போலும். இராவணனின் கொடியின் சின்னம் வீணையாகும். வெற்றியை அறிவிக்க முரசு முழக்குவது மரபு.

''வெற்றி எட்டுத் திக்குமெட்டக் கொட்டு முரசே
வீரம் என்றும் வாழ்க என்று கொட்டு முரசே''

என முழங்குகிறார் பாரதியார்.

திருச்செந்தூரில் இறைவனுக்கு உச்சிக்காலப் பூசை முடிந்த பின்பே கட்டபொம்மன் உணவு கொள்வது வழக்கமாம். திருச்செந்தூரிலிருந்து பாஞ்சாலங்குறிச்சிவரை பல இடங்களில் மேடையமைத்து, முரசமைத்து, பூசை முடிந்தவுடன் முரசை அறையச் செய்து விரைவில் செய்தியறிந்தானாம். பிறகுதான் உணவு உண்டதாகக் கூறப்படுகிறது. திருமலை நாயக்கரும் ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து மதுரைக்கு இவ்வாறு முரச மண்டபம் அமைத்து ஸ்ரீவில்லிபுத்தூரில் ஆண்டாளுக்குப் பூசை முடிந்த பிறகு, செய்தியை அறிந்தே உணவு கொண்டதாகவும் தெரிகிறது. நகரா மண்டபம் என்பது இந்த வகையான மண்டபம் போலும்.

முரசு செய்யும் முறை, முரசு வழிபாடு, முரசு முழக்கல் போன்ற பலசெய்திகள்பழந்தமிழ் இலக்கியங்களில் கூறப்பெற்றவையெல்லாம் இந்நூலில் தொகுத்துக் கூறப்பெற்றுள்ளன. இதே போலப் பிற தோற்கருவிகளைப் பற்றியும் கிடைத்த அனைத்துச் செய்திகளும் தொகுத்துத் தரப்பெற்றுள்ளன. ஒரு கருவியின் பெயரே வேறுவேறு பெயராகப் பல இடங்களில் வழங்கப் பெறுகின்றன. அவையும் இந்நூலில் தெரிந்தவரை குறிப்பிடப் பெற்றுள்ளன.

---

1. புறம் 50.

ஊழிக் காலத்தில் இறைவன் ஆடிய தாண்டவத்தை ஊழிக் கூத்து என்பார்கள். அவ்விதம் கூத்தாடியபோது இறைவன் தம் கரத்துள்ள டமருகத்தை ஒலித்தாராம். அந்த டமருகத்திலிருந்துப் பிறந்த ஒலியிலிருந்தே பின்னர் உயிரினங்கள் தோன்றின என்று புராணங்கள் கூறும். இதிலிருந்து உலகம் தோன்றியபோதே உடுக்கையும் தோன்றியது என்பது தெரிகிறது. உடுக்கை என்பதே முதல் தோற்கருவியோ என்பது அறிஞர்கள் ஆய்வுக்குரியது.

இறைவன் தாண்டவம் புரிகையில் நந்திதேவர் மத்தளம் வாசித்ததாக ஒரு வழக்கும் உண்டு. ''குடமுழா நந்தீசனை வாசக னாக் கொண்டார்'' என்பது தேவாரம். எனவே இசைக்கும் நாட்டியத்துக்கும் மத்தளம் துணைக்கருவி என்பது புலனாகிறது.

உடுக்கை, மத்தளம் (குடமுழா) போன்ற பழங்கருவிகள் நாளடைவில் பலவகைத் தோற்கருவிகளாக வளர்ச்சியடைந்து மக்களின் வாழ்க்கையில் பலவகையில் தொடர்பு கொண்டுள்ளன என்று கூடக் கருத இடமுண்டு என்பதும் ஆய்வுக்குரியது.

தோற்கருவிகளுக்கு ஏற்ற தோல்

இசைக்கருவிகளின் ஒரு வகையே தோற்கருவிகள். தோற் கருவிகள் தோலால் மூடி, பரப்பி, போர்த்தப்பட்ட இசைக்கருவி களாகும். ஆகவேதான் இவை தோற்கருவிகள் எனப் பெயர் பெற்றன எனக் கூறுதல் பொருத்தமுடையதே.

பண்டைத் தமிழர்கள் தம் தோற்கருவிகளுக்கு எந்தெந்த வகையான தோலைப் பயன்படுத்தினர். எவ்வாறெல்லாம் அந்தத் தோலைக் கருவிகளின்மீது மூடிப் பரப்பிப் போர்த்தினர், அவ்வாறு போர்த்தி இறுக வலித்துக் கட்டுவதற்கு உபயோகித்த தோல் வார்கள் எத்தகையன என்ற செய்திகளை ஓரளவு தொகுத்துக் கூறுவதே இத்தலைப்பின் நோக்கமாகும்.

போர்க்கும் தோல்

ஆவினுடைய வஞ்சித்தோல் - உத்தமமான ஆவின் தோல். ஈனாத நாகான (இள) வயதிலே சூடுப ாதே செத்த பசுவின் தோல் - சீவியேறிடுவது (இத்தகைய தோல் வன்மை முழவுக்குக் கொள்ளப்பட்டது). மேற்கூறிய பசுவின் உதரத்தைப் போர்த்துக் கிடந்த தோல். (இத்தகைய தோல் மென்மை முழவுக்குக் கொள்ளப்பட்டது)[1] மான் தோலையும் பயன்படுத்தினர்.[2]

மாறுபாட்டை ஏற்றுக் கோறற்றொழிலையுடைய ஏற்றினது செவ்வித்தோலை மயிர் சீவாமல் போர்த்துவதுண்டு.[3]

---

1. பஞ்சமரபு-உரை.
2. மலைபடுகடாம்-321.
3. மதுரைக் - 732.

புலியைப் பொருது கொன்று நின்று சிலைத்துக் கோட்டு மண் கொண்ட ஏறு இறந்துழி அதன் உரிவையை மயிர் சீவாமல் போர்த்தினர்.[1]

புலியோடு போரிட்டுப் புறங்கொடாது வென்ற அழகிய காளையினது தோல் போர்த்தப்பட்டது.[2]

புதிய தோலாகத் தேர்ந்தெடுத்துப் போர்த்தினர். தொழில் மாட்சிமைப்பட்ட தோல் மயிர்சீவாது போர்க்கப்பட்டது.

மண்ணைக் குத்திக் கொள்வதால் வரிவரியாகக் கீறப்பட்ட மிக்ககூரிய கோட்டினையுடைய பெருமை பொருந்திய நல்ல ஆனேறு இரண்டினைத் தம்முள் போர்செய்ய விடுத்து, வெற்றி பெற்ற ஏற்றின் தோலை மயிர்சீவாது போர்த்தினர்.[3]

புலியை வென்ற ஏற்றுரியைப் போர்த்தினர்.

குருதிப் பலியூட்டிய வட்டமான மயிர் மறையும்படியாய்த் தோலைப் போர்த்துவர். கொல்லேற்றுரிவையின் மயிர்சீவாது அகத்தே அம்மயிர் மறையும்படியாகப் போர்த்தியிருந்தனர்.

சீவகசிந்தாமணியின் உரையில் நச்சினார்க்கினியர் தோற்கருவிக்கு இலக்கணமே கூறுகிறார்.

''தோற்பொலி முழவும் யாழும் துளைபயில் குழலுமேங்க'' (675-183) மார்ச்சனை முதலியவுமுளதாய்,

> ''இடக்கண் இளியாய் வலக்கண் குரலாய்
> நடப்பது தோலியற் கருவியாகும்''

என்ற ஓசையுமுடையதாய், கஞ்சத்தால் செய்தது என்பது தோன்றப் பொலிதல் கூறினார்.

கட்டும் வார்

தோற்கருவிகளின் மேல் போர்த்தப்படும் தோல் வார்களால் இறுக வலித்துக் கட்டப்பட்டது.

தோற்கருவியின் முகத்திலே வளையிட்டுத் தோல்போர்த்துத் தோலின் வாராலே இறுக வலித்துக் கட்டினர்.

---

1. சிலப். 5:88 அடியார்-உரை
2. அகம். 334.
3. புறம் 288.

ஈனாத நாகான வயதிலே சூடுபடாதே செத்த பசுவின் பக்கத் துத்தோலை வாராகக் கொண்டனர்.

திண்ணிய வாராலே இறுகவலித்துக் கட்டும்பொழுது தோற் கருவிகளின் அடிக்கும் இடமாகிய கண்களிலே தேவையான சுருதி அமைக்கப்பட்டது.

துடி என்னும் தோற்கருவியின் வார் செறிந்தும் நெகிழ்ந்தும் அமைந்திருக்கும்.

வார்கள் துண்டுகளாகப் பகுக்கப்பட்டு, அத்தகைய துண்டான வார்களால் இறுக வலித்துக் கட்டினர்.

வார் அறுப்புண்டு சீர்குலைந்து கிடந்த தெளிந்த கண்ணை யுடைய மாக்கிணையைப் புது வார் கொண்டு விசித்துக்கட்டி, இசைக்கேற்பக் கண் அமைத்தனர். அதற்கேற்ப புதிய வலிய தோலைப் போர்த்தினர். அளவில்லாத மாலைபோன்ற நெடிய வார்களால் வலித்துக் கட்டினர்.

வார் குற்றமற்றதாக இருக்கவேண்டும். இறுக வலித்துக்கட்டு வதற்கேற்ப நீண்டிருக்கவேண்டும். ஒருசில தோற்கருவிகள் சிறிய வார் கொண்டும் பிணிக்கப்பட்டன

வாரால் கட்டப்படாமல் நுண்ணிய நூல்களாலும் கட்டப்படு வதுண்டு- நுண்ணூற் சிரந்தை-மேற்கோள்.

தோலைப் போர்த்தியமுறை

தோற்கருவிகளின் முகத்திலே-ஒரு முகத்திலோ அல்லது இரண்டு முகத்திலுமோ தோல் போர்த்துவர். அவ்வாறு போர்த்தும்பொழுது முகத்திலே வளையிட்டுப் போர்த்தி வாராலே வலித்துக்கட்டுவர்.

கருவியின் வாயில் தோலை மடித்துப் போர்த்துவர்.

திண்ணிய வாராலே இறுக வலித்துக்கட்டித் தோல் போர்த்தும் பொழுது வாயில்—கண்ணில்—அடிக்கும் இடத்தில்—சுருதிகளை அமைப்பர்.

அவ்வாறு கட்டும்பொழுது தோலில் மார்ச்சனை செறிந்து அமையும்.

தோற்கருவிகளுக்கு ஏற்ற மரங்கள்

தோற்கருவிகளின் பிண்டமாகிய உடல் பகுதியை இவ்வகை மரங்களைக் கொண்டுதான் செய்யவேண்டும் என்றும் வரையறுத் தனர் நம் முன்னோர்.

கருங்காலி, செங்காலி, வேம்பு, பலா, கஞ்சம் (உலோகம்), குரவம், மண் ஆகிய இவை முழவுகள் செய்வதற்குத் தகுதி வாய்ந்தவை (இவற்றுள் கஞ்சம் என்ற உலோகத்தையும் மண்ணையும் சேர்த்துக் கூறியுள்ளனர்.)[1]

மேற்கூறியவைகளில்,

> கஞ்சத்தால் செய்யும் கருவிகள் உத்தமமானவை.
> மரத்தால் செய்யும் கருவிகள் மத்திமமானவை.
> மண்ணால் செய்யும் கருவிகள் அதமமானவை.

இம்மரங்கள் வடுப்படாமல், பொத்துப்படாமல், சாவாமல், மூவாமல், இளமையின்றி நடு வயதினவாய் உயர்ந்த சமதளமான நிலத்துளவான மரங்களே முழவுகள் செய்யத்தகுந்தவை.*

---

* அம்மரங்களும் கோயிலைச் சேர்ந்த இடத்தில் வளர்ந்த மரங் களாயின் மிகச்சிறந்தனவாம். கோயிலில் இசைக்கப்படும் இறைவழி பாட்டு இசைகளையெல்லாம் கேட்டு வளர்ந்த மரங்களாதலின் அவ் விசைச் சிறப்பு அவற்றில் அமைந்திருக்கும் என்பது அறிஞர் கொள்கை. அண்மையில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இசைத்தட்டுகளை இசைத்து, அந்த இசையைக் கேட்கச் செய் வதின் மூலம் மரங்களும் பயிர்களும் மகிழ்ந்து வளர்கின்றன என்ற கொள்கை நிறுவப்பட்டதை இங்கு நினைவு கூரலாம்.


1. பஞ்சமரபு - பிண்டமரபு. பஞ்சமரபில் உள்ளபடி கஞ்சமும் மண்ணும் இங்கு எழுதப்பட்டன.

இவற்றுள்,


கஞ்சத்தால் செய்வது குமுழவம்
கருங்காலியால் செய்வது இடக்கை
செங்காலியால் செய்வது சல்லி
வேம்பாற் செய்வது மத்தளம்
பலாவாற் செய்வது கரடிகை
குரவாற் செய்வது பேரிகை.

சல்லி, இடக்கை ஒழிந்த மற்ற கருவிகளெல்லாம் இவை ஒன்றும் பெறாதகாலத்து மண்ணாற் செய்வது உத்தமம்.

மேற்கூறிய கருவிகளொழிந்த மற்றவற்றிற்கு வரையறையில்லை. மேலும் இம்மரங்களைத்தவிர வேறொரு மரம் பெறாவெனக் கொள்க.




இடக்கை



உடுக்கை



ஒருகட்பறை



புஷ்கரம் - (மும்முகப்பறை)

நாம் அறிவன

பதஞ்சலி, வியாக்கிரபாதர் ஆகிய முனிவர்களுக்காக இறைவன் நடனம் ஆடியபோது முழக்கப்பட்ட இசைக்கருவிகள் பலவற்றுள் தோற்கருவிகள் சிலவும் இடம்பெறுகின்றன. அந்தத் தோற்கருவிகளின் பெயர், அமைப்பு, அவை முழக்கப்பட்ட விதம் போன்ற செய்திகளையெல்லாம் நாம் அறிகிறோம். இறைவன் நடனமாடிய அந்தச் சமயத்தில் வாணாசுரன் தன் ஆயிரங் கைகளாலும் இசைக்கருவிகளை முழக்கினான். புண்ணியம்மிக்க மந்திரியாகிய வியாழனுக்குரிய பூசைநாளிலே கைத்திரி—என்ற தோற்கருவியும் முழக்கப்பட்டது.[1]

போட்டிகள் பலவகை. அவற்றுள் இசைப்போட்டியும் ஒன்று. அதிலும் தோற்கருவிஇசையில் போட்டி நடைபெறுகிறது. போட்டியில் வெற்றிபெற்றவர் பெறும்பரிசு—மணமகள், சுயம் வரமே இம்முறையில் நடந்துள்ளது—தென்மதுரை மன்னன் மேகவாகனன் மனைவி இலக்குமி. மகள் சிரீமதி. அவள் நடன மாடும்பொழுது தன்னை மிருதங்க வாத்தியத்தால் யாவனொரு வன் கூர்ந்து வாசித்து வெற்றியடைவானோ அவனே தனக்குரிய நாயகனாவான் என வஞ்சினம் செய்தாள்.[2]

தோற்கருவிகளுள் உறையும் தெய்வத்திற்கு வழிபாடு நடத் தினர். குருதிப்பலியிட்டு நடத்தினர். தமது பசுந்தலையை அரிந்து

---

1. கல்லாடம்.
2. நாககுமார காவியம் - நான்காம் சருக்கம் - 132-31.

வைத்து வழிபட்டனர். கிணைக்கண்ணுறையும் தெய்வத்திற்கு வழிபாடு ஆற்றக்கருதிய வழி பெறற்குரிய உணவைப் பெறுவது தாழ்க்குமெனக்கருதி அத்தெய்வத்தை வழிபடாது போருக்குப் புறப்பட்டனர்.[1] பலியிடும்போது பலியாகிய ஊனின் (பலியிடுங் குருதி) சுவையை ஒலிக்கின்ற பறைகள் அறியா. ஆயினும் வேந்தனுக்கு வெற்றி வேண்டிப் பலியிட்டனர்.[2] வேந்தன் கொற்றங் கொள்க எனப் பேசும்படி தமது பசுந்தலையை அரிந்து ஒப்பித்துப் பீடிகையிலே வைத்த அப்பொழுதே அக்குறையுடல்கள் தமக்கு வாயின்மையின், தத்தந்தோளிற் பூண்ட மயிர்க்கண் முரசின் வாயால் ''உயிர்க்கடன் தந்தோம் கொண்மின்'' என நின்று பலியூட்டின.[3]

நாட்டின்போர் என்றால் வீரர் விரைந்துசென்று போர்புரிந்து நாட்டைக் காப்பது இயல்பு. அவ்வாறு போர் நிகழ்வதை வீரர்களுக்கு அறிவித்து அழைக்கப் போர்ப்பறைகள் முழங்கின. மன்றின்கண் தூங்கும் முழவின்மேல் காற்றுப்பட்டு, முழவின்கண்ணிலிருந்து எழுந்த ஒலியைக்கேட்டு, அது போர்ப்பறை என்று மகிழ்ந்த தலைவன் உண்டு.[4] வள்ளுவன் யானையின் மேல்இருந்து, அரண்புறத்தே நின்று பொரும்பகைவர் பொருட்டுப் போருக்குச் செல்லப் பூக்கொள்ளுமாறு தண்ணுமையை ஒலித்து ஏவினான். இவ்வொலியைக் கேட்டதுணையானே வீரர் விரைந்து சென்று போர்ப்பூவைப் பெற்றனர். அவ்வாறு அந்தக் காஞ்சிப்பூவைப்பெறுமாறுவீரரைப்பணித்தது 'ஏவல்தண்ணுமை.[5] வீரர்கள் தம் ஆண்மைக்கு அறிகுறியாகப் பொற்பூப்பெறுமாறு தண்ணுமை ஒலித்தது. (பூக்கோள்).[6]

ஆக்களைக் கவரப் பறையொலிப்பதுண்டு. எயினமறவர் ஆக்களைக் கவர, அவ்வாக்களினூடே நிற்கும் ஏறுகளைப் பற்றிக் கட்டுதல் பொருட்டுத் தண்ணுமையை முழக்குவர்.[7] கரந்தையாரின் ஆனிரைகளைக் கவர்ந்து கொள்ளும் போரில் துடி முழங்கும்.[8]

---

1. புறம் 399.
2. இன்னிலை - இன்பப்பால் 28.
3. சிலப். இந்திரவிழவூரெடுத்த காதை 88. அடியார்க்கு நல்லார் உரை.
4. புறம் 89.
5. புறம் 293.
6. அகம் 174.
7. அகம் 63.
8. அகம் 372

ஆயர் பெண்ணை மணக்க ஏறு தழுவுவர். அங்கே நிறுத்தப் படும் ஏறுகள் பறை மிக்கொலிப்பதால் வலி குறையாத ஆயர் கோடற்றொழிலுக்கு எதிரே நிற்கும்.[1] ஆயர் தம்குல வழக்கப்படி ஒரு பெண்ணை மணக்கும் பொருட்டு காளையைத் தழுவும்போது பறை கொட்டுவர்—அது ஏறு கோட்பறை.[2]

செய்திகள் அறிவிக்க முரசறைதல் மரபு. அரசுச் செய்திகளை அறிவிக்கும் வள்ளுவ முதுமகன் ஒரு சிறப்புநிலை பெற்றவனாக நாட்டில் இருந்தான். தெய்வங்களை வணங்கி, சிறப்புமிக்க பெருநாட்களுக்கு மட்டுமே பறையறையும் சிறப்புப் பெற்றவன்.

''பெரும்பணைக் கொட்டி லுளரும் பலியோச்சி
முற்றவைகாட்டிக் கொற்றவை பழிச்சித்
திருநாள் படைநாள் கடி,நாள் என்றிப்
பெருநாட் கல்லது பிறநாட்கறையாச்
செல்வச்சேனை வள்ளுவ முதுமகன்''[3]

அவன்.

ஆற்றிலோ, வாய்க்காலிலோ புனல் பரந்தது என்றால் அச் செய்தி உடனே பறையடித்து அறிவிக்கப்பட்டது. அவ்வாறு புனல் பரந்ததால் உடைந்த கரையை அடைக்க ஆட்களை அழைக்கவும் பறையடித்து அறிவித்தனர். அவ்வாறு ஆட்களை அழைத்துக் கரையை அடைத்துக்காத்தனர்.

கால்வாய்களைக் காத்துநின்ற உழவர்கள் வெள்ளம் வந்ததும் அதைப் பறையறைந்து தெரிவித்தனர்.[4] இள நெல்லின் கண்ணும், அரிந்துவைத்த நெற்கதிர்களிடத்தும் ஒருங்கே புனல் பரந்தது என்று துடியை முழக்கிப் புனல் பரந்த செய்தியை அறிவித்தனர்.[5] புதுப்புனல் மிக்குக் கரையை யுடைத்துப் பெருகிவருங்கால் உடைமடையைக் கட்டுதற்குப் பறையையறைந்து, கடையரைத் தருவித்துத் தொகுத்தனர்.[6] கரை காப்போர் தம் காவற்பறையை முழக்கிக் கரையை அடைக்க ஆளேறுமாறு ஏவினர்.[7]

---

1. கலி-முல்லை 109.
2. சூளாமணி-நாட்டுச்சருக்கம் 14.
3. பெருங்கதை-இலாவாண காண்டம்-கடிக்கம்பலை.
4. இராமா. பால. ஆற்று. 30-18.
5. பரிபாடல் 7.
6. பதிற்-22. மூன்றாம் பத்து.
7. பரிபாடல் 6.

மதம்கொண்டு நிறையழிந்து, பாகர் செயலைக் கழிந்து யானை வருமானால், அது தெருவில் செல்லும். தானே கட்டுக்கடங்காமல் செல்லும்போதோ அல்லது அந்த அடங்காத யானையை நீர்த்துறைக்கு அழைத்துச் செல்லும்போதோ முன்னே பறையறைந்து செல்வர். அவ்வாறு பறையறைய வேண்டுமென்பது மன்னனின் ஆணை.[1] பேய்பிடித்தாடுவோரின் பின்னும் பறைகொட்டிச் செல்லுவார்கள்.[2]

தன் வெற்றியை அரசன் முரசறைந்து அறிவித்தான். பகைவர் பற்றியிருந்த தன் நாட்டை மீண்டும் கைக்கொண்டால் அதை அறிவிக்கவும் பறை விடுதல் மரபு.[3]

தான் அளிக்கும் கொடையைப் பறையறைந்து, மக்களுக்கு அறிவித்தல் உண்டு. அதுவே கொடை முரசு.

இடிபடு முரசிற் சாற்றி யேற்ப வராசைதீரச்
சுடர்விடு மணியின் மாரி பொன்னொடு சொரிய வேவி[4]

அரசவையில் வாதம் நடைபெறுவதை மன்னன் காண விரும்புவான். அதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும். இச்செய்தியெல்லாம்கூட முரசறைந்து அறிவிக்கப்பட்டது.

மேற்கண்டவாறெல்லாம் செய்திகளை அறிவிக்கும்பொழுது[5] ஒரு மரபுமுறை பின்பற்றப்பட்டிருந்து வந்ததையும் நாம் அறிகிறோம்.

முதுகுடிப் பிறந்தோனாகிய, செல்வச் சேனை வள்ளுவ முதுமகன், வீரர், தேர், குதிரை, யானை இவ்வளவும் சூழ்ந்துவர, மக்கள்பால் பசியும் நோயும் பகையும் நீங்கி, நாட்டிலே மழையும் வளமும் பெருகுக என்று வாழ்த்தி முரசறைந்து அறிவித்தான்.

களிறுஞ் சூழ்தரக் கண் முரசியம்பி
பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி
அணிவிழா அறைந்தனன் அகநகர் மருங்கென்[6]

---

1. சிலப். மதுரை. அடைக்கலக் காதை 46 & கலித். 56.
2. பெருங். விழாக். 246.
3. சீவக. 218 & 2372. & பெருங். மகத. பறைவிட்ட 220.
4. சூளாமணி-அரசியற் சருக்கம்-1108-282.
5. பெருங்-உஞ்சை-சாங்கியத்தாயுரை.
6. மணிமேகலை.விழாவறை காதை.

பகைவரால் பாதுகாக்கப்படும் அரணைக் கைப்பற்றும் பொழுது, அந்தப் பகைவரின் முரசையும் கைப்பற்றிக் கொள் வார்கள்.[1]

அரண்மனைக் காவலர்கள் மாலை நேரத்தில் முரசை முழக் கினர். அச்செயல், காலத்தை மக்களுக்கு அறியவைப்பதற்காக இருந்திருக்கலாம். இது மாலை முரசு.[2]

திருமண காலங்களில் தாளம் தவறாமல் தண்ணுமை முழக்கப் பட்டுள்ளது.[3] மேலும் மணவிழாக்களில் இசைக் கருவிகள் பல முழங்கின.[4]

ஆரியக் கூத்தர் கழையிற் கட்டிய கயிற்றின்மேல் நின்று ஆடினர். அப்பொழுது பறை கொட்டப்பட்டது.[5] தெருவில் ஆடவர்கள் மகளிரொடு கலந்து குரவைக் கூத்தாடினர். அப்பொழுது தொண்டகப்பறை கொட்டப்பட்டது.[6]

துயரச் சூழ்நிலையில் மங்கல வாத்தியங்கள் ஒலிப்பதில்லை.[7] இறந்தவர் வீட்டுக்குப்போய்ப் பறையடிப்போர் ஒருமுறை பறை கொட்டுவர். சிறிதுபொழுது நிறுத்தி மீண்டும் அச்சாவு மேளத் தைக் கொட்டுவர். ஒருவேளை இறந்த அந்தச் செய்தியை அறி விக்க இம்முறையைக் கையாண்டிருப்பார்கள்.[8]

பாலைநிலத்திற் செல்லும் வணிகர் கூட்டத்தை எதிர்த்து அவரது பொருளைக் கைக்கொள்ளல் ஆறலைகள்வரின் இயல்பு. அவ்வமயம் தண்ணுமையை இயக்குவர். அவ்வொலி அவ்வழிச் செல்லுவோருக்கு அச்சந்தரும்.[9]

சேம்பையும் மஞ்சளையும் விதைத்து அவை வளர்ந்த பின்பு அக்கிழங்குகளைப் பன்றி அகழ்ந்து தின்று சேதம் விளைக்காமல் காவல் காப்போர் பறை கொட்டுவர். பறையொலி காவலுக்கு உதவும். பன்றிக்காகக் கொட்டப்படும் அந்தப்பறை பன்றிப்

1. நற். 39.
2. அகம். 24.
3. கலி. முல்லை. 102-34.
4. அகம் 136.
5. குறுந். 7.
6. அகம்
7. இராமா. அயோ. ஆறுசெல் 971-33.
8. நாலடி-அறம்-யாக்கை நிலையாமை 24.
9. குறுந். 390

பறை.[1] பொதுவாக இரவில் விலங்குகள் அணுகித் தொல்லை தராமல் இருக்கும் பொருட்டுத் தொண்டகப் பறையைக் கொட்டுவர்.[2]

விடிகின்ற கிரணங்களையுடைய வெள்ளி எழுந்த செறிந்த இருளையுடைய விடியற்காலத்தில் பொருநன் வள்ளல்களாகிய வேளாளரின் வாயிலில் நின்று தடாரிப் பறையை முழக்கினான்.[3] வெள்ளிய நெற்கதிரை அரியும்பொழுது உழவர்க்குப் பின்பக் கத்தே தண்ணுமை முழங்கியது.[4]

யாழிசையைக் கேட்டு இன்புற்று மயங்கி நிற்கும் அசுண மாவை வஞ்சித்துப் பறைகொட்டித் துன்புறுத்தியுள்ள செய்தியும் நமக்குக் கிடைக்கிறது.[5]

பராமரிப்பு இன்றேல் இசைக்கருவிகள் கெடும்[6]

வெற்றி முரசம் வெள்ளிய துகிற் சேக்கைக்கண்ணே வைக்கப் பட்டுப் பராமரிக்கப்பட்டது.[7]

கொடிகளில் இசைக்கருவியைச் சின்னமாகக் கொண்டிருந் தனர். தருமனின் கொடி முரசக் கொடி.[8]

முரசு கண் கிழிதலும், கொடியற்று விழுதலும் தீய நிமித்தங் களாகக் கருதப்பட்டன.[9] பிறர் முழக்காமலே முரசங்கள் தாமே முழங்கினாலும் அவ்வாறே தீய சகுனமாகக் கருதப்பட்டது.[10]

மன்னர்கள் பகைவரைப் பொருது வெற்றிகொள்ளப் புறப் படுமுன் வாளும் குடையும் முரசும் நாளொடு பெயர்த்தல் மரபு. அவை வாணாட்கோள், குடைநாட்கோள், முரசு நாட்கோள் என்பன.

---

1. பத்துப்-மலைபடுகடாம்
2. குறுந். 375.
3. பத்து-பொருந-69-72.
4. அகம். 140.
5. கலி. நெய்தல் 143.
6. புறம். 63.
7. பெருங்-உஞ்சை-புனற் 24.
8. பாரத-ஆதி-இந்திர. 3.
9. புறம். 229.
10. இரா. சுந்தர. காட்சிப். 72-43.

"........................திருமாவளவன்
வாளுங்குடையு மயிர்க்கண் முரசும்
நாளொடு பெயர்த்து............"[1]

இசைக் கருவிகளை முழக்கும் தொழிலைவைத்து நால்வகைக் குடிகளாக மக்கள் பகுக்கப்பட்டிருப்பதும் நாம் அறியவேண்டிய ஒன்று.

துடியன்குடி, பாணன்குடி, பறையன்குடி, கடம்பன்குடி என்று சொல்லப்பட்ட இந்நால்வகைக் குடிகளின்றி வேறுகுடிகளில்லை.

துடியன் பாணன் பறையன் கடம்பனென்
றிந்நான்கல்லது குடியுமில்லை[2]

போர் முரசு, முரசு செய்யும் மரபு, வீரமுரசு முழக்கும் மரபு, பரவுக்கடன் ஆற்றும் திறன், காவல்மரம் அழித்தல் போன்ற செய்திகளெல்லாம் "முரசு" என்ற தலைப்பில் கூறப்பட்டுள்ளன.

---

1. சிலப். இந்திர. 91.
2. புறம். 335.

பஞ்சமரபில் கூறப்படும் செய்திகள்

அறிவனார் இயற்றிய பஞ்சமரபு என்னும் இசைத்தமிழ் நூல் இசை, முழவு, தாளம், கூத்து, அவிநயம் என்னும் ஐந்தினையும் கூறுவது.

தோல், துளை, நரம்பு, கஞ்சம், மிடறு என்னும் ஐந்திடங்களில் தோன்றுவது இசை. இவற்றில் தோற்கருவிகளின் இலக்கணம் பலவும், பெயர்களும், அமைதிகளும், அவற்றிற்குரிய கடவுளர் பெயர்களும் '**முழவு மரபு**' என்ற பிரிவில் கூறப்படுகின்றன. **பிண்டமரபில்** தோற்கருவிகளின் உருவம்பற்றிக் கூறப்படுகிறது. அடுத்து **எழுத்துமரபில்** தோற்கருவிகளில் வாசிக்கப்பெறும் சொற்கட்டுகளின் முறையும், எழுத்துக்களும். அவ்வவற்றின் பெயர்களும் தெளிவாகக் கூறப்படுகின்றன.

தோற்கருவிகளை ஆசிரியர் பெயர், முறைமை, பிண்டம், பேரெழுத்து என்ற நான்கு முறைகளில் வகைப்படுத்தி அறிவிக்கின்றார்.

பெயர்

1. பேரிகை
2. படகம்
3. இடக்கை
4. உடுக்கை
5. மத்தளம்
6. சல்லிகை
7. கரடிகை
8. திமிலை
9. குடமுழா
10. தக்கை
11. கணப்பறை
12. தமருகம்
13. தண்ணுமை
14. தாவில் தடாரி (தவில்)
15. அந்தரி
16. முழவு

17. சந்திரவளையம்
18. மொந்தை
19. முரசு
20. கண் விடுதூம்பு
21. நிசாளம்
22. துடுமை
23. சிறுபறை
24. அடக்கம் (அடக்கப்பறை)
25. தகுணிச்சம்
26. விரலேறு
27. பாகம்
28. உபாங்கி
29. துடி
30. பெரும்பறை

என்ற முப்பதும் தோலால் செய்யப்பட்ட கருவிகள் என்று அவற்றின் பெயர்கள் கூறப்பட்டுள்ளன.

> "பேரிகை படகம் இடக்கை யுடுக்கை
> சீர்மிகு மத்தளஞ் சல்லிகை கரடிகை
> திமிலை குடமுழாத் தக்கை கணப்பறை
> தமருகந் தண்ணுமை தாவில் தடாரி
> யந்தரி முழவொடு சந்திர வளையம்
> மொந்தை முரசே கண்விடு தூம்பு
> நிசாளந் துடுமை சிறுபறை யடக்கம்
> ஆசில் தகுணிச்சம் விரலேறு பாகம்
> தொக்க வுபாங்கி துடிபெரும் பறையென
> மிக்க நூலோர் விரித்துரைத் தனரே"

என்றாராகலின் என்று ஒருநூற்பாவும் இடம்பெற்றுள்ளது.

முறைமை

அத்தோற்கருவிகள் வன்மை, மென்மை, சமம், எனவும், தலை, இடை, கடை எனவும், வீரம் எனவும் ஏழு வகைப்படும்.

I. வன்மைக் கருவி

1. நிசாளம்
2. துடுமை
3. முரசு
4. பேரிகை
5. தேசி
6. திமிலை
7. குடமுழா
8. பாகம் (தப்பு)
9. கணப்பறை
10. அடக்கப்பறை
11. சிறுபறை
12. மொந்தை
13. பெரும்பறை
14. நாழிகைப்பறை
15. துடி

என இவை பதினைந்தும் ஆகும்.

[இப்பதினைந்து கருவிகளில் தேசி நாழிகைப்பறை ஆகிய இரண்டு கருவிகளின் பெயர்களும், முதலில் பெயர் என்ற தலைப்பில் தொகுத்துக் கூறிய முப்பது பெயர்களில் கூறப் படாதவை.]

II. மென்மைக் கருவி

1. தக்கை
2. குடுக்கை
3. தகுணிச்சம்
4. தண்ணுமை
5. உடுக்கை
6. பாங்கி (விரலேறுபாங்கி)
7. முழவு (அந்தரிமுழவு)
8. சந்திரவளையம்
9. மொந்தை
10. தடாரி (பைந்தொழிற்ற டாரி)
11. தூம்பு (கண்விடு தூம்பு)
12. தமருகம்

என இவை பன்னிரண்டும் ஆகும்.

[இவற்றுள் குடுக்கை என்பது முன் கூறிய முப்பது பெயர்களில் கூறப்படாதது.]

III சமக்கருவி

1. மத்தளம்
2. சல்லி
3. படகம்
4. கரடி

என இவை நான்கும் ஆகும்.

IV. தலைக்கருவி

1. மத்தளம்
2. சல்லி
3. இடக்கை
4. கரடிகை
5, பேரிகை
6. படகம்
7 குடமுழவம்

என இவை ஏழும் ஆகும். இவை ஏழும் உத்தமக்கருவிகள் என்றும் பெயர் பெறுகின்றன.

V. இடைக் கருவி

1. தண்ணுமை
2. தக்கை
3. உடுக்கை
4. தகுணிச்சம்
5. கண்விடுதூம்பு
6. விரலேறு
7. தமருகம்
8. தடாரி
9. துடி
10. உபாங்கி
11. அமுதகுண்டலி
12. அந்தரிமுழவு

என இவை பன்னிரண்டும் ஆகும். இவை மத்திமமான கருவிகள் என்றும் பெயர் பெறுகின்றன.

[இவற்றுள் அமுதகுண்டலி என்பது முன்கூறிய முப்பது பெயர்களில் கூறப்படாதது.]

VI. கடைக்கருவி

1. பறை
2. பாகம்
3. சிறுபறை
4. அடக்கம்

என இவை நான்கும் ஆகும். இவை அதமமான கருவிகள் என்றும் பெயர் பெறுகின்றன.

இவற்றில் பறையென்பது கணப்பறை.
பாகம் என்பது தப்பு
சிறுபறை என்பது நெழுகுபறை
அடக்கம் என்பது ஆனைப்பறை

எனக் கொள்ளவேண்டும் என்றும் உரையாசிரியர் கூறுகிறார்.

VII. வீரக் கருவி

1. முரசு
2. நிசாளம்
3. திமிலை
4. துடுமை

என இவை நான்கும் ஆகும் (பண்ணமை முழவு என்றும் குறிப்பிடு கிறார் நூலின் உரையாசிரியர்).

மேலும் அத்தோற்கருவிகள் அகமுழவு, புறமுழவு, புறப்புற முழவு, பன்மைமுழவு, நாள்முழவு, காலைமுழவு என்று ஆறு வகையாகவும் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

I. அகமுழவு (முன்சொன்ன உத்தமமான கருவிகள் ஏழுமாம்)

1. மத்தளம்
2. சல்லி
3. இடக்கை
4. கரடிகை
5. பேரிகை
6. படகம்
7. குடமுழவம்

என இவை ஏழும் ஆகும்.

II. **புறமுழவு** (முன்சொன்ன மத்திமமான கருவிகள் பன்னிரண்டுமாம்)

1. தண்ணுமை
2. தக்கை
3. உடுக்கை
4. தகுணிச்சம்
5. கண்விடுதூம்பு
6. விரலேறு
7. தமருகம்
8. தடாரி
9. துடி
10. உபாங்கி
11. அமுதகுண்டலி
12. அந்தரிமுழவு

என இவை பன்னிரண்டுமாம்.

III. **புறப்புற முழவு** (முன்சொன்ன அதமமான கருவிகள் நான்கும் ஆம்.)

1. பறை
2. பாகம்
3. சிறுபறை
4. அடக்கம்

என இவை நான்குமாம்.

IV. **பண்மை முழவு** (பண்ணமை முழவு)

1. முரசு
2. நிசாளம்
3. துடுவை (துடுமை)

என இவை மூன்றுமாம்.

V. **நாள் முழவு** நாழிகைப்பறை (நாட்பறை) என்பதாம்.

IV. **காலை முழவு** துடி—என்பதாம்.

இவ்வாறெல்லாம் பிரித்துக் கூறிய இவற்றையே முதலில்,

1. வன்மை
2. மென்மை
3. சமம்
4. முதல்
5. இடை
6. கடை
7. உத்தமம்
8. மத்திமம்
9. அதமம்
10. நாள்

11. காலம்
12. வீரம்
13. அகம்
14. அகப்புறம்
15. புறம்
16. புறப்புறம்
17. பண்மை

எனப் பதினேழு வகையாகவும் முறைப்படுத்தியுள்ளார்.

இனிக் கடவுளர் பெயர்கள் கூறப்படுகின்றன.

மத்தளத்திற்கு நான்முகன் தெய்வம்.

இதற்கு, மெல்லென்பது ஓசையாதலால் மத்தளம் என்று பெயராயிற்று இக்கருவி பல கூத்துக்கும் உரித்தாகலானும், பாடலெழுத்துக்கள் இதனுள்ளே பிறத்தலானும், முழவுகள் எல்லாம் இதனுள்ளே பிறத்தலானும் இது நான்முகன் என்று பெயராயிற்று.

சல்லி என்ற முழவுக்கு நாராயணன் தெய்வம்.

இது சல்லென்ற ஓசையை யுடைத்து. ஆதலான் சல்லி என்ற பெயராயிற்று. இது வன்மையை யுடைத்தாதலால் நாராயணன் என்று பெயராயிற்று

(சல்லி-சல்லிகை)

ஆவஞ்சி-இதற்குத் தெய்வம் உருத்திரன். ஆவினுடைய வஞ்சித் தோலைப் போர்த்தலால் ஆவஞ்சி என்று பெயராயிற்று.

குடுக்கை—குடுப்பைக் கையாக உடைத்தாதலால் குடுக்கை என்று பெயராயிற்று.

இடக்கை—இவ்வினைக்கிரியை இடக்கையினாலே செய்தலால் இடக்கை என்று பெயராயிற்று.

மேற்கூறிய கருவிகளுள் மத்தளமானது, முதற்றாளம் கொள்ளுமிடத்துத் **தகாரங்** கொள்ளுதலால் இதற்கு முதற் கருவி யென்று பெயராயிற்று. சல்லியானது சமக்கருவியாதலால் இடைக்கருவி (இடைக்கோள்) என்று பெயராயிற்று. குடுக்கையானது கடைக்கருவிக்குரியது. ஆதலால் கடைக்கருவி என்று பெயராயிற்று.

இவ்வாறு முன்சொன்ன முழவுகள் மூன்று வகைப்படும்.

உதயம், மதியம், உபயம் என்றும் பகுக்கப்படும். உதயமென்பது சூரியன். மதியம் என்பது சந்திரன். முன்சொன்ன மூன்று முழவினையும் சூரியாங்கம் என்றும், சந்திராங்கம் என்றும் உபயாங்கம் என்றும் சொல்லலாம் (உபாயங்கமென்பது இரண்டிற்குரியது).

தெய்வம்

1. பிரமன், விட்டுணு, உருத்திரன் இவர்கள் மூவர்க்கும் இயற்றப்படுவன முன் சொன்ன முதற்கருவிகளேழும் என்றவாறு [மத்தளம், சல்லி, இடக்கை, கரடிகை, பேரிகை, படகம், குடமுழவம்.]

2. வயிரவன், முருகன், துர்க்கை-இவர்கள் மூவர்க்கும் இயற்றப்படுவன முன்சொன்ன இடைக்கருவிகள் பன்னிரண்டும் என்றவாறு [தண்ணுமை, தக்கை, உடுக்கை, தகுணிச்சம், கண்விடுதூம்பு, விரலேறு, தமருகம், தடாரி, துடி, உபாங்கி, அமுதகுண்டலி, அந்தரி முழவு.]

3. காளி, சாத்தன், காடுகாள்-இவர்கள் மூவர்க்கும் இயற்றப்படுவன முன்சொன்ன கடைக்கருவிகள் நான்கும் என்றவாறு. [பறை, பாகம், சிறுபறை, அடக்கம்]

மன்னர்

சேரன், சோழன், பாண்டியன் இவர்கள் மூவர்க்குரியன முன்சொன்ன வீரமுழவுகள் நான்கும் என்றவாறு. [முரசு, நிசாளம் திமிலை, துடுமை.]

குறிப்பு: பிண்டமரபில் கூறப்பட்டிருக்கும் முழவு வாச்சியத்தின் முழு உருவத்திற்குரிய மரம் முதலிய செய்திகளும்—கருவிகளின் அளவு, அமைப்பு முதலியனவும், தோல் போர்த்தும் முறைகளைப் பற்றியும் இந்நூலில் அங்கங்கே உரிய இடங்களில் கூறப்பட்டுள்ளன.

அட்டவணை

அட்டவணை

	வன்மை	மென்மை	சமம்	தலை	இடை	கடை	வீரம்	அகமுழவு {தலை உத்தமம்}	புறமுழவு {இடை மத்திமம்}	புறப்புறமுழவு {கடை அதமம்}
அடக்கம்	x					x				x
அந்தரி		x			x				x	
அமுத குண்டலி*					x				x	
இடக்கை				x				x		
உடுக்கை		x			x				x	
உபாங்கி					x				x	
கண்விடு தூம்பு		x			x				x	
கணப்பறை	x					x				x
கரடிகை			x	x				x		
குடமுழா	x			x				x		
குடுக்கை*		x								
சந்திர வளையம்		x								
சல்லிகை			x	x				x		
சிறுபறை	x					x				x
தக்கை		x			x				x	
தகுணிச்சம்		x			x				x	
தடாரி		x			x				x	
தண்ணுமை		x			x				x	
தமருகம்		x			x				x	
திமிலை	x						x			

பன்மை முழவு (பண்ணமை முழவு)	நாள்முழவு	காலைமுழவு	முதற் கடவுள்			இடைக் கடவுள்			கடையான கடவுள்		
			பிரமன்	விட்டுணு	உருத்திரன்	வயிரவன்	முருகன்	துர்க்கை	காளி	சாத்தன்	காடுகாள்
									x	x	x
						x	x	x			
						x	x	x			
			x	x	x	x	x	x			
						x	x	x			
						x	x	x			
									x	x	x
			x	x	x						
			x	x	x						
									x	x	x
			x	x	x						
									x	x	x
						x	x	x			
						x	x	x			
						x	x	x			
						x	x	x			
						x	x	x			

மன்னவர்

சேரன், சோழன், பாண்டியன் இவர்கள் மூவர்க்குரியன முன் சொன்ன வீரமுழவுகள் நான்கும் (முரசு, நிசாளம், திமிலை, துடுமை)

	வன்மை	மென்மை	சமம்	தலை	இடை	கடை	வீரம்	அகமுழவு { தலை உத்தமம் }	புறமுழவு { இடை மத்திமம் }	புறப்புறமுழவு { கடை அதமம் }
துடி	x				x				x	
துடுமை	x						x			
தேசி*	x									
நாழிகைப் பறை*	x									
நிசாளம்	x						x			
படகம்			x	x				x		
பாகம்	x					x				x
பெரும்பறை	x									
பேரிகை	x			x				x		
மத்தளம்			x	x				x		
முரசு	x						x			
முழவு										
மொந்தை	x	x								
விரலேறு		x			x				x	

* இக்குறியிட்ட நான்கு கருவி
முப்பது கருவிகளுடன் கூறப்
வகைப்படுத்தும் பொழுது

பண்மை முழவு (பண்ணமை முழவு)	நாள்முழவு	காலைமுழவு	பிரமன்	விட்டுணு	உருத்திரன்	வயிரவன்	முருகன்	துர்க்கை	காளி	சாத்தன்	காடுகாள்
			முதற் கடவுள்			இடைக் கடவுள்			கடையான கடவுள்		
		x				x	x	x			
x											
	x										
x											
			x	x	x						
									x	x	x
			x	x	x						
			x	x	x						
x											
						x	x	x			

மத்தளத்திற்கு நான்முகனையும் சல்லி என்ற முழவுக்கு நாராயணனையும் ஆவஞ்சிக்கு உருத்திரனையும் அதிதேவதைகள் என்று கூறப்பெற்றுள்ளது.

களும் நூற்பாவில் கூறப்பட்ட
படாதவை. உரையில் அங்கங்கே
கூறப்பட்டுள்ளன.

அடியார்க்கு நல்லார்

சிலப்பதிகாரத்தில் புகார்க் காண்டத்தில்—அரங்கேற்றுகாதையில் "தாழ்குரற்றண்ணுமை" (8:27) என்ற வரியின் உரையில் அடியார்க்கு நல்லார் பல்வேறுபட்ட தோற் கருவிகளைக் குறிப்பிடுகின்றார்.

(அக்கருவிகளின் பெயர்கள் முழுமையையும் பஞ்சமரபில் குறிப்பிட்டுள்ளேன்)

இவை அகமுழவு, அகப்புறமுழவு, புறமுழவு, புறப்புறமுழவு, பண்ணமைமுழவு, நாண்முழவு, காலைமுழவென எழுவகைப்படும்.

அவற்றுள் அகமுழவாவன:—முன் சொன்ன மத்திமமான தண்ணுமை, தக்கை, தகுணிச்சம் முதலாயின.

புறமுழவாவன:—முன்சொன்ன அதமக்கருவியான கணப்பறை முதலாயின.

புறப்புறமுழவாவன: முற்கூறப்படாத நெய்தற்பறை முதலாயின.

பண்ணமை முழவாவன:—முன்சொன்ன வீரமுழவு நான்கும். அவையாவன.—முரசு, நிசாளம், துடுமை, திமிலையெனவிவை.

நாண் முழவாவன:—நாட்பறை; ஆவது நாழிகைப்பறை.

காலைமுழவாவன.—முன் துடியென்றது.

இனி இவற்றுள், மத்தளம்:—மத்து ஓசைப்பெயர்; இசையிடனாகிய கருவிகட்கெல்லாம் தளமாதலான் மத்தளமென்று பெயராயிற்று.

இக்கருவி பல கூத்துக்களுக்கு உரித்தாகலானும் பாடலெழுத்தான் உள்ளே பிறத்தலானும் முழவுகளெல்லாம் இதனுள்ளே பிறத்தலானும் இதனை நான்முகன் என்பர்.

சல்லிகை யென்றது—சல்லென்ற ஓசையையுடைத்தாதலாற் பெற்ற பெயர்.

ஆவஞ்சி யெனினும் குடுக்கை யெனினும் இடக்கையெனினு மொக்கும்; அதற்கு ஆவினுடைய வஞ்சித்தோலைப் போர்த்த

லால் ஆவஞ்சி யென்று பெயராயிற்று; குடுக்கையாக வடைத்த லாற் குடுக்கை யென்று பெயராயிற்று; வினைக்கிரியைகள் இடக் கையாற் செய்தலின் இடக்கையென்று பெயராயிற்று.

கரடி கத்தினாற் போலும் ஓசையை யுடைத்தாதலாற் கரடிகை யென்று பெயராயிற்று.

பிறவற்றையும் இங்ஙனம் உய்த்துணர்ந்து கொள்க.

இவற்றுள் முதலிற் கரங்கொள்வது மத்தளமாதலின் முதற் கருவியாயிற்று.

இடைக்கருவி சல்லி; இடைக்கொள வைத்ததாகலின்.

கடைக்கருவி உடுக்கை; கடைக்கட்டட்டுக்கு உரித்தாகலின்.

இங்ஙனமாகிய கருவிகட்கெல்லாம் முதலாதல் நோக்கித் தண்ணுமை யொன்றனையுமே கூறினார்.[1]

1. சிலப். புகார். அரங். 3.27. உரை அடியார்க்கு நல்லார்.

கருவிகளைப் பற்றிய விளக்கக் குறிப்புகள்*

1. அடக்கம்

அடக்கம் என்பது தோற்கருவி வகையில் ஒன்று.[1] இது, வன்மைக் கருவி என்று கூறப்படுகிறது. கடைக்கருவி வகையைச் சார்ந்தது என்றும் வேறு ஒரு முறையில் வகைப்படுத்தப்படுகிறது. அடக்கம் என்பது ஆனைப்பறையாம். புறப்புறமுழவாகும். காளி, சாத்தன், காடுகாள் ஆகிய கடவுளர் மூவர்க்கும் இயற்றப்படும் கருவிகளுள் அடக்கம் என்ற இந்தக் கருவியும் ஒன்று.[2]

2. அந்தரி

அந்தரி என்பதும் ஒருவகைத் தோற்கருவியே.[3] இது மென்மைக்கருவி என்று வகைப்படுத்தப்பட்டுள்ளது. இடைக் கருவியைச் சார்ந்தது. புறமுழவாகும். வயிரவன், முருகன், துர்க்கை ஆகிய கடவுளர் மூவர்க்கும் இயற்றப்படும் தோற்கருவி களுள் இந்த அந்தரி முழவும் ஒன்று.[4]

---

* இலக்கியங்களிலும் பிறர் நூற்குறிப்புகளிலும் கண்ட அளவில் எழுதப்பட்டன.

1. சிலப். 3.27-உரை.
2. பஞ்சமரபு. உரை.
3. சிலப். 3.27-உரை.
4. பஞ்சமரபு. உரை.

3. அமுதகுண்டலி

அமுத குண்டலி என்ற தோற்கருவியும் பிற தோற்கருவி களுடன் சேர்த்து நம் முன்னோர்களால் கூறப்பட்டுள்ளது. இந்த அமுதகுண்டலி இடைக்கருவி வகையைச் சார்ந்தது. புறமுழவு என்று வேறு ஒருவகையிலும் முறைப்படுத்தப்படுகிறது. வயிரவன், முருகன், துர்க்கை ஆகிய கடவுளர் மூவர்க்கும் இயற்றப்படும் தோற் கருவிகளுள் அமுதகுண்டலியும் ஒன்று.[1]

4. அரிப்பறை

அரிப்பறை என்ற கருவி அரித்தெழும் ஓசையையுடையது. இந்த அரிப்பறையின் ஒலியை நம்முன்னோர்கள் மேகலையின் ஒலிக்கு உவமையாகக் காட்டியுள்ளனர்.[2]

அரிப்பறை என்பது ஒரு தனித் தோற்கருவியா அல்லது ஓசை நோக்கி 'அரி' என்ற அடையுடன் வந்த பறை என்ற கருவியா என்பது ஆய்வுக்குரியது.

அரிப்பறை என்பது அரியும்பொழுது அதாவது நெல்அறுவடை செய்து அடித்து ஒப்படை செய்யும் பொழுது அடிக்கப்படும் பறை எனப் பொருள் கொள்ளலாமோ என்று எண்ணத் தோன்றுகிறது. அரிந்த நெல்தாள் குவியலுக்கு 'அரி' என்ற பெயர்வழக்கிலுள்ளது. ஏறு கோட்பறை என்பது போல அமைந்த ஒரு பெயராக இருக்க லாமோ என்று எண்ணத் தோன்றுகிறது.

5. ஆகுளி

ஆகுளி என்ற தோற்கருவியானது திண்ணிய வாராலே இறுக வலித்துக் கட்டப்பட்டது. அடித்து ஒலி எழுப்பப்படும் இட மாகிய தன் கண்களிலே இசை உண்டாக்கப்பட்டது.[3]

ஒலி எழுப்பும் பொழுது விரலால் தீண்டி ஒலி எழுப்புவர்.[4] மெல்லிய நீர்மையினையுடையது[5]

---

1. பஞ்சமரபு உரை.
2. சீவகசிந்தாமணி 2688.
3. மலைபடுகடாம்.
4. மலைபடுகடாம்.
5. மதுரைக்காஞ்சி.

ஆகுதி என்ற ஒருசொல் ஆகுளி என்ற தோற்கருவியைக் குறிப்பதாகப் பொருள் கூறுகின்றனர். ஆகுளி என்ற சொல்லுக்குச் சிறுபறை என்று கூடப் பொருள் கூறப்படுகிறது.[1]

முருடு, சங்கு, வயிர், காளம் போன்ற பிற இசைக் கருவிகளுடன் சேர்த்து ஒலிக்கப்பட்டதாகவும் அறிகிறோம். ஆகுளி, யாழ், பதலை ஆகியவற்றை ஒன்றாகக் கட்டித் தூக்கிச் செல்லும் பழக்கமுண்டு.[2]

6. ஆமந்திரிகை

ஆமந்திரிகை என்ற ஒரு கருவியின் பெயர் சிலப்பதிகாரத்தில் அரங்கேற்று காதையில் குறிக்கப்படுகிறது. ''முழவொடு கூடி நின்றிசைத்த தாமந்திரிகை'';—என்று கூறி முழவோடு கூடிநின்று ஒலிக்கும் தன்மையது என்ற செய்தி அறிவிக்கப்படுகிறது.

''கருவிகள் பல ஒருங்கியைந்து ஒலிப்பதனை இக்காலத்தார் Orchestra என்பர். இது பழந்தமிழ் நாட்டில் **ஆமந்திரிகை** யென வழங்கப்பட்டது.

'குழல்வழி நின்ற தியாழே யாழ்வழித்
தண்ணுமை நின்றது தகவே தண்ணுமைப்
பின்வழி நின்றது முழவே முழவொடு
கூடிநின் றிசைத்த **தாமந்திரிகை.**[3]

இச்செய்யுளுரையிலே அரும்பதவுரையாசிரியர் 'ஆமந்திரிகை யாவது இடக்கை. நின்றது கருவியென்னாது ஓசையென்க' என்று கூறுகிறார்.

அனைத்துக் கருவிகளையும் ஆக்கியும் அடக்கியும் சிதைவின்றிச் செலுத்துவோன் தண்ணுமையாகிய மத்தளக் கருவியையிசைப் போனாதலின் அவன் அத்தகு தண்ணுமை யருந்தொழில் முதல்வனெனப்பட்டான்.[4]

ஆகவே இன்றைய Orchestra மிகப் பழங்காலத்திலேயே ஆமந்திரிகை என்ற பெயருடன் நம் வழக்கிலிருந்துள்ளது என அறிகிறோம்.

---

1. செ.ப த.அ. (குருநாதர் கிள்ளை விடுதூது-114).
2. புறம் 64.
3. சிலப். அரங்கேற்று காதை 4:(139-143)
4. யாழ்நூல் - பாயிரவியல் பக். 18.

7. ஆவஞ்சி

ஆவஞ்சி என்பது ஒருவகைத் தோற்கருவி. ஆவஞ்சியெனினும் குடுக்கை யெனினும், இடக்கை எனினும் ஒக்கும். அதற்கு ஆவினுடைய வஞ்சித்தோலைப் போர்த்தலால் ஆவஞ்சி என்று பெயராயிற்று குடுக்கையாக அடைத்தலால் குடுக்கை என்று பெயராயிற்று வினைக்கிரியைகள் இடக்கையால் செய்தலின் இடக்கை என்று பெயராயிற்று.[1]

இடக்கை என்ற கருவியின் நீளம் பதினாறுவிரல். முசம் முப்பத்திரண்டு—சுற்றுக் குண்டு பதினாறு. முகம் பத்துக்குண்டின் பருமை. துளை மூன்றாம். (வார்த்துளை பதினெட்டு; இடக்கைக்கு இரண்டு முசமும் மென்தோலால் போர்த்தப்படும். பிறைக் கையாக நின்ற தசவீக்கி என்றவாறு, ஓரோர் கயிறும் மூன்று புரியிலே திரித்து இப்படி நாலு கயிறிட்டு ஒரு முகத்திலே இரண்டிரண்டு வயிரிட்டொடுக்க என்றவாறு (வயிர்—மயிர்). இடக்கைக் குடுப்புக் கொள்ளுமிடத்து எருமைக் கொம்பாலே தேருருளின் பருமையிலே பதினாறு விரல் நீளத்திலே கொள்கை எல்லா நூலினுள்ளும் விளங்கும்.[2]

ஆவஞ்சி என்பது இடக்கையின் பரியாயப் பெயர்.

இடக்கை என்ற பெயரில் தலைக்கருவி வகையில் சேர்க்கப் பட்டுள்ளது. அகமுழவு என்ற வகையையும் சேர்கிறது. பிரமன், விட்டுணு, உருத்திரன் என்ற கடவுளர் மூவர்க்கும் இயற்றப்படும் கருவிகளுள் இடக்கையும் ஒன்று. குடுக்கை என்ற பெயரில் மென்மைக் கருவி வகையில் சேர்கிறது.[3]

8. இடக்கை

இத்தோற் கருவியின் விளக்கங்களை ஆவஞ்சி என்றதலைப்பில் காண்க.

9. உடல்

'உடல்' என்ற பெயர் விளக்கத்துடன் ஒரு தோற்கருவி சென்னை எழும்பூர் அருங்காட்சியகத்தில் காட்சிக்காக வைக்கப் பட்டுள்ளது.

---

1. சிலப். அரங்கேற்று காதை. அடியார்க்கு நல்லாருரை.
2. பஞ்சமரபு. உரை.
3. ,,

இது கோயிலுக்குள்ளேயே வாசிக்சப்படும் ஒருவித வாத்தியம் அமைப்பில் தவிலைப் போலவே இருக்கும். இதன் ஒலி ஓங்காரத் தொனியை ஒத்திருக்கும். இதைப் பூசாகாலங்களில் மட்டுமே அடிப்பார்கள். புதுவை காளதீசுவரன் கோயிலில் 'உடல்' ஒன்று ஒரு மூலையில் தொங்க விடப்பட்டிருக்கிறது. இப்போது எவரும் அடிப்பதாகத் தெரியவில்லை.[1]

10. உடுக்கை

இடை சுருங்குபறை என்றும் துடிஎன்றும்கூறப்படும் ஒரு தோற் கருவி. இஃது ஒரு பழமையான வாத்தியம். நடு சிறுத்தும் ஓரங்கள் பெருத்தும் இருக்கும். இதன் உடல் மண்ணினாலாவது, மரத்தினா லாவது, பித்தளையினாலாவது செய்யப்பட்டிருக்கும். தோல்களின் சுற்றுப் பக்கத்தில் சிறு துவாரங்கள் இருக்கும். இவைகளின் மூல மாக ஒரு நீண்ட சயிறு இரு முகங்களினின்றும் மாறி மாறி இறுகப் பின்னப்பட்டிருக்கும். இந்தக் கயிற்றைச் சுற்றி நடுவில் ஒரு நாடா இருக்கும். வாசிப்பவர் இந்த நாடாவை அழுத்துவதினால் முகங் களின் சுருதி அதிகமாகி, ஜாருகமகம் போன்ற ஒரு நாதம் எழும்பும். இது கேட்பதற்கு மிக்க இனிமையாக இருக்கும். உடுக் கையை இடக்கையால் நடுவில் பிடித்துக் கொண்டு, வலக்கையால் வாசிப்பார்கள். மாரியம்மன் கோயில்களிலும், வேறு கிராம தேவதைகளின் கோயில்களிலும் இதைக் கேட்கலாம்.[2]

இப்பறை உடுக்கு என்றும் வழங்கப்படுறது. சுமார் ஓர் அடி நீளமுள்ளது. தெருப் பாடகர்கள் தம்பாடலுக்குப் பின்னணியாக இக்கருவியை உபயோகிக்கின்றனர். குறிசொல்லுவோர் பேய், பிசாசுகளை விரட்டுவதற்காக இஷ்டதேவதைகளை வேண்டி உடுக்கை யடிக்கிறார்கள்.[3]

உடுக்கையின் தலைகள் கன்றின் தோலால் போர்த்தப் பட்டிருக்கும்.[4]

---

1. தமிழர் இசைக் கருவிகள்-அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.
2. கலைக்களஞ்சியம்.
3. Musical Instruments of India, S. Krishnasamy, PP. 93-99.
4. Tamil Nadu Musical Instruments, Mrs. Sujatha Nagarajan, "Mirror"—January 1981.

உடுக்கை என்ற இச்சருவி மென்மைச் சருவியாகும். இடைச் சருவி வகையில் சேர்க்சப்பட்டுள்ளது. வயிரவன், முருகன், துர்க்கை ஆகிய கடவுளர் மூவர்க்கும் இயற்றப்படும் தோற்கருவி களுள் ஒன்று.[1]

உடுக்கை என்ற தோற்கருவி சிவனின் சின்னம் என்ற குறிப் புடன் காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளது.[2]

உடுக்கை உலர்ந்த தோலால் போர்த்தப்பட்டது என்ற செய் தியும் கிடைக்கிறது.[3]

''நிலையாய் உடுக்கை வாசிப்பான்''[4] என்ற தொடர் உடுக்கை என்ற தோற்கருவி நம் கல்வெட்டுகளில் இடம் பெற்றுள்ளதை விளக்குகிறது.

பேருடுக்கையைத் தவண்டையென்பர். பூசாரிகள் உபயோ கிப்பது இதுதான். வாய்கள் ஆட்டுச்சவ்வால் போர்க்கப் பட்டிருக்கும். இடது வாயின் தோலின் மீது குதிரை மயிரினால் திரிக்கப்பட்ட மெல்லிய கயிறு கட்டப்பட்டிருக்கும். அதை வீணை என்பர். வலது வாய் ஒன்றின் மீதே அடிப்பர். அவ்வப்போது இடையின் மீதுள்ள நாடாவை அமுக்குவர். அப்போது ஓர் உறைப்பான ஒலி உண்டாகும்.[5]

''உடுக்கை வாசிக்கும் பாவை'' ஒன்றைப்பற்றி ஒரு கல் வெட்டுக் கூறுகிறது. அதாவது அப்பாவை செம்பால் செய்யப் பட்டு, பொன்முலாம் பூசப்பட்டிருந்ததாகத் தெரிகிறது.

அதே போல் மத்தளம் கொட்டுகின்ற பாவை ஒன்றும், பாடு கின்ற பாவை ஒன்றும் ஆடுகின்ற பாவையொன்றும் இருந்த தாகவும் அக்கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

''செம்பின் மேல் பொந் கடுக்கின பாவைக் கண்ணாடியில் ஆடுகிற பாவை ஒன்று மத்தளம் கொட்டுகிற பாவை ஒன்று

---

1. பஞ்சமரபு உரை.
2. அருங்காட்சியகம், எழும்பூர்-சென்னை.
3. உதயண:குமார காவியம் - உஞ்சைக்காண்டம்.
4. S.I I. II 254.
5. தமிழர் இசைக்கருவிகள். அண்ணாமலைப் பல்கலைக் கழகவெளியீடு.

உடுக்கை வாசிக்கிற பாவையொன்று பாடுகின்ற பாவையொன்று பீடமொன்று உட்பட கண்ணாடியொன்று நிறையொன்பதின் பலம்.''

இக்கல்வெட்டு முதலாம் இராசராசன் காலத்தது, திருவையாறு பஞ்சநதீஸ்வரர் கோயிலில் உள்ளது.

11. உறுமி

உறுமி என்னும் இந்தத் தோற்கருவி இரண்டு முகங்களையுடையது. இடை சுருங்கி நிற்கும். இரு முனைகளும் அகன்றிருக்கும். பம்பை என்னும் கருவியை விடச் சிறிது நீளமானது. சுமார் ஒன்றரை அடி நீளமுள்ள வளைந்த குச்சியை இடது கையில் கொண்டு வாசிப்பர். அது கருவியின் முகத்தை அடித்துத் தாக்குவதில்லை. இடது முகத்தின் தோலில் கீழும் மேலும் உராய்ந்து ஒலி எழுப்புகிறது. விலங்கு உறுமுவதைப் போன்று ஒலியை உண்டாக்குகிறது. உறுமியுடன் நாகசுரமும், சிறுபம்பையும் சேர்ந்து வாசிக்கப்படுகிறது. அப்பொழுது உறுமி மேளம் என்று பெயர் பெறுகிறது. முக்கியமாக உறுமி. மேளம் சவ ஊர்வலத்தின் போதே பயன்படுத்தப்படுகின்றது. சுபச்சடங்குகளில் இடம் பெறுவதில்லை. சில சமயங்களில் இக்கருவியை வாசித்துக் கொண்டே, கால்களில் சதங்கைகளைக் கட்டிக்கொண்டு ஆடுகின்றனர்.[1]

உறுமி காட்சிப்பொருளாக வைக்கப்பட்டுள்ளது.[2]

உறுமி என்பது தொட்டியர் என்னும் ஒரு சாதியார் குறுந்தடியால் தேய்த்து உறுமல் ஒலியை உண்டாக்கும் ஒரு வகை முழவு. ஆட்டங்காட்டப் பழக்கிய பெருமாள் மாட்டுடன் செல்லும் பிச்சைக்காரர்களும் இதையடிப்பர்.[3]

12. உறுமை

இதுவும் உறுமி போன்ற கருவியோ அல்லது உறுமியோ தானோ என அறிய முடியவில்லை.

---

1. Musical Instruments of India, S. Krishnasamy, P. 95.
2. அருங்காட்சியகம் எழும்பூர்-சென்னை.
3. தமிழர் இசைக் கருவிகள், அண்ணாமலைப் பல்கலைக் கழகவெளியீடு.

உறுமி என்றே கூறப்படுகிறது.[1] கம்பலி, தக்கை, கரடிகை, துடி ஆகிய கருவிகளுடன் சேர்த்து உறுமை என்ற இந்தக் கருவியும் கூறப்பட்டுள்ளது.[2]

13. எல்லரி

எல்லரி என்ற ஒரு தோற்கருவி இருந்ததாக நம் பண்டைய இலக்கியம் கூறுகிறது. அக்கருவி வலிய வாயையுடையது. தாளத்தைக் கைக்கொண்டு ஒலிக்கும். அதாவது தாளத்திற் கேற்ப ஒலிக்கும். எல்லரி என்றகருவியைச்சல்லி என்ற கருவியாகவே உரை கூறுகிறது.[3]

பறைவகை என்று கூடப் பொருள் கூறப்படுகிறது.[4]

14. ஏறங்கோள் (ஏறு கோட்பறை)

ஏறங்கோள் என்பது பறைவகையில் ஒன்று என்று நம் இலக்கியத்தின் மூலம் அறிகிறோம்.[5] நச்சினார்க்கினியர் உரை கூறுமிடத்து ஏறு கோட்பறை என்று பொருள் கூறுகிறார். உ. வே. சாமிநாதையரவர்களும் ஏறுகளைத் தழுவிக் கொள்ளுதற் பொருட்டு அடிக்கப்படும் வாத்தியம் என்கிறார்.

ஏறுகளைத் தழுவுவதற்காக அடிக்கப்படும் முல்லைப் பறையே இது.[6]

15. ஒருவாய்க்கோதை (ஒரு கட்பறை)

ஒருவாய்க் கோதை என்னும் இத்தோற் கருவியானது ஒரு கண்ணையுடையது. அளவு கருவியாகிய மரக்காலை ஒத்த அமைப்பு உடையது. அக்கருவியின் முகத்தில் தட்டியும், மூக்கில் முழக்கியும் ஒலி எழுப்புவர். பதஞ்சலி-வியாக்கிரபாதர் முனிவர்களுக்காக இறைவன் நடனமாடிய பொழுது ஒலிக்கப்பட்ட பல தோற்கருவிகளுள் இந்த ஒருவாய்க்கோதை என்ற கருவியும் ஒன்று.[7]

---

1. சென்னைப்பல்கலைக்கழகத் தமிழ் அகராதி.
2. கம்ப. யுத்த. பிரமாத்திரப்படலம்.
3. மலைபடுகடாம்.
4. சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதி.
5. சீவக. கோவிந்தையாரிலம்பகம்.
6. சூடாமணி நிகண்டு.
7. கல்லாடம் 8.

ஒருவாய்க் கோதையும் ஒருகட்பகுவாய் என்ற கருவியும் ஒன்று போல் கருத இடமுள்ளது.[1]

16. கஞ்சிரா

கஞ்சிரா என்ற இந்தத் தோற்கருவி வட்ட வடிவம் கொண்ட சட்டத்தினாலாயது. அதன் ஒரு பாகம் உடும்பின் தோலினால் மூடப்பட்டுள்ளது. மேலும் இச்சட்டத்தில் மூன்று அல்லது நான்கு உலோக வளைத்தகடுகளும் மணிகளும் பொருத்தப்பட்டுள்ளன. இவைகளினால் இவ்வாத்தியத்தை வாசிக்கும் பொழுது இனிமை யான நாதம் எழும்பும். இசை நிகழ்ச்சிகளிலும் பஜனைகளிலும் வாசிக்கப்படும் ஓர் எளிய கருவி. மரச்சட்டம் 8 அல்லது 9அங்குல விட்டம் கொண்டது. 3அல்லது 4அங்குலம் ஆழமானது.[2]

தோற்கருவிகளில் மிகப் பழமையான ஒரு கருவி கஞ்சிரா. வட்ட வடிவம் கொண்ட சட்டத்தாலானது. விட்டம் பத்து அங்குலம். ஆழம் இரண்டரை அங்குலம். தோல் பரப்பிய பகுதி போக மற்ற பகுதி வெறுமையாக இருக்கும். கஞ்சிராவை இடது கையால் பிடித்துக் கொள்ளுகின்றனர். வலது உள்ளங்கையாலும் விரல்களாலும அடித்து வாசிக்கின்றனர். சாதாரணமாக தோலில் கொஞ்சம் தண்ணீரைத் தடவினால் தேவையான சுருதியில் ஒலி கிடைக்கிறது. வாசிக்கும் பொழுது முன் விரல்களால் ஓரத்தை அழுத்துவதன் மூலம் ஒலி வேறுபாடு கிடைக்கிறது. இக்கருவி· நாட்டுப்பாடல்கள் பாடப்படும்பொழுதும், பக்திப்பாடல்கள் பாடப்படும் பொழுதும் வாசிக்கப்படுகிறது. தென்னாட்டில் இசையரங்குகளில் வாசிக்கப்பட்டு மிக உன்னதமான இடத்தைப் பெற்றிருந்த கருவி இது. வடநாட்டில் இது கஞ்சரி என வழங்கு கிறது. இசையரங்குகளில் மிருதங்கத்திற்குப் பதிலாகக் கூடத் தென்னாட்டில் பயன்படுத்தப்படுகிறது. கஞ்சிராவை வாசிப்பதில் திறமை படைத்தவர்கள் மிருதங்கத்தில் வாசிக்கப்படும் எல்லா வகையான ஒலிகளையும் ஒரே கையால் வாசிக்கின்றனர். கஞ்சிரா வாசிப்பதில் வல்லுநராகக் கருதப்பட்டவர் அண்மையில் வாழ்ந்த தட்சிணாமூர்த்திபிள்ளை அவர்கள்.[3]

---

1. பிங்கலம்.
2. அருங்காட்சியகம், எழும்பூர், சென்னை.
3. Musical Instruments of India, S. Krishnasamy, P. 77.

சல்லரி என்றழைக்கப்பட்டு வந்த பழைய கைப்பறையே இன்று கஞ்சிரா என்னும் பெயருடன் விளங்குகிறது. இக்கருவி கிலு கிலு வெனும் ஒரு வித ஒலியை உண்டாக்குகிறது. இதை இசையரங்குகளில் வாசிப்பதைச் சிலர் ஆட்சேபிப்பர். தலைஞாயிறு இராதாகிருஷ்ணையர், புதுக்கோட்டை மான்பூண்டியா பிள்ளை ஆகியோர் இதை வாசிப்பதில் கைதேர்ந்தவர்கள்.[1]

17. கடம்

கடம் என்னும் இசைக்கருவி குடமுழா எனப் பொருள் படுகிறது. சூடாமணி நிகண்டை ஆதாரமாகக் காட்டப்படுகிறது.[2]

தோல் போர்த்தப்படாமல் வயிற்றைச் சாரவைத்து இயக்கப் படும் மண்பானையாகிய இசைக்கருவியே இக்காலத்தில் கடம் என்று வழங்கப்படுகிறது.

18. கடமுழக்கு

"கடமுழக் கின்னிசையிடை யிடை யியம்ப"[3] என்ற இலக்கியத்தொடர் குடமுழா என்ற தோற்கருவியின் இசையைக் குறிப்பதாகத் தோன்றுகிறது.

19. கண்விடுதூம்பு

தோற்கருவிகளுள் ஒன்று என்று அடியார்க்கு நல்லார் கூறுகிறார்.[4] இசைநூலார் இதைமென்மைக்கருவி என்று வகைப்படுத்துகின்றனர். அகத்து இடைக்கருவி வகையில் சேர்க்கப்படுகிறது. பின்னும் வேறுமுறையில் புறமுழவாகிறது.[5]

20. கணப்பறை

கணப்பறை என்பது ஒருவகைத் தோற்கருவிஎன்று அடியார்க்கு நல்லார் மூலம் அறிகிறோம்.[6] இசை நூலார் தோற்கருவிகளை வகைப்படுத்திய முறைப்படி கணப்பறை என்பது வன்மைக் கருவி யாகும். வேறு முறைப்படி பாகுபடுத்தும் பொழுது கடைக்கருவி யாகிறது. இந்தக் கருவி புறப்புற முழவு.[7]

---

1. தமிழர்இசைக்கருவிகள், அண்ணாமலைப்பல்கலைக்கழகம்.
2. பல்கலைக்கழகத் தமிழகராதி.
3. பெருங்-இலாவாணகாண்டம்—நகர்கண்டது.
4. சிலப். 3.27. உரை.
5. பஞ்சமரபு. உரை.
6. சிலப். 3. 27 உரை.
7. பஞ்சமரபு. உரை.

21. கண்டிகை

கண்டிகை என்ற தோற்கருவியின் பெயர் மட்டுமே இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளது. ஒலிபடுகின்ற கருவியென்றும் கூறப்படுகிறது.[1]

பிங்கல நிகண்டிலே கண்டிகை என்பது ஒருவகைப்பறை என்று கூறப்படுகிறதாம்.[2]

கண்டை என்ற பெயருடன் இக்கண்டிகை, தஞ்சை-தில்லை ஸ்தானம் கிரிதஸ்தானேஸ்வரர் கோயில் கல்வெட்டில் இடம் பெறுகிறது. இக்கல்வெட்டு முதலாம் ஆதித்தியன் காலத்தது.

''மத்தளம் எட்டும், தாளம் ஒன்றும், கரடிகையொன்றும் கண்டையாறும், திமிலையொன்றும்''—என்பதே அக்கல்வெட்டுத் தொடர்.

22. கரடிகை

கரடிகை என்பது நம்இலக்கியங்களில் இடம்பெறும் மற்றொரு வகைத் தோற்கருவியாகும். கரடி கத்தினாற்போலும் ஓசையையுடையதாம். இந்த ஓசை காரணம்பற்றியே இந்தக் கருவி கரடிகை என்னும் பெயர் பெற்றது என்று கூறுகிறார் அடியார்க்கு நல்லார்.[3]


கரடிகை அளவு கருவியாகிய மரக்கால் போன்று அமைப்புக் கொண்டது.[4]

இசை நூலில் இந்தக் கருவி சமக்கருவி என்ற வகையின் பாற்படுகிறது. வேறு வகையான பிரிவில் தலைக்கருவியாகிறது. அக முழவு வகையைச் சார்ந்தது. பிரமன், உருத்திரன், விட்டுணு என்ற கடவுளர் மூவர்க்கும் இயற்றப்படுவனவாகக் கூறப்படும் கருவிகளுள் கரடிகை என்ற இந்தத் தோற்கருவியும் ஒன்று.


கரடிகை பலாமரத்தால் செய்யப்படும். கனக்கரடிகை எனக் கூறி, கீழ்க்காணும் அளவுகள் கூறப்படுகின்றன.

---


1. நீலகேசி-புத்தவாதச்சருக்கம்.
2. பல்கலைக் கழகத்தமிழ் அகராதி.
3. சிலப் 3:27 உரை.
4. கல்லாடம் 85.




கினிக்கட்டி



குந்தலம்



சூரிய பிறை — சந்திர பிறை



செண்டா

கரடிகைக்கு நீளம் முப்பத்திரண்டு விரல். அதன் சுற்றளவு நாற்பது விரல். குண்டின் அளவு பதினாறு விரல். முகத்தினளவு பன்னிரண்டு விரல். பருமை ஒரு விரல் கோலளவு பதினாறு விரல். குண்டினளவு சிறுவிரல். வார்த்துளை எட்டு.[1]

முதலாம் ஆதித்தியன் காலத்துக் கல்வெட்டில் கரடிகை இடம் பெற்றிருப்பதை "கண்டிகை" என்ற தலைப்பில் கூறியுள்ளோம்.

23. கல்லல்

கல்லல் என்ற தோற்கருவி மூன்று உடல் பொருந்திய மூன்று முகமுடைய ஒரு தோற்கருவி. இம்முகங்கள் ஒவ்வொன்றிலும் எவ்வெட்டுக் குறுந்தடிகள் வைத்து வாரால் விசித்துக்கட்டப் பட்டிருக்கும் என்ற செய்திகளும் நம் பண்டைய இலக்கியங்கள் மூலம் அறிகிறோம்.[2]

24. கல்லலகு

கல்லலகு என்ற தோற்கருவியின் பெயர் இலக்கியத்தில் இடம் பெறுகிறது தண்ணுமை, மொந்தை, துத்திரி, கல்லவடத்திரள் போன்ற வெவ்வேறு தோற்கருவிகளுடன், கல்லலகு என்ற இந்தக் கருவியும் கூறப்பட்டுள்ளது[3].

25. கல்லவடத்திரள்

இந்தக் கருவியும் மேற்கூறியதைப்போல மற்ற ஒரு சில தோற் கருவிகளுடன் சேர்த்துக் கூறப்பட்டுள்ளது.

தாமரை மலர்வடிவம் எழுதப்பெற்ற இருபத்தைந்து அங்குலி வரையில் இரண்டு இரண்டு விரலாக அணைத்து விளரிப்பண்களை நிறுத்தி, மூன்று முகங்களையுடைய சேல்மீனுடன் மயிர்க்கயிறும் கட்டப்பட்டிருக்கும். விரலால் தாக்கப்பட்டு ஒலிக்கப்படும்.[4]

இந்தத் தோற்கருவியில் மும்முகக்கயல் வடிவு அமைந் திருப்பது அறிந்து வியக்கத்தக்க ஒன்றாகும்.

---

1. பஞ்சமரபு உரை.
2. கல்லாடம் 85.
3. கல்லாடம் 30.
4. ,, 8.

''கல்லவடமிட்டுத் திசை தொழுதாடியும்'' என்ற தேவார அடியை மேற்கோள்காட்டி, கல்லவடம் என்று ஒன்று இருப்பதாகக் கொண்டு அக்கருவி ஒருவகைப்பறை என்ற பொருள் கூறப் பட்டுள்ளது.[1]

26. கிணை

கிணைப்பறை மரவைரத்தால் செய்யப்படுகிறது.[2] புதிய தோல் போர்த்தப்பட்டு வலிமையுடைய வாரினால் இழுத்துக் கோத்துக் கட்டப்பட்டது. ஒரு கண்ணையுடையது சிறிய அழகிய தெளிந்த கண் அது. இந்தக் கருவியின் கண்ணில் அடிக்கும் சிறு கோல் கட்டப்பட்டிருக்கும்[3]. அது நுண்ணிய கோல்.

யானையின் அடிச்சுவடு போன்ற வட்டமான வடிவை யுடையது. யாமையின் செறிந்த வயிற்றினையொத்தது. முழுமதி போன்றது.

சிறிய கோலால் அடித்து ஒலி எழுப்புவர்.[4] தொடர்ந்து கொட்டும் பொழுது கிணைப்பறை கிழியும் தன்மையுடையது எனவும் தெரிகிறது.[5] கிணையின் ஒலி அச்சத்தினைத்தரும் இயல்பினையுடையது. அரித்த ஓசையையும் எழுப்பும். விடியற் காலத்தே ஒலிக்கப் பெறுவது.[6] கிணைக்கருவியை முழக்கும்போது சின்னம் என்ற துளைக்கருவியையும் குயிலுவன் ஊதுவான்.[7]

வார் அறுப்புண்டு சீர்குலைந்து கிடந்த தன்னுடைய தெளிந்த கண்ணையுடைய மாக்கிணையைப் புதிய வார் கொண்டு விசித்துக் கட்டி, இசைக்குரிய கண் அமைக்கப்பட்ட புதிய வலிய தோலினை யுடைய அளவில்லாத மாலைபோன்ற நெடியவார்கள் ஒலிக்க இயக்கிக் கிணைக் கண்ணுறையும் தெய்வத்திற்கு வழிபாடு ஆற்றக்கருதியவழி பெறற்குரிய உணவைப் பெறுவது தாழ்க்கு மெனக்கருதி, அத்தெய்வத்தையும் வழிபடவில்லை.[8] என்ற

1. சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதி.
2. கல்லாடம் 51.
3. புறம் 382.
4. ,,
5. புறம் 378.
6 புறம் 379.
7. அகம் 356.
8. புறம் 399.

இலக்கியச் செய்தியால் கிணைக்கண்ணுறையும் தெய்வத்திற்குக் கிணை வழிபாடு செய்துவரும் மரபினையுடையவர் நம் பண்டைத் தமிழ் மறவர்கள் என்பதை அறியமுடிகிறது.

கிணைகொட்டுவோன் வேளாளரைப் புகழ்ந்து பாடுவது உண்டு. தாளத்தோடு இசைப் பாட்டைப்பாடி கிணையை முழக்குவான்.[1]

கிணைப்பறையைக் கரந்தையார் கேட்டனர். வெட்சியார் கொண்ட ஆனிரையை மீட்டுவருவது உறுதியாம்.

யாமை பிளந்தவாயுடன் கள்ளின்தாரையைப் பருகுவதற்குப் பிறழும் பொழுது கிணைப்பறைபோல் தோற்றம் அளித்ததாம். மலைகளின் அழகு ஒழிதலை, கிணைகளின் கண்களின் முழக்கம் ஒழிதலுடன் ஒப்பிட்டுக் கூறி விளக்குகிறார் புலவர்.

கிணை என்றால் மருதப்பறை, தடாரிப்பறை, ஒரு கண்மாக் கிணை, உடுக்கை, போர்ப்பறை, பறை, புட்பறை, துடி என்றெல்லாம் அந்தந்த இடங்களில் இலக்கியங்களின் உரையாசிரியர்கள் பொருள் கூறிச் செல்கின்றனர்.

''அப்பாற் புலமெறியு மெயினர் மரத்துடி
நெடுநகரிரட்டும் களியரரி கிணையே''[2]

என்ற செய்யுளில் கிணையும் துடியும் ஒன்றுபோலவே கூறப் பட்டுள்ளது.

கிணையைக் கொட்டுவோன் கிணைவன், கிணையன், கிணை மகன் என்றெல்லாம் கூறப்படுகிறான்.

கிணைப்பறை கொட்டுவோனுடைய மனைவி கிணைமகள் எனப்படுகிறாள்.

கிணைவர் தமது இனிய குரலாலே கிணை என்னும் தோற் கருவியினோடே பாடுகின்றனர். விடியற்காலத்தே வந்துபாடும் மரபினையுடையவர். கழனியிடத்துச் சென்று கிணையை முழக்கி வேளாளனின் கீர்த்தியைச் சொல்லுவர். மாளிகையிடத்து வந்து கிணை கொட்டுவர். நெடுமனைமுற்றத்து நின்று இசைப்பர். புரவலரை நாடிச் சேய்மையிலுள்ள நாடுகட்கும் செல்லுவர்.

---

1. புறம் 186.
2. கல் 59.

27. கிரிக்கட்டி

கிரிக்கட்டி என்னும் இக்கருவி கூம்புவடிவமான இரட்டைப் பறைகள். சுமார் ஓரடி உயரமுள்ளது. ஒன்பது அங்குல விட்டம் கொண்டது. இவை இரண்டும் ஒன்றாக இணைக்கப்பட்டிருக்கும். இக்கருவியை முழக்குவோன் தன் இடுப்பில் இக்கருவியைக் கட்டிக் கொள்ளுவான். வளைந்த பிரம்புகளால் தாக்கி இயக்கப்படுவது இப்பறை. அந்தப் பிரம்பு தோலாலோ துணியாலோ போர்த்தப் பட்டிருக்கும். இரண்டு பறைகளில் ஒன்று நல்ல ஒலியை எழுப்பும். அதே சமயம் மற்றொன்று சற்று மாறான ஒலியை உண்டாக்கும். நின்றுகொண்டே இக்கருவி முழக்கப்படுகிறது.

நாகசுரக் கச்சேரிகளில் துணைக் கருவியாகப் பயன்படுகிறது. கிராமிய நடனங்களிலும் பயன்படுத்தப்படுகிறது. கோயில் திருவிழாக்கள் போன்ற முக்கியமான நாட்களில் சில கோயில்களி லும் முழக்கப்பட்டுவருகிறது. திருவாரூர்க் கோயிலில் வழக்கில் உள்ளது.

கிரிக்கட்டி, கிணிக்கட்டி, கிடிக்சட்டி, கிடிக்கட்டு என்றெல்லாம் கூட வழங்கப்படுகிறது.[1]

28. குடமுழா

விளக்கம் 'முழவு' என்ற தலைப்பில் காண்க.

29. குண்டலம்

குண்டலம் என்ற ஒரு வகைத் தோற்கருவி நம்மிடையே பண்டு முதல் இன்றுவரை வழக்கிலுள்ளது. இக்கருவி இரண்டாக அமைந்திருக்கும் வகையைச் சார்ந்ததாகும். ஒவ்வொன்றும் வெவ்வேறு வகையான பண்களை உண்டாக்கும் வகையில் அமைப்பு கொண்டதாகும். அவற்றின் கண்களில் வளைந்த மூங்கில் தடிகளின் முனைகளால் தாக்கி ஒலி எழுப்புவர். குண்டலம் பொய்க்கால் குதிரை ஆட்டங்களில் துணைக்கருவியாக உபயோகப் படுத்தப்படுகின்றது.[2]

---

1. Musical Instruments of India, S. Krishnasamy, P. 95.
2. Mirror - Journal - Jan, 81, Sujata Nagarajan, P. 71.

30. கும்மடி

கும்மடி என்னும் இக்கருவி காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளது. இந்த இசைக்கருவி மண் கூஜாவின் உருவம் கொண்டது. இந்தக் கூஜாவின் அடிப்பாகம் இரண்டு அங்குல விட்டத்திற்குத் தோலினால் மூடப்பட்டுள்ளது. மூடப்பட்டு இரும்பு வளையங்களின் மேல் பொதியப்பட்டுள்ளது. பத்துத் துளைகள் உள்ளன. அத்துளைகளிலிருந்து மேற்பரப்பில் உள்ள மற்றொரு வட்ட வளையத்துடன் நால்கயிறுகளால் இறுக்கிப் பிணைக்கப் பட்டிருக்கும். மிருதங்கம் எந்த நிலையில் வைத்து வாசிக்கப் படுகிறதோ அதே நிலையில் இந்த இசைக் கருவியும் வைத்து வாசிக்கப்படுகிறது. தோல் சுற்றப்பட்ட பாகத்தை வலது கை விரல்களினால் தட்டி வாசிக்கின்றனர். மேல்பாகத்தின் முனையில் இடது உள்ளங்கையால் எழுப்பப்படும் ஒலி கும்கார ஒலியைக் கொடுக்கிறது.[1]

31. கைத்திரி

கைத்திரி என்ற பெயருடன் ஒரு தோற்கருவி நம் பண்டைய இலக்கியத்தில் இடம் பெறுகிறது.

குழையா நின்ற உடலினையுடையது. பரந்த தலையினையுடையது. அதன் கண்கள்—அடிக்கும் இடம்—யானைக் கன்றின் அடி போன்று பரந்திருக்கும். கயிறுகளால் வலித்துக் கட்டப்பட்டிருக்கும். பெருவிரலினை நிமிர்த்திப் புடைப்பர். இரண்டு விரல்களை உயர்த்தி மாறுபட முழக்குதலாலே முழங்கும் தன்மையது. புண்ணியம் மிக்க மந்திரியாகிய வியாழனுக்குரிய பூசை நாளிலே இந்தக் கருவி முழக்கப்படுகிறது.

கையினால் ஒலியைத் திரித்தலால் கைத்திரி எனப் பெயர் பெற்றதாம். இதே கருவியை இடக்கை என்றும், துடி என்றும், உடுக்கை என்றும் உரைகாரர்கள் குறிப்பிடுகின்றனர்.[2]

32. கொட்டு

கொட்டு என்ற பெயர் விளக்கத்துடன் ஒருவகைத் தோற் கருவி காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளது.[3]

---

1. அருங்காட்சியகம், எழும்பூர், சென்னை.
2. கல்லாடம் 8.
3. அருங்காட்சியகம், எழும்பூர், சென்னை

''பதினோராடலும் கொட்டும்''-என்ற சிலப்பதிகார அடிகளில் கொட்டு என்ற சொல் ஆட்சி பெறுகிறது. கொட்டு என்பது கூத்து விகற்பங்களுக்கு அமைந்த வாச்சியக் கூறுகள் என்று பொருள் கூறுகிறார் அடியார்க்கு நல்லார். கீதத்திற்கு மட்டுமே வாசிக்கப்படும் கீதாங்கம், நிருத்தத்திற்கு மட்டுமே வாசிக்கப்படும் நிருத்தாங்கம், கீதம், நிருத்தம் ஆகிய இரண்டிற்கும் வாசிக்கப்படும் உபயாங்கம் ஆகிய இவற்றைப் பொதுவாகக் குறிப்பது இந்தக் கொட்டு என்ற சொல் என்று அடியார்க்கு நல்லார் கருதுகிறார்.[1]

கொட்டு மத்தளம் என்று ஒரு கருவியுண்டு. இந்தக் கருவியைக் குச்சியால் அடித்து ஒலிப்பர். ஒரு சில கோயில்களில் வாசிக்கப் பட்டு வந்த கருவி இது.[2]

33. கோட்பறை

நகர மக்களுக்குச் செய்திகளைத் தெரிவிக்க முழக்கப்பட்ட பறை இது. (செய்திகளைக் கொள்ளுங்கள்) என அறிவித்தமையால் கோட்பறை என்று பெயர் பெற்றது போல் தோன்றுகிறது.[3]

34. சகடை

சகடை என்று ஒரு தோற்கருவியின் பெயர் நமக்குக் கிடைக்கிறது. சம்பர் காலத்தில் வழக்கிலிருந்த பறைகளுள் ஒன்றாகக் கருத இட மளிக்கிறது. மேலும் போர்ப்பறைகளுள் ஒன்றாக இது வழங்கி யிருக்கலாம்.[4]

சகடை கொட்டி என்றால் முரசடிப்போன் என்று பொருள்.[5]

35. சந்திரபிறை-சூரியபிறை

சந்திரபிறை சூரியபிறை இரண்டும் எளிய வகையைச் சார்ந்த தோற்கருவிகள். சந்திரன் என்ற சொல்லும், சூரியன் என்ற சொல்லும் அவற்றின் அமைப்பைக் குறிக்கும் சொற்களாக அமைந்துள்ளன. சூரியபிறை என்பது முழுவட்ட வடிவமானது.

---

1. சிலப். 3:14 உரை.
2. A Dictionary of the South Indian Music and Musicians, Vol II.(G-K), Prof. P. Sambamoorthy.
3. பெருங். வத்தவ. கனாவிறுத். 62.
4. கம்ப இராமாயணம்—யுத்தகாண்டம்—பிரமாத்திரப் படலம் 5.
5. சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதி.

சந்திரபிறை பிறை வடிவானது. இந்த இரண்டு கருவிகளும் இருபத்தைந்து செண்டிமீட்டர் விட்டமுள்ளவை. சூரியபிறை வட்ட வடிவமான இரும்பு வளையத்தாலானது. சந்திரபிறை பிறை வடிவமான (முக்கால் வட்ட வடிவமான) இரும்பு வளையத்தாலானது. அந்த வளையங்களின் மீது தனித்த முறையில் பதப்படுத்தப்பட்ட மெல்லிய தோல் போர்த்தப்பட்டிருக்கும். சட்டத்திலுள்ள கைப்பிடியின் முனையில் இரும்பு பட்டை ஒன்று இணைக்கப்பட்டிருக்கும். இந்தப் பட்டை இசைக்கருவியை முழக்குவோனின் நெற்றியைச் சுற்றிலும் கட்டப்படும். இரண்டு கருவிகளிலும் இருபக்கங்களின் தோலின் மேல் குச்சி கொண்டு அறைந்து வாசிக்கிறார்கள். சந்திரபிறை என்பது சந்திரமண்டலம் என்றும் சூரியபிறை என்பது சூரியமண்டலம் என்றும் வழங்கப்படுகிறது.[1]

இந்த இரண்டு தோற்கருவிகளும் சாதாரணமாக மாரியம்மன் கோவில்களிலும், மற்றும் பல கிராமதேவதை கோவில்களிலும் இசைக்கப்படுகின்றன. தென்னாட்டில் காளாஸ்திரியில் இந்தக் கருவிகள் வழக்கிலுள்ளன. காட்சியகத்தில் இவை இரண்டும் வைக்கப்பட்டுள்ளன.[2]

36. சந்திரவளையம்

சந்திரவளையம் என்ற தோற்கருவி நாம் மேல் கூறிய சந்திர பிறை என்ற கருவியைக் குறிப்பதே எனக் கருதுகின்றனர்.[3]

இந்தத் தோற்கருவி மென்மைக்கருவி என்ற வகையினது என்பது இசைநூலார் கொள்கை.[4]

37. சல்லரி

சல்லரி என்ற தோற்கருவி ஓரிடத்தைத் திறந்து குமிழினை உள்ளே கட்டிய உடலினையுடையது. இந்தக் கருவியை உள்ளங் கையாலும், நுனி விரலாலும் தாக்கி, முழக்கி, ஒலிப்பர். பதஞ்சலி, வியாக்கிரபாதர் முனிவர்களுக்காக இறைவன் நடனம் ஆடிய பொழுது இந்தக் கருவி இசைக்கப்பட்டுள்ளது.[5]

---

1. Musical Instruments, B. Deva, P. 30.
2. அருங்காட்சியகம், எழும்பூர். சென்னை.
3. A Dictionary of South Indian Music and Musicians, vol. I (A-F), Prof. P. Sambamoorthy.
4. பஞ்சமரபு-உரை.
5. கல்லாடம்.

சங்கு, முரசு, தாரை ஆகிய இசைக்கருவிகளுடனும் இக்கருவி சேர்த்து இசைக்கப்பட்டதாகத் தெரிகிறது.

சல்லரி என்பது பறைப்பொது என்றும், திமிலைப்பறை யென்றும் பொருள் கூறப்படுகிறது.[1]

38. சல்லிகை

சிலப்பதிகாரத்தில் தண்ணுமைக் கருவி வாசித்தலைப் பற்றிய குறிப்பு இடம் பெறுகிறது. அங்கே சல்லிகை என்ற தோற்கருவி யின் பெயரைக் குறிப்பிடுகிறார் அடியார்க்கு நல்லார். சல்லென்ற ஓசையையுடைத்தாதலால் சல்லிகை எனப் பெயர்பெற்றது.[2]

இசைநூல் இக்கருவியை சல்லி என்று கூடக் குறிப்பிடுகிறது. சமக்கருவி என்ற வகையைச் சார்ந்தது. மேலும் ஒரு வகையில் தலைக்கருவி என்று பகுக்கப்படுகிறது. அகமுழவு வகையைச் சார்ந்தது. பிரமன், விட்டுணு, உருத்திரன் என்ற கடவுளர் மூவர்க்கும் இயற்றப்படுவனவாகக் கூறப்படும் கருவிகளுள் சல்லி கையும் ஒன்று. இக்கருவிக்குத் தெய்வம் நாராயணன். சல்லிகை என்ற கருவிக்கு நீளம் விரல் நாற்பது. உயரம் அறுபத்தெட்டுவிரல். குண்டளவு பன்னிரண்டு விரல். குண்டின் பருமை நால்விரல். வார்த்துளை பத்து. வலமுகத்தை வன்தோலாகவும் இடமுகத்தை மென்தோலாகவும் போர்த்துவர். வலமுகத்தைக் கொச்சகமாக வும், இடமுகத்தை வராளமாகவும்கட்டி, அதனில் ஆறாணி தைத்து அதனி லோடுகை மரபு என்றவாறு.[3]

39. சிறுபறை

சிறுபறை என்ற இந்தக் கருவியின் மேல் போர்த்தப்பட்டிருந்த தோல் மான்தோல்.[4] சிறிய தோல்வார் கொண்டு பிணிக்கப்பட் டிருந்தது. 'கல்'லென்னும் ஓசைபடுமாறு ஒலிக்கும் இயல்பினது. சிறுபறையின் ஒலி தவளையின் ஒலிபோன்றும், ஆந்தையின் ஒலி போன்றும் ஒலித்ததாம். இப்பறையைக் கலவர் இசைப்பர்.[5]

சிலம்பு, கிண்கிணி, மேகலைபோன்ற அணிகளின் ஒலியோடு சிறுபறையின் ஒலி ஒத்திருந்தது. ஆகவே அந்த அணிகள் சிறுபறை

---

1. சென்னைப் பல்கலைக் கழகத்தமிழகராதி.
2. சிலப். 3. 27 உரை.
3. பஞ்ச மரபு-உரை.
4. மலைபடுகடாம்.
5. சூளாமணி-நாட்டுப் படலம்.

போன்று ஒலித்தன, சிறுபறை அந்த அணிகள்போன்று ஒலித்தது என்றெல்லாம் இலக்கியங்களில் புலவர்கள் கூறியுள்ளனர்.

குழல், துடி, ஆகுளி, தொண்டகம், வயிர், யாழ், முழவம், தண்ணுமை போன்ற இசைக் கருவிகளுடன் சேர்ந்து சிறுபறை ஒலிக்கப்பட்டு வந்துள்ளது.

உரையாசிரியர்கள் சிறுபறை என்றால் பம்பை என்று பொருள் கூறிச் செல்கின்றனர். சில இடங்களில் ஆகுளி என்ற சொல்லுக்கும் சிறுபறை என்று பொருள் கூறப்பட்டுள்ளது.

தொண்டகச் சிறுபறையென்றே ஒரு கருவியின் பெயர் காணப் பட்டாலும், 'தொண்டகம் தொடுமின், சிறுபறை தொடுமின்' என இளங்கோவடிகள் கூறுவதால், அவர் தொண்டகம், சிறுபறை என்பனவற்றைத் தனித்தனி வெவ்வேறு இசைக் கருவிகளாகக் கருதியதாகத் தெரிகிறது.

பாட்டியல் செய்திகள் மூலம் பிள்ளைத்தமிழில் (சிறுபிரபந்த வகைகளுள் ஒன்று) சிறுபறைப்பருவம் என்ற ஒரு பருவம் பத்து அல்லது பதினொரு பாடல்கள் கொண்டு பாடப்பெறும் எனத் தெரிகிறது. சிற்றிற்பருவம், சிறுதேர்ப்பருவம் ஆகிய இரண்டு பருவங்களும் சேர்ந்து, சிறுபறைப் பருவம், சிற்றிற்பருவம், சிறு தேர்ப்பருவம் என்ற இந்த மூன்று பருவங்களும் ஆண்பாற் பிள்ளைத் தமிழுக்கு மட்டுமே உரியன என்றும், பெண்பாற் பிள்ளைத் தமிழில் இந்த மூன்று பருவங்களும் வாரா என்றும் தெரிகிறது.

இதன் மூலம் குழந்தைகள் 'சிறுபறை' கொட்டி விளையாடும் பழக்கம் உண்டு என அறியலாம். குழந்தைகள் இரண்டாவது வயதில் சிறுபறை கொட்டி விளையாடுவதாகப் பிள்ளைத் தமிழ் நூலில் வைத்துப் பாடப்படுகிறது. 'இரண்டாமாண்டில் சிறுபறை கொட்டலும்' என்று திவாகரம் கூறுகிறது.

இசை நூற் கருத்துப்படி சிறுபறை வன்மைக் கருவி வகையைச் சார்ந்ததாகிறது. கடைக்கருவி என்றும், புறப்புறமுழவு என்றும் கூட சிறுபறை வகைப்படுத்தப்படுகிறது. தெய்வம் என்ற தலைப்பில் காளி, சாத்தன், காடுகாள் ஆகிய கடவுளர் மூவர்க்கும் இயற்றப்படுவனவாகக் கூறப்படும் கருவிகளுள் சிறுபறையும் ஒன்றாகும்.[1]

---

1. பஞ்சமரபு-உரை.

40. சுத்தமத்தளம்

சுத்தமத்தளம் என்ற கருவி சாதாரண மிருதங்கத்தைப் போன்ற அமைப்பைக் கொண்ட ஒரு கருவியாகும். ஆனால் உருவில் சற்று பெரியது வலப் பக்கத்து அடிக்குமிடத்திலுள்ள கரிய மார்ச்சனை அமைந்தபகுதி மிருதங்கத்தில் இருப்பதைவிடப் பெரிய வட்டமாக இருக்கும். மிருதங்கத்தைவிட அடர்த்தியாக வும் இருக்கும். உரத்த ஒலி எழுப்பும் தன்மையுடைய கருவியாகும் இது. அந்த ஒலி நீண்ட தூரம் கேட்கும் இயல்பினது.

கேரளத்தைச் சேர்ந்த கதகளி நாட்டிய நாடகத்தில் மிக முக்கியமான பக்க இசைக்கருவியாக அமைந்துள்ளது. கேரள நாட்டின் பஞ்ச வாத்தியங்களிலும் ஒன்று.

தென்னாட்டுக் கோயில்களில் வழிபாட்டுக் காலங்களில் சுத்த மத்தளம் வாசிக்கப்படுகிறது. அந்த வகையில் திருவாரூர்க் கோயிலில் வாசிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.[1]

41. செண்டா

செண்டா என்ற தோற்கருவி கூம்பு வடிவமானது. இரண்டு அடி நீளமுள்ளது. ஓரடி விட்டம்கொண்டது. இருமுகங்களும் தோலால் போர்த்தப்பட்டிருக்கும். ஒரு குறிப்பிட்ட பண்ணிசைக் கும் நிலையில் அமைக்கப்பட்டது. இந்தக் கருவியை முழக்குவோன் தன் முன்பக்கத்தில் தொங்கவிட்டுக் கொள்ளுவான். நின்ற நிலையிலேயே வாசிக்கப்படும் கருவி இது. இரண்டு கைகளிலும் இரண்டு குச்சிகளை வைத்துக்கொண்டு அவற்றால் தாக்கி ஒலி எழுப்புவர். யட்சகான நாட்டிய நாடகத்தில் பயன்படும் முக்கிய மான கருவியாகும் இது. கேரள நாட்டின் கதகளி நாட்டிய நாடகத்திலும் செண்டா இசைக்கப்படுகிறது. பல மைல்கள் தூரத்துக்கப்பால் கேட்கும் அளவு உரத்த ஒலி எழுப்பும் தன்மையது.

கதகளி நாட்டியப்பாடல் அரங்குகளிலும் செண்டா வாசிக்கப்படுவது உண்டு. மத்தளத்துடன் சேர்த்து வாசிக்கப்படு கிறது. மத்தளம்போன்ற இன்னும் சில இசைக்கருவிகளுடன்

---

1. Musical Instruments of India, S. Krishnasamy, Pp. 91—92.
இதுபற்றி 'மத்தளம்'—என்ற தலைப்பின் விளக்கத்திலும் காண்க.

இணைந்து செண்டா ஒலிக்கும்பொழுது கைமுத்திரைகளுக்கு ஒத்த இசையொலியை எழுப்பும் இயல்பு வாய்ந்தது. இக்கருவிகளின் தொகுதிக்கு செண்ட மண்டலம் என்று பெயர்.[1]

செண்டை என்றால் ஒருவகைக் கொட்டுவாத்தியம் என்று பொருள்கூறி "திமிலை, செண்டை, குறடு"—என்ற தொடரை ஆதாரமாகக் காட்டுவர்.[2]

42. டமாரம்

இது மரத்துண்டினாலும், தோலினாலும் செய்யப்பட்டுள்ளது. குவிந்த வடிவமுள்ள இந்த இசைக் கருவியைக் கோயில் ஊர்வலங்களில் எருதின் மேல்வைத்து இரண்டு குச்சிகளினால் வாசிப்பர். காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளது[3].

டமாரம் என்பது கூம்பு வடிவமான இரண்டு தோற்கருவிகள். மரத்தாலானது. தோல்வாரால் வலித்துக் கட்டப்பட்டது. இரண்டு குச்சிகளால் அடித்து ஒலி எழுப்பப்படுகிறது. அக்குச்சிகளுள் ஒன்று வளைவானது. மற்றொன்று நேராக இருக்கும். தென்னாட்டில் கோவில் ஊர்வலங்களில் எருதின்மேல்வைத்து, பின்பக்கம் ஒரு சிறுவன் அமர்ந்து, வாசித்துக் கொண்டு செல்லுவான். பின்னால் இறைவன் வலம் வருவதை அறிவித்துக் கொண்டே எருது முன் செல்லும்.[4]

டமாரம் என்பது ஒட்டகத்தின் மேல்வைத்துக் கொட்டப்படுவது.[5] டம்மாரம் என்றும், டம்மானம் என்றும்கூட வழங்கப் படுகிறது[6].

43. தக்கை

தக்கை என்று ஒரு தோற்கருவி நம் நாட்டில் வழக்கில் இருந்து வந்துள்ளது.[7] தக்கை என்பது அகப்புறமுழவு மூன்றனுள் ஒன்றாகிய ஒரு வகைப்பறை[8]

---

1. Musical Instruments of India, S. Krishnasamy, P.92.
2. கம்ப (பிரமாத்.5) சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதி.
3. அருங்காட்சியகம், எழும்பூர், சென்னை.
4. A Dictionary of South Indian Music and Musicians, (Vol. I. A-F), Prof. P. Sambamoorthy
5. விறலி விடுதூது 67.
6. சென்னைப் பல்கலைக் கழகத தமிழகராதி.
7. கம்ப. யுத்த. பிரமாத்திரப்படலம்.
8. பிங்கலம்,

இசை நூலார் கருத்துப்படி இக்கருவி மென்மைக்கருவி வகையைச்சாரும். இசைக்கருவி என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளது. வேறு வகையில் புறமுழவு என்றும் கூறப்படுகிறது. வயிரவன், முருகன், துர்க்கை ஆகிய கடவுளர் மூவர்க்கும் இயற்றப்படுவனவாகக் கூறப்படும் கருவிகளுள் தக்கையும் ஒன்று.[1]

தக்கை என்ற கருவியை வைத்துக்கொண்டு இராமாயணத்தைப் பாடும் வழக்கம் நம்மவரிடையே இருந்திருக்கிறது. 'தக்கை இராமாயணம்' என்னும் நூல் இக்கருவியை இசைத்துக் கொண்டு பாடுவதற்காகவே பாடப்பட்டது. கொங்கு நாட்டில் இந்தச் சுவடி கிடைத்துள்ளது. ராவ்சாகிப் கு. அருணாசலக் கவுண்டர் அவர்கள் இந்த நூலைப் பதிப்பித்துக்கொண்டிருக்கிறார்கள்.*

44. தகுணிச்சம்

இந்தக் கருவி தகுணித்தம் என்ற பெயருடன் நம் இலக்கியத்தில் இடம்பெறுகிறது. இதழ் விரிந்த தாமரை மலரையொத்து இருந்ததாம் இந்தக் கருவி.[2]

தகுணிச்சம் என்று எழுதி பறைப்பொது என்றும்,[3] அகப்புற முழவுகளுள் ஒன்று.[4] என்றும் பொருள் கூறுகிறது பல்கலைக்கழக அகராதி.

'தகுணிதம்' என்றுகூட ஆட்சி இருப்பதாக, 'தகுணிதந் துந்துபி தாளம் வீணை''[5] என்ற தொடர் மூலம் அறியலாம்.

இசை நூலார் கருத்துப்படி தகுணிச்சம் மென்மைக் கருவிகளுள் ஒன்று, இடைக் கருவி வகையைச்சாரும். புறமுழவு என்று வகைப்படுத்தப்பட்டுள்ளது. வயிரவன், முருகன், துர்க்கை ஆகிய கடவுளர் மூவர்க்கும் இயற்றப்படுவனவாகக் கூறப்படும் கருவிகளுள் தகுணிச்சமும் ஒன்று.[6]

---

1. பஞ்சமரபு. உரை.
2. கல்லாடம் 85.
3. சூடாமணி
4. சிலப்பதிகார உரை.
5. காரைக்காலம்—திருவால 9.
6. பஞ்சமரபு. உரை.

* இச்செய்தி திரு மு. கோ. இராமன் அவர்களுடன் நேரில் உரையாடியபோது கிடைத்த செய்தி.

45. தட்டை

தட்டை என்ற இந்தக் கருவி தோற்கருவி வகையைச் சார்ந்ததே என்பது நம் பண்டை இலக்கியங்களின் மூலம் அறியும் செய்தி.

இன்னிசைக் கருவியுடை இசைவாணர் ஒடுங்கியனவாக இயற்றப்பட்டுள்ள நீராடுதற்றுறையிடத்தே (செல்லுங்கால் ஒன்றன்பின் ஒன்றாக) முழக்கும் தட்டையும் தண்ணுமையுமாகிய தோற்கருவிகள்—என்று கூறப்படும் செய்தி, தட்டை என்பது தோற்கருவியே என்ற கொள்கைக்குச் சான்று.[1]

[மூங்கிலைப் பிளந்து செய்யப்பட்டு, தட்டி ஓசையெழுப்பப் படும் கிளிகடிகரு வி ஒன்றும் வழக்கில் இருந்து வந்தது]

தட்டை என்றால் கரடிகைப் பறை என்றுகூடப்பொருள் கூறப்படுகிறது.[2]

46. தடாரி

தடாரிப் பறையானது படம் விரித்த பாம்பினது பொறியை ஒத்திருந்தது. அந்தத் தடாரியின்கண்-அடிக்கும் இடம்-அகன்றது. அடித்து அடித்து கையினது வடுபட்டுக்கிடந்தது. இரட்டைத் தாளத்தைத் தோற்றுவிக்கும் ஓர் இசைக்கருவி இது. அதற்குப் பொருந்த பொருநன் பேணிப்பாடுகின்றான். விடிகின்ற கிரணங் களையுடைய வெள்ளியெழுந்த செறிந்த இருளையுடைய விடியற் காலத்தில் இக்கருவி இசைக்கப்படும்.[3]

துண்டான வார்களால் செறியப்பிணித்து விசித்துக் கட்டப் பட்டிருக்கும். அரித்த ஓசையை எழுப்பும்.

தடாரிப் பறையை ஒலிக்கும் பொழுது சூடேற்றி அறைந்து பாடுவர். ஆகவே தோற்கருவிகளைச் சூடேற்றி அறைந்து ஒலிக் கும் வழக்கம் இருந்து வந்துள்ளது.[4]

யானையின் அடிச்சுவடு, முழுமதி, யாமை போன்ற வடிவ ஒப்புமை அமைந்திருந்தது.

---

1. ஐங்குறுநூறு-குறிஞ்சி-அன்னாய்ப்பத்து 215.
2. சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதி—''நடுவுநின்றி சைக்கு மரிக்குரற்றட்டை''—மலைபடுகடாம்.
3. பொருநராற்றுப்படை.
4. புறம் 319.

தடாரியை எடுத்துச் செல்லும்பொழுது அக்கருவியைத் தழுவிக்கொண்டு சுமந்துசெல்லுவர். அப்பறையினை வைத்துக் கொண்டு பொருநர் தெருவில் சுழன்று திரிவர்.

பாடும்பொழுது தூசு துடைத்துப்பாடும் பழக்கம் இருந்தது. பல நாள் பாடினால் தடாரிப்பறை கிழியும் இயல்பினது.

தடாரி என்ற இந்தச் சொல் தெடாரி என்றுகூட ஆளப் பட்டுள்ளது. தடாரி என்ற சொல்லுக்குக் கிணைப்பறை என்று கூட உரை எழுதியுள்ளனர்.

தடாரி என்றால் உடுக்கை என்றும், கிணைப்பறை என்றும், சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதி பொருள் கூறுகிறது.

பம்பை என்றும், பறை என்றும், வாத்தியப்பொது என்றும் பிங்கலம் கூறுகிறது.

இசைநூலில் மென்மைக்கருவி வகையில் சேர்க்கப்பட்டுள்ளது. மேலும் இடைக்கருவி என்ற பிரிவில் உள்ள கருவிகளுள் ஒன்றாக வும் கூறுகிறது. பின்னர் புறமுழவு வகையில் சேர்க்கிறது. வயிரவன், முருகன். துர்க்கை ஆகிய கடவுளர் மூவர்க்கும் இயற்றப் படும் இசைக் கருவிகளுள் தடாரியும் ஒன்று.[1]

47. தண்டோல்

குறுந்தடியால் அடித்து ஒலி எழுப்பப்படும் ஒருவகைப்பறை.

''கண்டான் செட்டிமார்களைக் கூயிக் காட்டுற்றான்
தண்டோலாங்குக் கிட்டிய தோர்ந்தான்''[2]

[தண்டு-குறுந்தடி; ஒல்-ஓசை தண்டோலா போடுதல்—தண் டோராபோடுதல்-ஒப்பு நோக்கி ஆய்வுக்குரியது]

48. தண்ணுமை

இரண்டு தலையும் குவிந்துள்ள நீண்ட உடலினையுடைய தண்ணுமை என்னும் தோற்கருவி, ஒரு முகத்தைத் தாழச்செய்து உயர்ந்த மற்றொரு முகத்தின்கண் இரண்டு கடிப்புக்களால் ஒலித் தலால் முழங்கும்.[3]

1. பஞ்சமரபு-உரை.
2. நற்குடிவேளாளர் வரலாறு-மூவேந்தர் ஆட்சிப்படலம் 25.
3. கல்லாடம் 8.

தண்ணுமை என்னும் தோற்கருவி இரண்டுதலையும், குவிந்துள்ள நீண்ட உடலினையுடையது, தோலால் போர்த்தப் பட்டது. ஒரு முகத்தைத் தாழச்செய்து, உயர்ந்த மற்றொரு முகத்தின்கண் இரண்டு கடிப்புக்களால் தாக்கி ஒலித்து முழக்கப் படுவது.

வாராலே நன்கிழுத்துக் கட்டப்பட்டுள்ளது. மடிந்த வாயை யுடையது. அதாவது தோலை மடித்துப் போர்த்த வாயை யுடையது. அகன்ற அழகிய வாயையுடையது. உள்ளகம் வெறி தாய் இருக்கும்.

கடிய ஒலி உடையது. கேட்போர் நெஞ்சத்தை நடுங்கவைக் கும். பறவைகளை அச்சுறுத்தி ஓட்டும். மறம் பொருந்திய வீரரைப் போருக்கு அழைக்கும் அரித்த குரலையுடையது.

இசைக்கு உயிர்போன்றது தாளம் (லயம்). ஆகலின் தாள வாத்தியமாகிய தண்ணுமையின் ஓசை இசையாகிய உடம்பில் உயிர்போலச் சிறந்து கலந்து மயங்கியது. [இசைக்கு உயிர் தாளம்—தாளவாத்தியம் மத்தளம். இசைக்கு உயிர் தாளவாத்தியங் களாகிய தோற்கருவிகளே என்றால் மிகையாகாது.]

நெற்கதிரை அரிகின்ற உழவர்கள் தண்ணுமையை முழக்கு கின்றனர். பிறர் நாட்டு ஆக்களைக் கவரும் களவுத் தொழிலை யுடைய எயினமறவர், ஆக்களினூடே நிற்கும் ஏறுகளைப்பற்றிக் கட்டுதற்பொருட்டு. தண்ணுமையின்கண்ணை அறைந்து முழக்கு வர். தண்ணுமையின் ஒலி பாலை வழியிலே செல்கின்ற வம்பலருடைய நெஞ்சம் நடுங்கும்படி ஒலிக்கின்றது. தண்ணுமை யின் முழக்கத்தைக் கேட்ட பருந்தின் ஆண் பறவை, தன்கிளை யாகிய பேடையும் பிறவும் வாழும் இடம் நோக்கிச் செல்லும்படி யான சுரம் என்று சுரத்தின் தன்மை கூறப்படும்பொழுது தண்ணுமையைப்பற்றிக் குறிப்பிடப்படுகிறது. கூத்தாடுவோர் தண்ணுமையை முழக்குவர்.

மணம் செய்தற்குத் தண்ணுமையின் தாளம் தளராமல் ஒலி எழுப்புவது முறை,

'ஆண்மையாளர்கள் அதற்கு அறிகுறியாகப் பொற்பூப்பெறுக' என்று கட்டளை இட்டு முழக்குகின்றது தண்ணுமை. வீரரைப் போருக்கழைக்கத் தண்ணுமை முழக்கப்படும். யானைமேல் இருப் போனாகிய வள்ளுவன் அரண் புறத்தே நின்று பொரும் பகைவர் பொருட்டு—பூக்கொள்ளுமாறு தண்ணுமை ஒலித்து ஏவுகிறது.

இதனைக் கேட்டு வீரர் விரைந்து சென்று போர்ப்பூவைப்பெறுவர். தன் ஒலியால் வேந்தனால் தரப்படும் காஞ்சிப் பூவைப்பெறுமாறு வீரரைப் பணித்தலைச் செய்தலின் 'ஏவல் தண்ணுமை' என்று புறம் குறிக்கிறது.

மன்றின்கண் தூங்கும் முழவினது காற்றெறிந்த தெளிந்த ஓசையையுடைய கண்ணின்கண் ஒலியைக் கேட்பின் அது போர்ப் பறை என்று மகிழ்வர். சிற்றூரில் வாழ்கின்ற மறவர்கள் ஏறு கோட்பறையாகத் தண்ணுமையை முழக்குகின்றனர்.

மறவர்கள் தோற்றவழித் தம்மிடமுள்ள தண்ணுமையைக் கைவிட்டு ஓடுவர்.

தண்ணுமை இசைப்போர் எத்துணை வன்மையுடையராயி னும், அது கண் கிழிந்தவழி இசைத்தல் கூடாது.

தண்ணுமை என்றால் மத்தளம், பறை, ஏறுகோட்பறை, முழவு, குடமுழவு என்றெல்லாம்கூட ஆங்காங்கே இலக்கியங்களில் உரையாசிரியர்கள் பொருள் கூறியுள்ளனர்.

தண்ணுமை என்றால் முழவம், வீணை, குழல், யாழ், சிறு பறை, தட்டை (தோற்கருவி) ஆகிய பிற இசைக் கருவிகளோடு கலந்தும் ஒலிக்கப்படுகிறது.

தண்ணுமையின் ஒலி மேகத்தின் ஓசைக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது. தண்ணுமையின் கண்ணின் அடித்தல் தலைவி வயிற்றில் அடித்துக் கொள்வதற்கு உவமையாகக்கூடக் கூறப் பட்டுள்ளது.

இசைநூல் தண்ணுமையை மென்மைக்கருவி என்றும், இடைக் கருவி என்றும், புறமுழவு என்றும் வெவ்வேறு வகையில் முறைப் படுத்திக் கூறுகிறது. வயிரவன், முருகன், துர்க்கை என்ற கடவுளர் மூவர்க்கும் இயற்றப்படுவனவாகக் கூறப்படும் இசைக்கருவிகளுள் தண்ணுமையும் ஒன்று.[1]

அகப்புறமுழவுகளுள் ஒன்றாகிய மத்தளம் என்றும், முழவு என்றும், உடுக்கை, என்றும் பொருள் காணப்படுகிறது.[2]

தண்ணுமை என்பது நிசாளத்தின் பெயரென்று சூடாமணி நிகண்டு கூறுகிறது.

---

1. பஞ்சமரபு உரை.
2. சென்னைப் பல்கலைக்கழக அகராதி.

49. தபலா-பாயா

தபலாவின் தலைப்பகுதியாகிய அடிக்கும் இடம் மிருதங்கத்தின் வலப்பக்கமுள்ள அடிக்கும் இடத்தை ஒத்திருக்கும். பாயாவின் தலைப்பகுதியாகிய அடிக்கும் இடம் மிருதங்கத்தின் இடப்பக்கமுள்ள அடிக்கும் இடத்தை ஒத்திருக்கும். தபலா, பாயா ஆகிய இரண்டு கருவிகளும் மரத்தாலோ, உலோகத்தாலோ, களிமண்ணாலோ செய்யப்படுவன. மிருதங்கத்தில் அமைத்துள்ளதைப்போல பாயாவில் கருப்பு மார்ச்சனை நிலையாக அமைக்கப்பட்டிருப்பதும் உண்டு. அதைப்போன்ற அமைப்பு-அந்தக் கருவட்டம்—தபலாவைப்போலவோ மிருதங்கத்தைப் போலவோ அடிக்கும் இடத்தின் இடைப் பகுதியில் இல்லாமல் முனைப்பகுதியில் ஓர் ஓரத்தில் அமைந்திருக்கும். பாயாவின் சுருதிகளைச்சரிப்படுத்தக் கட்டைகள் அமைக்கப்பட்டிருக்கும். இக்கருவிகள் தென்னாட்டில் இசையரங்குகளிலும், நாடகங்களிலும் வாசிக்கப்படுகின்றன. மேலும் இவை வடமத்திய இந்தியாவின் மிருதங்கமாகக் கருதப்படுகின்றன.[1]

பதின்மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்த அலாவுதீன் கில்ஜியின் ஆட்சிக் காலத்தில் புகழ்வாய்ந்திருந்த அமீர்குசான் என்ற இசைக் கலைஞரின் கண்டுபிடிப்பே இந்தத் தபலா என்ற இசைக்கருவி என்று கருதுகின்றனர். அராபிய நாட்டுச் சொல்லாகிய தப்ல் (Tabl) என்பதே தபலா என்ற பெயராக மாறி வந்திருக்கலாம் என்றும் கருதுகின்றனர்.

தபலாவும் பாயாவும் ஒன்று இடக் கையாலும், மற்றொன்று வலக் கையாலும் வாசிக்கப்படும் கருவிகளாகும். இரண்டு கருவிகளுமே தோல்வார்களால் வலித்துக் கட்டப்பட்டவை. தோலால் போர்த்தப்பட்டவை. இந்தக் கருவிகளின் முனைகள் கீழும் மேலும் தள்ளிவைத்துக் கொள்ளுவதற்கேற்ற முறையில் அமைந்தவை. அவ்வாறு தள்ளிவைத்து வாசிப்பதின் மூலம் தேவையான சுருதியில் வாசிக்கலாம்.

மாவும் நீரும் கலந்து மார்ச்சனை தயாரிக்கப்படுகிறது. இரும்புத் தூளையும் கலந்து தயாரிப்பதுண்டு. அவ்வாறு தயாரித்தால் நிலையாக இருக்கும். இந்தக் கலவை பாயாவின் தலைப்பாகத்தில் அடிக்கும் இடத்தில் தடவப்படுகிறது.

---

1. அருங்காட்சியகம், எழும்பூர், சென்னை.

பல வகையான இசையொலிகளை எழுப்புவதற்காக தபலாவின் முகமாகிய அடிக்கும் இடத்தில் பல இடங்களில் தாக்கி ஒலி எழுப்புவர். பல முறைகளில் தாக்கி ஒலி எழுப்புவர். அவ்வாறு தாக்கி ஒலி எழுப்பும் பொழுது விரல்களை இணைத்து வைத்தும் தாக்குவர். அவ்விரல்களையே பிரித்துவைத்தும் தாக்குவர். முழுக் கையால் தாக்கியும், விரல் நுனிகளால் தாக்கி யும், உள்ளங்கையின் அடிப்பாகத்தை அழுத்தித் தாக்கியும், இவ்வாறெல்லாம் ஒலி எழுப்பப்படும்.[1]

50. தம்பட்டம்

தம்பட்டம் என்ற ஒரு தோற்கருவி காட்சிக்காக வைக்கப் பட்டுள்ளது.[2] "பறை திமிலை திமிர்தமிகு தம்பட்டம்"[3] என்ற தொடரும் தம்பட்டம் என்ற ஒரு வகைப் பறையைக் குறிக்கிறது. கோயில் திருவிழாக்களில் முழக்கப்படுகின்ற நாம் எல்லோரும் அறிந்த தப்பட்டை என்ற கருவியே இது.[4]

51. தமரு (தமருகம்)

தமரு என்பதும் தமருகம் என்பதும் ஒரே கருவியைக் குறிக்கும் சொற்களே. உடுக்கை என்று பொருள்.[5]

தமருகம் என்னும் தோற்கருவியை இசை நூல் மென்மைக் கருவி என்று வகைப்படுத்துகிறது. இடைக்கருவி என்றும், புறமுழவு வகையைச் சார்ந்தது என்றும் தெரிகிறது.[6]

தமரு என்பது ஒரு சிறுபறை. இடைசுருங்கியது. சிவனார் அண்ட வெளியில் நடனமாடிய பொழுது கையில் வைத்துக் கொண்டு முழக்கினார். நடனக் கலையின் தெய்வமாகிய நடராசரின் கையில் தமரு இருப்பதாகவே பண்டைக் காலச் சிற்பங்களெல்லாம் சான்று பகர்கின்றன.

தமருவின் நீளம் ஆறு அங்குலம் முதல் ஓர் அடிவரையில் வெவ்வேறு வகையாக உள்ளது. தமருவின் இருமுனைகளும் வார்களால் இணைக்கப்பட்டிருக்கும். சுருங்கிய இடைப்பாகத்தைச்

1. Musical Instruments of India, S. Krishnasamy, Pp. 75-76.
2. அருங்காட்சியகம், எழும்பூர், சென்னை.
3. திருப்புகழ் 18.
4. தமிழர்இசைக்கருவிகள், அண்ணாமலைப்பல்கலைக்கழகம்.
5. சென்னைப் பல்கலைக் கழகத் தமிழகராதி.
6. பஞ்சமரபு - உரை.

சுற்றியுள்ள ஒரு கயிறு அந்த வார்களின் மேல் சுற்றிச் செல்லும். அக்கயிற்றின் முனையில் நெட்டி அல்லது உலோகத்தாலான ஓர் உருண்டை சட்டித் தொங்கவிடப்பட்டிருக்கும். தமருவின் இரு முனைகளும் தோலால் மூடப்பட்டிருக்கும்.

இந்தக் கருவியை வலது கையில் வைத்துக் கொண்டு பக்கவாட்டில் அசைத்து ஆட்டுவர். அப்பொழுது அந்த நெட்டி அல்லது உலோக உருண்டை இருமுனைகளிலும் மாறிமாறித் தாக்கி ஒலி எழுப்புகிறது. இணைப்பு வார்களின் மேல் விரல்களை அழுத்துவதன் மூலம் வெவ்வேறு வகையான தேவையான தாள ஒலிகளை எழுப்பலாம்.

இதே வகையைச் சேர்ந்த நீளமான தமரும் உண்டு இக்கருவியில் ஒவ்வொரு முகத்திலும் ஒவ்வொன்றாக இரண்டு கயிறுகள் இணைக்கப்பட்டிருக்கும்.

புடு புடுக்கா என்பதும் தமரு இனத்தைச் சார்ந்ததே. ஆனால் உருவில் சிறியது (ஒரு வேளை குடுகுடுப்பைதான் இவ்வாறு வழங்கப்படுகிறதோ என்று எண்ண இடமளிக்கிறது) கட்டை விரலுக்கும் ஆள்காட்டி விரலுக்கும் இடையில் வைத்துக் கொண்டு இதை இயக்குவார்கள். செப்படி வித்தைக்காரர்கள், பூசாரிகள் ஆகியோர்கள் கையில் இக்கருவி இருப்பது நாம் காணக்கூடியதே.

''மொகு மொகென்றொலி மிகுந் தமருகங்கள் பலவே'' என்று நம் இலக்கியம் தமருகத்தின் ஒலியைக் குறிப்பிடுகிறது.[2]

''டமருகம்''—என்ற பெயரில் இக்கருவி முதலாம் இராசராசன் காலத்திய கல்வெட்டில் இடம் பெறுகிறது.

''நாலு ஸ்ரீ ஹஸ்தத்திலும் பிடிச்சருளின யரலமும் கபாலமும் பாடயமும் டமருகமும் வெள்ளியின் ஸ்ரீபாத பீடமும் உட்பட''— இத்தொடர் தஞ்சைக் கோயில் கல்வெட்டில் உள்ளது.

52. தமுக்கு

பொதுவாக மக்களுக்குச் செய்தி அறிவிப்பதற்காக முழக்கும் ஒரு பறை. இது ஒருகட்பறை. தமுக்கடித்தல் என்றாலே பறை சாற்றிச் செய்தி அறிவித்தல் என்று தான் பொருள். தமுக்கடி, தமுக்குப் போடு என்றெல்லாம் கூறும் பழக்கம் உண்டு.[3]

---

1. Musical Instruments of India, S. Krishnasamy, Pp. 96-97.
2. கலிங். 100.
3. சென்னைப் பல்கலைக் கழகத் தமிழகராதி.

தமுக்கு என்ற இந்தப்பறை கிண்ண வடிவமானது நாடு முழுமையும் பொதுவாக வழக்கிலுள்ள ஒரு பறையாகும். இந்த வகைப்பறை அடிகுறுகியும் தலை அகன்றும் இருக்கும். அகன்ற தலைப்பாகம் தோலால் போர்த்தப்பட்டிருக்கும். குச்சிகளாலோ அல்லது கைகளாலோ தாக்கி ஒலிக்கப்படும் வகையைச் சார்ந்தது. தமுக்கு ஓரளவு சிறியதே. அதை முழக்குவோன் தன் தோளில் தொங்கவிட்டு முழக்குவான்.[1]

53. தவண்டை

தவண்டை என்ற இந்தக் கருவி மரத்தாலானது. தடித்த கயிறுகளால் பிணைக்கப்பட்டிருக்கும். இரு பக்கங்களும் தடித்த தோலால் (வன்றோல்) போர்த்தப்பட்டிருக்கும். குச்சி கொண்டு அடித்து ஒலி எழுப்பப்படும் கருவி. மாரியம்மன் கோயில்களிலும், சில பழைய கிராம தேவதைகளின் கோயில்களிலும் அடிக்கப்படும் கருவி இது. ''பெரிய உடுக்கை''-என்ற குறிப்பு எழுதிக் காட்சிக்காக வைத்துள்ளனர்.[2]

''தாரை கவுரி தவண்டை துடி நாககுரம்''-என்ற தொடரைக் காட்டி, பேருடுக்கை எனப் பொருள் கூறுகிறது அகராதி.[3]

54. தவில்

தவில் பீப்பாய் வடிவான ஒரு கருவி. ஒரு மரத்துண்டைக் குடைந்து செய்யப்படுவது. இரண்டு பக்கங்களிலும் தோலால் போர்த்தப்பட்டிருக்கும். சணல் கயிற்றால் ஆன வளையங்கள் அத்தோலைச் சுற்றியிருக்கும். ஆறு அல்லது ஏழு மூங்கில் குச்சிகள் ஒன்றாக இணைத்துக் கட்டப்பட்டிருக்கும். ஒன்றோடு ஒன்றாக இணைக்கப்பட்ட தோல் வார்களால் வளையங்கள் இணையும். தவிலைச் சுற்றி ஒரு பட்டையான தோல் இடையிலுள்ள தோல் வார்களின் மேல் சுற்றப்பட்டிக்கும். இதன் மூலம் இறுக வலித்துக் கட்டித் தேவையான இசையொலியை எழுப்பலாம். தவிலின் வலப் பக்கம், வலக்கையால், வலக் கை மணிக்கட்டால், வலக்கைவிரல் களால் வாசிக்கப்படும். வலப்பக்கம் அமைந்துள்ள தோல் இறுகப் பிணைக்கப்பட்டிருக்கும். ஆனால் எந்தவித ஒரு குறிப்பிட்ட இசைக்கேற்பப் பண் அமைக்கப்பட்டிருக்காது.

---

1. Mirror-Journal-Jan-1981, p. 69.
2. அருங்காட்சியகம், எழும்பூர், சென்னை.
3. சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதி—கூளப்ப-282.

தவிலின் நீளம் 15. 10-7/16 அங்குலம். வலப்பக்க வட்டம் 8-5/16 அங்குலம். இடப் பக்க விட்டம் 8-3/16 அங்குலம். இடப்பக்கம் மார்ச்சனை தடவப்பட்டிருக்கும். ஆலயங்களில் அபிஷேகம் செய்யப்பட்ட விக்ரகங்களிலிருந்து சுரண்டி எடுக்கப்பட்ட மெழுகு போன்ற பொருளுடன் தேவையான அளவு விளக்கெண்ணெயைக் கலந்து இந்த மார்ச்சனை செய்யப்படுகிறது. இரண்டு அங்குலம் வட்டமாகத் தடவப்பட்டிருக்கும்.

இக்கருவி ஆரம்பத்தில் கூம்பு வடிவமாக இருந்திருக்கிறது. இப்போது பீப்பாய் வடிவாக அமைப்புப் பெற்றிருக்கிறது. தவிலை முழக்கும் குறுந்தடி கெட்டியான புரசை மரத்தால் செய்யப் பட்டது. தவிலின் உடல் பலா மரத்தால் செய்யப்பட்டது. உடல் பருமன் $\frac{1}{8}$ முதல் 1/10 வரை கனமுடையது.[1]

திறந்தவெளி இசை நிகழ்ச்சிகளில் தவில் தோளில் தொங்க விடப்பட்டிருக்கும். வாசிப்போர் முன்பக்கமாகத் தொங்கவிட்டுக் கொண்டு நின்று கொண்டே வாசிப்பர்.

நாகசுர இசை நிகழ்ச்சிகளில் தவில் முக்கிய இடம் பெறுகிறது. இராக ஆலாபனையின் தானம் தவில் வாத்தியத்தில் முக்கியப் பங்கை நிரப்புகிறது.[2]

பஞ்சமரபு என்ற இசைநூலில் மேற்கோள் காட்டப்பெறும் நூற்பாவில் வரும் ''தாவில் தடாரி'' என்ற தொடரில்—தடாரி என்ற கருவிக்கு அடைமொழியாக ''தாவில்''—என்ற சொல் வருகிறது. அச்சொல் 'தவில்'—என்ற இந்தக் கருவியைக் குறிக்கும் சொல்லாக இருக்கலாமோ என்பது அறிஞர் ஆய்வுக்குரியது.

தவில் என்றால் மேளவகை எனப் பொருள் எழுதி, தவுல் என்பதும் தவில் என்பதும் ஒன்றே என்றும் கூறுகிறது அகராதி.[3]

'டிமுட டிமு டிமு டிட்டிம், எனத்தவில் எழும் ஓசை'—தவில் ஓசை இவ்வாறு ஒலிக்கும் ''செந்தவில் சங்குடனே'' ஒலிக்கும்.[4]

தவில் என்பது கோயில் மேளவாத்தியங்களில் ஒன்று. அது பூசா காலங்களிலும், உற்சவங்களிலும் திருமணம் பண்டிகை

---

1. Laya Vadyas, Prof. P. Sambamoorthy, p. 19.
2. Musical Instruments of India, R. Krishnasamy, pp. 78-79.
3. சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகராதி.
4. திருப்புகழ்.

முதலிய சடங்குகளிலும், நாகசுரம், ஒத்து, தாளம் என்னும் கருவிகளுடன் கொட்டப்படுகிறது.[1]

'பள்ளற்கு தவிலும் முரொசும் சேமக்கலமும்'' என்ற IPS 956—கல்வெட்டுத் தொடரில் இக்கருவி இடம்பெறுகிறது. தவில் அடிப்பவரும் TDI II No. 135. கல்வெட்டில் இடம் பெறுகிறார்.''டொல நாகசரகாறர்-தவில் அடிப்பவர். நாகஸ்வரம் வாசிப்பவர். ''எம்பெருமா நடியார்க்கு பணம் 2 டொலநாகசர காறற்கு பணம் 2 பாடுவாற்கு பணம் 1''—

55. தாசரி தப்பட்டை

தாசரிகள் அல்லது பண்டாரங்கள் என்ற வகையினரால் உபயோகிக்கப்படும் கருவியே தாசரி தப்பட்டை. சேமக்கலம், சங்கு ஆகிய மற்ற கருவிகளுடன் சேர்த்து வாசிக்கப்படுகிறது. உலோக வளையத்தின் மீது கன்றின் தோல் போர்த்தப்பட்டிருக்கும். வயிற்றுக்கும் இடப்பக்கமுள்ள முழங்கைக்கும் இடையில் வைத்து வாசிக்கப்படும். வலக் கை விரல்களால் வாசிக்கப்படும். இடக் கை கருவியைப் பிடித்துக் கொண்டே சேமக் கலத்தைக் கொட்டிக் கொண்டிருக்கும்.[2]

56. திமிலா-(திமிலை)

திமிலா என்பது இருமுகப் பறை. இடை சுருங்கிய பறை. கேரளாவில் கோயில் சடங்குகளில் பெரும்பாலும் உபயோகிக்கப் படுகிறது. கோயில் தேவதைகளின் ஊர்வலங்களில் முன்னால் முழக்கிக் கொண்டு செல்லுவார்கள்.

ஒரு மரத்துண்டைக் குடைந்து செய்யப்படுவது.

சுமார் இரண்டடி நீளமுள்ளது. திமிலாவின் பக்கம் மேல் நோக்கி 75 டிகிரி கோணத்தில் சாய்ந்து அமைந்திருக்கும். இரு பக்கங்களிலும் இணைக்கப்பட்டுள்ள மூங்கில் வளையங்களின் மேல் தோல் போர்த்தப்பட்டிருக்கும். இக்கருவி முழக்குவோனின் இடது தோளில் தொங்கவிடப்பட்டிருக்கும். இரண்டுகைகளாலும் திமிலையின் மேல்பக்கத்தில் அடித்து முழக்கப்படும். நின்று கொண்டேதான் வாசிப்பார்கள். திமிலையின் அடிக்கும் பாகமாகிய மேல்பாகம் ஒரு குறிப்பிட்ட சுருதியில் பண் அமைக்கப்பட்டிருக்கும்.

பஞ்ச வாத்தியங்களில் ஒன்று இந்தத் திமிலா.[3]

---

1. தமிழர்இசைக்கருவிகள்-அண்ணாமலைப்பல்கலைக்கழகம்.
2. அருங்காட்சியகம், எழும்பூர், சென்னை.
3. Musical Instruments of India, S. Krishnasamy, p. 79.

இந்தக் கருவி 'இரு முகப்பறை' என்ற விளக்கத்துடன் காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளது.[1]

இசை நூல், திமிலை என்று ஒரு கருவியைக் குறிப்பிடுகிறது. வன்மைக்கருவி வகையில் சேர்க்கிறது. வீரக்கருவி என்றும் கூறப் பட்டுள்ளது. சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் மூவர்க்கும் உரியனவாகக் கூறப்படும் வீரமுழவுகளுள் திமிலையும் ஒன்று.[2]

திமிலை என்ற இக்கருவியை அடியார்க்கு நல்லார் குறிப்பிடு கிறார். பண்ணமை முழவு என்று திமிலையைக் கூறுகிறார்.[3]

முதலாம் ஆதித்தியன் காலத்துக் கல்வெட்டில் ''திமிலை'' இடம்பெற்றிருப்பதை முன்னமே ''கண்டிகை''-என்ற தலைப்பில் கூறியுள்ளோம்.

57. துடி

துடி என்னும் தோற்கருவியானது நம் இலக்கிய இலக்கண நூல்களில் பயின்று வரும் ஒரு கருவியாகும். துடிப்பறை மரத்தால் செய்யப்பட்டது. தோல்வார்களால் இறுக வலித்துக்கட்டப் பட்டது. நுண்ணிய நூலால் கட்டப்பட்டது.

நுண்ணிய நூல்களால் கட்டப்படும் சிறப்புக் குறித்துத் துடியை ''நுண்ணூற் சிரந்தை'' என்றனர். வாரால் இறுக வலித்துக் கட்டப்பட்ட துடிபோல நூலால் கட்டப்பட்ட துடியும் ஒருவகையினதாக இருந்திருக்கலாம்போலும். சிறற்பறவையின் சிறகு அசைவது போலத் துடிகொட்டுமிடத்துக் கைவிரல்களசைய விளங்கும் இசைநலம் தோன்றத் துடி சிரந்தை எனப்பட்டது. நிரல்-நிரந்து என வருதல்போலச் சிரல்-சிரந்து என நின்று சிரந்தையெனப் பெயராயிற்று.[4]

பிறந்து சிறந்தவிடத்தைப் பிறந்தை' (பரிபா-11 உரை) என்பது போலச் சிரலினது செய்கை நிகழிடம் சிரந்தை என அமைந்ததெனக் கொள்ளவேண்டும்.

துடி இடிபோன்று ஒலிக்கும். துடியின் தாளம் மிக்க ஒலியை யுடையது. விரைந்த நடையையுடையது அந்த ஒலி. அச்சத்தை

---

1. அருங்காட்சியகம்-எழும்பூர் சென்னை.
2. பஞ்சமரபு உரை.
3. சிலப் 3-27 உரை.
4. பதிற்றுப்பத்து-கடவுள் வாழ்த்து உரை.

யும் செய்யவல்லது, துடியின் ஓசை பேராந்தையின் ஒலியைப் போன்றது. அசைந்து நடக்குந்தோறும் ஒலிக்கின்ற அழகிய வாயினையுடைய ஓசையினையுடையது துடி. தட்டினால் மட்டுமே ஓசையுண்டாக்கவல்லது.

ஆநிரை கொண்டோரோ நிரை மீட்டோரோ துடி கொட்டிக்கொண்டு ஊர்ப்புறஞ்சூழ்தல் உண்டு. இது 'மறங்கடைக் கூட்டிய துடி நிலை' எனப்படும்.[1] நடுகல்லை மயிற்பீலிசூட்டி, துடி என்னும் தோற்கருவியைக் கொட்டிமுழக்குவர். போர்க்களத்திலும் துடிமுழக்குவது உண்டு. எயினர்கள் துடிப்பறையை வைத்திருப்பர். மறவர்கள் வெற்றிக்கறிகுறியாகத் துடியை மெல்ல முழக்குவர். கனைகுரல் கடுந்துடிப் பாணிதூங்கி, உவலைக்கண்ணியர் ஊன் புழுக் கயரும் கவலை.[2] துடியைக் கொட்டி வெட்சிப் போருக்கு எழுச்சியைத் தெரிவித்தனர். ஊர்காப்பாளரும் துடியறைந்து காவல் புரிந்துவந்தனர்.

துடி கொட்டுவோன் புலையன் எனப்பட்டான். துடிகொட்டு வோனுடைய குடி துடியன் குடி எனப்பட்டது. துடியன்குடி, பாணன்குடி, பறையன்குடி, கடம்பன்குடி என்ற நால்வகைக் குடி களைக் கூறுகிறது புறம். பரம்பரையாகத் துடிகொட்டி வந்த முறையும் வழக்கிலிருந்து வந்துள்ளது.

இள நெல்லின்கண்ணும், அரிந்து வைத்த நெற்கதிர்களிடத் தும் புனல் பரந்ததென்று துடிகொட்டி அறிவித்தனர் அக்காலத் தில். இவ்வாறு புனல் (வெள்ளம்) பரந்த செய்தியை அறிவித்து காவல்காக்கும் பணியில் துடிமுழக்கம் அரிய பணி ஆற்றிவந் துள்ளது.

முருகன் துடிகொட்டி ஆடினான். அது துடிக்கூத்து எனப் பட்டது.[3]

பெரியதுடி என்னும் தோற்கருவியின் வார்போன்று செறிந்தும் நெகிழ்ந்தும் நல்ல பாம்பு மேயும். பெண்டிர் கூடிநின்றும், பிரிந்து சென்றும் அலர்தூற்றுதல் போர்க்களத்தில் முழங்கும் துடி யொலியை யொத்திருந்தது. சங்கிலியால் பிணித்த பெரிய வாயை யுடைய செந்நாய் துடியின்குரல்போலும் குரலையுடையது. 'எம்

---

1. தொல். பொருள். புறம் 59. நச். மேற்கோள்.
2. அகம் 159.
3. சிலப்-புகார். கடலாடுகாதை 51.

தலைவனுக்கு யாம் துடியின் இடப்பக்கத்தை யொத்துப் பயன் படாமல் இருக்கின்றேம்'[1] என்ற தொடர்மூலம் துடியின் இடப் பக்கம் பயன்படாமை விளங்குகிறது. வலப்பக்கம் பயன்படுதல் இசையறிஞர் ஆய்வுக்குரிய செய்தி. துடி தட்டினால்தான் ஓசை யுண்டாகும். மற்ற நேரங்களில் ஓசையுண்டாகாது.[2] இவ் வுவமையைக் கொண்டு இயற்கையறிவில்லான் அறிவுறுத்த போதன்றி மற்றைய நேரங்களில் அறியான் என்ற சீரிய கருத்து விளக்கப்பட்டிருக்கின்றது.

துடியின் அடிக்கும் இடமாகிய கண், வரால் மீன்களின் அறுத்த துண்டங்களுக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது. கருவாடுகளும் இவ்வாறே இலக்கியங்களில் இடம் பெறுகின்றன. யானைக்கன்றின் அடி, துடிபோன்றிருந்ததாகவும் கூறப்படுகிறது.

தூக்கோல் துடி என்பது ஒருவகைத் துடியின் இனத்தைச் சார்ந்தது. மகுளி என்ற இழுகுபறையும் அவ்வாறே துடியின் இனத்தைச் சார்ந்ததே.

துடி என்ற கருவி, சிறு பறை, கொம்பு, தொண்டகப்பறை, குழல், படலிகை, முழவு, தக்கை, கரடிகை ஆகிய பிற இசைக்கருவி களோடு கலந்தும் இசைக்கப்படுகிறது.

துடி என்பது பாலைப் பறையின் பெயர். இடைசுருங்குபறை யின் பெயர் என்றுகூடக் கூறப்படுகிறது.[3]

இசை நூல் துடியை வன்மைக்கருவி என்றும், இடைக் கருவி என்றும், புறமுழவு என்றும், காலை முழவு என்றும் வெவ்வேறு வகையில் முறைப்படுத்திக்கூறுகிறது. வயிரவன், முருகன், துர்க்கை ஆகிய கடவுளர் மூவர்க்கும் இயற்றப்படுவனவாகக் கூறப்படும் தோற்கருவிகளுள் துடியும் ஒன்று.[4]

துடி—உடுக்கை என்னும் பறை வகை.

துடிக் கூத்து—பதினொருவகை ஆடல்களுள் பகைவரை அழித்தபின் முருகக் கடவுளும், சத்தமாதரும் துடி கொட்டி ஆடிய கூத்து

---

1. நாலடி-பொருட்பால் 388.
2. பழமொழி—அறிவுடைமை 28.
3. சூடாமணி நிகண்டு.
4. பஞ்சமரபு-உரை.

துடிநிலை—1. போர்க்களத்தே மறவரது வீரப்பெருசத் துடி கொட்டுதலைக் கூறும் புறத்துறை.

2. வழி வழியாய்த்துடி கொட்டிவருவோனது குணங்களைப் புகழும் துறை.

துடியன்—துடிகொட்டுஞ் சாதியன்

துடியாடல்—துடிக்கூத்து.[1]

58. துடுமை

துடுமை என்னும் தோற்கருவி பண்ணமை முழவு ஆகிய வீர முழவுகள் நான்கில் ஒன்று.[2]

இசை நூல் இக்கருவியை வன்மைக்கருவி என்றும், வீரக்கருவி என்றும், பன்மைமுழவு (பண்ணமை முழவு) என்றும் வகைப் படுத்துகிறது[3].

59. துத்திரி

துத்திரி என்பது ஒரு தோற்கருவி என்பது இலக்கியத்தின்மூலம் நாம் அறியும் செய்தியாகும்.

> "கல்லவடத்திரண் மணிவாய்த் தண்ணுமை
> மொந்தை கல்லலகு துத்திரியோடு"[4]

இவை யாவும் தோற்கருவிகளே.

60. துந்துபி

தேவதுந்துபி என்றும், அந்தரதுந்துபி என்றும், அநங்கதுந்துபி என்றும் துந்துபி என்ற இந்தத் தோற்கருவி பல்வேறு வகையாக நூல்களில் பெயர் பெறுகிறது.

தேவதுந்துபி தேவர்கட்கு மகிழ்ச்சியைத் தந்தது. முகிலைப் போல் ஒலிக்கும் இயல்பினது.

துந்துபி என்ற சொல்லுக்கு-தேவலோகத்துப் பறையென்றும், அநங்க துந்துபி என்ற சொல்லுக்கு மன்மதனது பறை என்றும் பொருள் கூறிச் செல்கின்றனர் உரையாசிரியர்கள்.

---

1. சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதி.
2. சிலப் 3-27 உரை.
3. பஞ்சமரபு உரை.
4. கல்லாடம் 30.

சங்கம்போன்ற பிற கருவிகளுடனும் துந்துபி இசைக்கப்படு படுகிறது.

சென்னைப் பல்கலைக் கழகத்துப் பேரகராதி துந்துபி என்ற சொல்லுக்குப் பேரிகை எனப் பொருள் கூறுகிறது. சூடாமணி நிகண்டை ஆதாரம் காட்டி வாச்சியப் பொது என்றும் பொருள் கூறுகிறது. துந்துமி என்ற ஒரு சொல்லை 'துந்துமி யொருகுட முழா' (தேவா. 916) என்ற தொடரிலிருந்து எடுத்துத் துந்துபி என்று பொருள் கூறுகிறது.

துந்துபி என்றது ஒரு பெரிய கூம்பு வடிவான தோற்கருவி மாமரத்தால் செய்யப்பட்டது. கோனா என்ற வளைந்த கருவியால் தாக்கி ஒலிக்கப்படுவது. அச்சத்தைத் தரும் உரத்த ஒலியைக் கொடுக்கும் துந்துபியை இயக்குவோர் Dundubhy āghāta என்று அழைக்கப்படுகிறார்.[1]

பூமி துந்துபி

பண்டைக்கால மக்கள் தரையில் ஒரு பெரும் குழியைத் தோண்டினர். அதை மரப்பட்டையால் மூடினர். அந்த மூடியின் மேல் தம் கால்களால் மிதித்தனர். பெரும்பறை யொலிப்பது போன்ற ஓர் ஒலி எழுவதை உணர்ந்தனர். இவ்வாறு மிதித்து எழுப்பிய ஒலியையே தம் இசைக்குப் பக்க இசைக்கருவியாகக் கொண்டு உபயோகித்தனர் அக்கால மக்கள். நாளடைவில் பூமியில் தோண்டிய அந்தக் குழியை விலங்குகளின் தோலால் மூடினர். நீண்ட பெரிய தடிகளால் அடித்து முழக்கினர். இதுவே "பூமி துந்துபி" என்று பெயர்பெற்றது. மகாவிரதச் சடங்கு போன்ற சமயச் சடங்குகளில் இக்கருவி உபயோகப் படுத்தப்பட்ட தாக சம்ஹிதை, பிராமணங்கள் இவைகளில் கூறப்படுகிறது.[2]

துந்துபி என்பது மாமரத்தால் செய்யப்பட்டது. அரை வட்ட வடிவமானது. தோலால் செய்யப்பட்ட கோனா என்ற கருவியால் தாக்கி ஒலிக்கப்பட்டது. ஆழ்ந்த உரத்த இடி போன்ற ஒலி எழுப்பும் தன்மையது. விழா நாட்களில் கோயில்களில் வாசிக்கப்

---

1. A Dictionary of South Indian Music and Musicians-Vol.I (A F).
2. Musical Instruments of India, S. Krishnasamy, p. 8.

படுகிறது. வெற்றியைக் குறிக்கவும் வெற்றிப்பறையாகவும் முழக்கப்படுகிறது. மிகப்பழங்காலத்திலிருந்தே நம் மக்கள் அறிந்திருந்த ஒரு கருவி இது.[1]

61. தூரியம்

தூரியம் என்ற தோற்கருவி ஒன்று இலக்கியங்களில் இடம் பெறுகிறது. அடர்ந்த தோல் வாரினாற் பிணிக்கப்பட்டது. ஒலி விரும்பத் தக்கதாக இனிமையுடன் இருக்கும்.

தூரியம் என்றால் மத்தளம் என்றும், மங்கலப்பிறை என்றும் உரையாசிரியர்களால் பொருள் கூறப்படுகிறது.

முருடு, ஆகுளி என்ற பிற கருவிகளுடன் தூரியம் இயக்கப் படுகிறது.[2]

62. தொண்டகச் சிறுபறை

தொண்டகச் சிறுபறை குறிஞ்சி நிலத்திற்குரிய பறையாகும். இப்பறையானது திரிகைக்கல்லை ஒத்த தான வட்டமான வாயினை யுடையது. கோலால் இதன் தலைப்பகுதியில் அடித்து முழக்கும் இயல்பினது

"........ திரிகல்
ஒப்புடைத்தாய வட்ட வாய்த் தொண்டகம்
கோல் தலை பனிப்ப வான்விடு பெருங்குரல்
வீயாது துவைக்கும்........ ".[3]

குறிஞ்சி நிலமக்கள் தொண்டகச் சிறுபறையின் தாளத்திற் கேற்பக் குரவையாடினர். குறக்குறு மாக்கள் இக்கருவியை ஒலித்து வந்தனர். இரவில் விலங்குகள் அணுகாதிருக்கும் பொருட்டுத் தொண்டகப்பறையை முழக்குவர். மகளிரொடு கலந்து தொண்டகப் பறையினது தாளத்திற்கொப்ப ஆடவர் தெருவின்கண் குரவைக் கூத்தாடினர். தெருவில் ஆடவர் மகளிரொடு கலந்து குரவைக் கூத்தாடும் பொழுது தொண்டகப்பறை தாளத்தோடு ஒலிக்கப்படும்.

---

1. Musical Instruments in Indian sculpture, G.H. Tarlekar and Mrs. Nalini Tarlekar, P. 78.
2. இராமா-கிட்கிந்தாகாண்டம், யுத்தகாண்டம்; வில்லி பாரதம்—சபாபருவம்-இராயசூயச்சருக்கம்.
3. கல்லாடம் 24.

"தொண்டகந் தொடுமின் சிறுபறை தொடுமின்"[1] என்று இளங்கோ அடிகள் கூறுவதால் தொண்டகப் பறையையும், சிறு பறையையும் வெவ்வேறு கருவியாக அவர் கருதுவதாகத் தெரிகிறது. ஆனால் நக்கீரர் "தொண்டகச் சிறுபறை குரவை யயர"[2] என்று ஒரே கருவியாகக் கூறுகிறார். அறிஞர்களின் ஆய்வு முடிவைக் கூறும், இத் தொடருக்குத் தொண்டகமாகிய சிறுபறை என்று நச்சினார்க்கினியர் உரை கூறுகிறார்.

இக்கருவி முருகியம் என்ற வெறியாட்டுப் பறையுடன் முழக்கப்படுகிறது. துடியுடனும் ஒலிக்கப் பட்டுள்ளது.

குறிஞ்சி நிலப்பறை என்ற பொருள் கூறி திவாகரத்தையும், ஆகோட்பறை என்ற பொருள் கூறிச்சீவக சிந்தாமணியையும் மேற்கோள் காட்டுகிறது சென்னைப் பல்கலைக் கழகத் தமிழகராதி.

63. தோலக்—டோலக்

டோலக் என்ற இந்தக் கருவி காட்சியகத்தில் காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளது. இந்த இசைக்கருவி ஒரு மரத்துண்டைக் குடைந்து செய்யப்பட்டது. இக்கருவியில் உள்ள தடிப்பான கயிறுகளும், உலோக வளையங்களும் சுருதியை ஒருநிலைப் படுத்த உதவுகின்றன. இக்கருவி கையினாலும் குச்சியினாலும் வாசிக்கப் படுவது. இந்த இசைக்கருவி இந்தியாவின் பல இடங்களில் காணப் படுகிறது.[3]

டோலக் என்னும் மற்றுமொரு தோற்கருவியும் இசையரங்குகளில் சமீபகாலமாக வழங்கி வருகின்றது. நாற்பது வருடங்களுக்கு முன்னிருந்த வேணுகோபால செட்டியார் இதை வாசிப்பதில் மகா சமர்த்தராக விளங்கினார். புதுக்கோட்டை சமஸ்தான வித்துவான்களில் ஒருவராக விளங்கிய நன்னுமியா என்னும் முகம்மதியரும் இதை வாசித்துப் பெரும்புகழ் பெற்றார். இவ்வாத்தியத்தைக் கையாலும் ஒரு சிறு கழியாலும் தட்டி வாசிப்பர்.[4]

---

1. சிலப். வஞ்சி. குன்றக்குரவை 16.
2. திரு முருகாற்றுப் படை 197.
3. அருங்காட்சியகம், எழும்பூர், சென்னை.
4. தமிழர்இசைக்கருவிகள்-அண்ணாமலைப்பல்கலைக்கழகம்.

கால் நூற்றாண்டிற்கு முன் அழகிய நம்பி என்ற மிருதங்க வித்வான் இந்த இசைக்கருவியுடன் இணைந்து இசை நிகழ்ச்சிகள் நடத்தியுள்ளார்.[1]

64. நகரி—(நகரா)

"நகரி முழக்கினும்"[2] என்ற இலக்கியத் தொடர் நகரி என்ற பெயருடன் ஓர் இசைக்கருவி இருந்ததை நமக்கு அறிவிக்கிறது.

'நகரா' என்றும் இக் கருவி வழங்கப்பட்டது பெருமுரசு வகை என்று பொருள்.[3]

நகரா என்ற இந்தக் கருவி பார்வைக்காகக் காட்சியகத்தில் உள்ளது. அரைக்கோள வடிவத்தில் காணப்படுகிறது. இத் தோல் வாத்தியம் வண்டியிலோ அல்லது யானையின் மீதோ வைக்கப் பட்டுத்தெய்வ ஊர்வலத்தில்வாசிக்கப்படுகிறது. செம்பு. பித்தளை அல்லது இரும்புத் தகடுகள் இணைத்துச் செய்யப்படுவது. இரண்டரை அடி முதல் மூன்று அடி வரை விட்டம் கொண்டது. இரும்பு வளையங்களுக்குமேல் தோல் பரப்பப்பட்டிருக்கும். கருவி யின் கீழ்ப்பாகத்திலிருந்துதோல் வார்கள் மூலம் இறுகப் பிணைக்கப் பட்டிருக்கும். இரு சக்கர வண்டிகளில் வைத்து மனிதன் இழுத்துச் செல்லுவான். இறைவன் ஊர்வலம் வரும்போது ஊர்வலத்தின் பின்னால் இவ்வண்டி செல்லும். கருவியை வாசிப்போன் வண்டியின் மேலமர்ந்து இரண்டு வளைந்த குச்சிகளால் அடித்து முழக்குவான். சில சமயங்களில் அலங்கரிக்கப்பட்ட யானையின் மீது இக்கருவி வைக்கப்பட்டு ஊர்வலத்தின் முன்னால் செல்லும்.

இந்த வகையான பெரிய கருவிகள் பேரி என்றும் பேரிகை என்றும் கூறப்படுகின்றன. போர்ப்பறைகளாக உபயோகப்படுத்தப் பட்டன.[4]

இந்த வகையான இசைக்கருவி மத்திய கிழக்குப்பகுதிகளில் நக்காரா (Nagguarah) என்று கூறப்படுகிறது.

---

1. Musical Instruments of India, S. Krishnasamy, P.93.
2. பெருங். உஞ். பிடிமேற். 86.
3. 'நகரா முழங்க'—(கொண்டல் விடுதூது508) சென்னைப் பல்கலைக் கழகத் தமிழகராதி.
4. இசைக்கருவிகளின் அட்டவணை - அருங்காட்சியகம், எழும்பூர், சென்னை.

'நவ்பத் என்ற இசைக்கருவிகள் முகலாய அரண்மனையில் அரசவை இசைக் கவிஞர்களால் இசைக்கப்பட்டு வந்தன. அவற்றுள் நகராவும் ஒன்று. அக்பர் பேரரசின் நக்கார்கானா (Naggarkhana) என்ற இசைக்கருவிகள் தொகுப்பு இருபது ஜோடி நக்காராக்களைக் கொண்டிருந்தது. இவைதவிர வேறுபல இசைக்கருவிகளும் இருந்தன.[1]

திருமலை நாயக்கர் காலத்தில் நவ்பத்கானா வாத்தியம் என்று பெயர் பெறும் பதினெட்டு இசைக்கருவிகள் காலையிலும் மாலையிலும் அரண்மனையருகே வாசிக்கப்பெற்றன. இந்த இசை வாசிக்கப்பட்ட இடமே இன்றைய நவ்பத்கானா தெரு.

65. நகார்

நகார் என்பது ஒரு பெரு முரசு. இது கோயிலிலேயே ஓரிடத்தில் நிரந்தரமாக வைக்கப்பட்டுத் தீப ஆராதனை முதலிய பூசா காலங்களில் அடிக்கப்படும். ஊர்வலங்களின்போது சில சமயம் இதனை வண்டியில் ஏற்றி இதை அடிப்பவனும் வண்டியிலேறிக் கொண்டு இரு சிறு கோல்களால் அடிப்பான். அபூர்வமாக யானையின் மீது வைத்து அடித்துச் செல்வதுமுண்டு.[2]

66. நிசாளம்

நிசாளம் என்ற இக்கருவி பண்ணமை முழவுகளான வீர முழவுகள் நான்கில் ஒன்று.[3]

இசைநூல் இக்கருவியை வன்மைக்கருவி என்றும், வீரக்கருவி என்றும், பன்மைமுழவு (பண்ணமைமுழவு) என்றும் ஒவ்வொரு வகையில் வகைப்படுத்தியுள்ளது. சேர, சோழ, பாண்டிய மன்னர் மூவர்க்குரியனவாகிய வீரமுழவுகளுள் ஒன்று நிசாளம்.[4]

67. படகம்

படகம் என்ற இந்தக் கருவி பரந்த வாயினையும் ஒரே முகத்தினையும் உடையது. ஒரு விரலைக் கொண்டு புடைத்தும், ஐந்து

---

1. Musical Instruments of India, S. Krishnasamy, P. 91.
2. தமிழர்இசைக்கருவிகள், அண்ணாமலைப்பல்கலைக்கழகம்.
3. சிலப். 3.27 உரை.
4. பஞ்சமரபு உரை.

விரல்களைச் சேர்த்துப் புடைத்தும் முழக்கப்படுவது. ஒற்றை விரலால் தெறித்தும், ஐந்து விரல்களையும் கூட்டிப்புடைத்தும் முழக்குவர்.[1]

இசை நூல் படகத்தைச் சமக்கருவி என்றும், தலைக்கருவி என்றும், அகமுழவு என்றும் வெவ்வேறு வகையில் வகைப்படுத்திக் கூறியுள்ளது. பிரமன், விட்டுணு, உருத்திரன் ஆகிய கடவுளர் மூவர்க்கும் இயற்றப்படுவனவாகக் கூறப்படும் கருவிகளுள் படகமும் ஒன்று.

படகம் என்ற கருவிக்கு நீளம் நாற்பது விரல். அதனுடைய சுற்றளவு அறுபது விரல். முகஅளவு எண் விரல். குண்டின் அளவு பத்து விரல். குண்டின் பருமையும் கடிப்பும் துளையும் தோலு மெல்லாம் பேரிகை என்னும் கருவிக்குக் கூறிய அதே அளவாகும்.[2]

''வட்ட வானமெனும் வான்படகத்தைக் கொட்டுமண்மகள்''[3] என்ற தொடரை மேற்கோள் காட்டி, போர்ப்பறை என்றே பொருள் கூறப்படுகிறது.

''இடியுறழ் முரசுஞ் சங்க படவமும்''[4] இத்தொடருக்குப் பொருள் கூறும்பொழுது படகம் என்று பொருள் கூறப்பட்டுள்ளது. படகம் என்னும் கருவியும் படவம் என்னும் கருவியும் ஒன்றே எனக் கருதவேண்டியுள்ளது.

படகம் நாற்பத்தைந்து அங்குல நீளமுள்ள ஒருபறை. இதன் சுற்றளவு நாற்பத்தைந்து அங்குலம். மத்தியப்பகுதி அகலமானது. வலது முகம் பதினொன்றரை அங்குலம். இடப்பக்கம் பத்தரை அங்குலம். இக்கருவியைத் தாக்கி முழக்கப் பயன்படும் குறுந்தடி பதினெட்டு அங்குல நீளம் உடையது. இடையில் பருத்து அகலமாகவும் முனையில் இலேசாக வளைந்தும் இருக்கும்.


இந்தக் கருவியை வாசிப்பவர் கால்களைக் குறுக்கே மடித்துக் கொண்டு பத்மாசன நிலையில் அமர்ந்து இசையரங்குகளில் வாசிப்பர். தம் தொடையின்மேல் கருவியை வைத்துக்கொண்டு வாசிப்பர்.

---


1. கல்லாடம் 8.
2. பஞ்சமரபு உரை.
3. கந்தபு-யுத்த-முதனாட் 53.
4. பெருங்-உஞ்சைக்-படைவீடு, 58. (உ.வே.சா. உரை).




டக்கி
(விஷ்ணு கோயிலில் உபயோகிப்பது)



டங்கா
(சிவன் கோயிலில் உபயோகிப்பது)



டமாரம்



டோலக்

நாடக நிகழ்ச்சிகளில் கடவாத்தியம்போன்று பயன்படுத்தப் படும் கோனா அல்லது கையால் வாசிக்கப்படும் கருவி இது.

ஒரு சில இடங்களில் இருபத்தேழு அங்குல நீளமும் ஏழு அங்குல வலப்பக்கமும், ஆறரை அங்குல இடப்பக்கமும் கொண்ட படகமும் வழக்கில் உள்ளது. கயிற்றால் கட்டி இக்கருவியைத் தம் கழுத்தில் தொங்கவிட்டுக் கொண்டு வாசிப்பர்.[1]

இரண்டு படகங்கள் வாசிப்பவனின் முன்னால் வைக்கப்பட்டு, ஒன்றன் குறுக்கே ஒன்றாக குறுக்கே தனது இரு கைகளையும் வைத்துக்கொண்டு வாசிப்பதைப்போல்-காஞ்சீபுரம்-முக்தேஸ்வரர் கோயிலில் ஒரு சிற்பம் உள்ளது. பல்லவர் காலச்சிற்பங்கள்.[2]

தஞ்சை-மாயூரம்-திருவாவடுதுறை-கோமுக்தீஸ்வரர் கோயிலி லுள்ள இரண்டாம் ஆதித்தியனுடைய கல்வெட்டில் இக்கருவி 'தாரணி படகம்''—என்று குறிக்கப்பெறுகிறது. ''இதன் தெற் கடையத் திருஉவச்சகளுக்குத் தாரணிப் படகத்துக்குக்காணும்' என்பதே அத்தொடர்.

68. படலிகை

''துளைபடு குழலிசை துடியொடு சிறுபறை
கிளையொடு படலிகை கிளையொடு படர்தர''

என்ற இலக்கியத்தொடர் மூலம் படலிகை என்ற ஒரு தோற்கருவி யினைப் பற்றி அறிகிறோம்.[3]

படலை என்ற சொல்லைக் குறித்து வாயகன்ற பறை என்று பொருள்கூறி, சூடாமணி நிகண்டையும் ஆதாரமாகக் காட்டு கிறது சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதி.

69. பம்பை

பம்பை என்பது நீள் உருளை வடிவமுள்ள இரு பறைகள் ஒவ்வொன்றும் ஓரடி நீளமுள்ளது. ஒன்றன்மேல் ஒன்றாக இணைத்து இரட்டையாகக் கட்டப்பட்டுள்ளது. மேற்பக்கமுள்ள

1. Musical Instruments in Indian sculpture, G.H. Tarleker and Mrs. Nalini Tarlekar, p.74.
2 Ibid
3. சூளா-கல்யாணச் சருக்கம்.

பறை பித்தளையால் செய்யப்பட்டது. கீழ்ப்பக்கமுள்ள பறை மரத்தால் செய்யப்பட்டது. இரண்டு பறைகளும் ஒவ்வொன்றின் இரண்டு பக்கங்களும் தோலால் போர்த்தப்பட்டவை.

பம்பையை வாசிப்போர் தம்முடலின் முன்பக்கத்தில் தொங்க விட்டுக் கொள்ளுகிறார். அவருடைய இடுப்புடன் சேர்த்துப் பிணைக்கப்பட்டிருக்கும். நின்றுகொண்டே பம்பையை வாசிப்பார்கள். மேல் பக்கமுள்ள பறையாகிய பித்தளைப்பறையின் வலப்பக்கத்தை ஒரு வளைந்த குச்சியால் தட்டி வாசிப்பர். கீழ்ப் பக்கமுள்ள பறையாகிய மரப்பறையின் இடப்பக்கம் கையால் தட்டி வாசிக்கப்படும்.

பெரும்பாலும் தெருக்கூத்துக்களில் வாசிக்கப்படுகிறது. கிராமதேவதைகளின் வழிபாட்டின்போதும் வாசிக்கப்படுகிறது. அதுபோன்ற சமயங்களில் நாசசுரத்துடன் இணைத்து வாசிக்கப் படும். இக்கருவியைத் திறமையுடன் வாசிப்பவர்கள் இனிய ஓசையால் கேட்போரைக் கவருகின்றனர்.[1]

பம்பையென்பது, மாரியம்மன் திருவிழாக்களிலும், பூசாரிகள் உடுக்கையடித்தும் கைச்சிலம்புகளை ஒலிப்பித்தும் ஆடிச் சாமியை அழைக்கும்போதும், பேயோட்டும்போதும் முழக்கும் ஓர் இணைப் பறையாகும். அவற்றை வளைவான சிறு கழிகளால் தேய்த்து அடிக்கும்போது ஒரு வினோத ஒலியுண்டாகும்.[2]

பம்பையின் வெளிப்பரப்பு வண்ணம் தீட்டப்பட்டும், மலர் வடிவங்கள் வரையப்பட்டும் அலங்கரிக்கப்பட்டிருக்கும். காட்சிக் காக இக்கருவி வைக்கப்பட்டுள்ளது[3]

பம்பையானது துடி, முரசம், சங்கம், ஆகிய பிற இசைக் கருவி களுடன் சேர்த்து வாசிக்கப்பட்டு வந்துள்ளது.

பம்பை என்றால் பறைப்பொது என்றுகூடப் பொருள் கூறப் படுகிறது. முல்லை, நெய்தல் நிலங்கட்குரிய பறை என்று திவாகரத்தையும், இலக்கண விளக்கம் 392-வது சூத்திரத்தையும் ஆதாரம் காட்டிப் பொருள் கூறப்படுகிறது.[4]

---

1. Musical Instruments of India, S. Krishnasamy, Pp. 95-95.
2. தமிழர் இசைக் கருவிகள், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.
3. அருங்காட்சியகம், எழும்பூர், சென்னை.
4. சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதி.

70. பதலை

பதலை என்பது ஒரு கண் மாக்கிணை என்று இலக்கியத்தில் ஆளப்பட்டுள்ளது. அதாவது ஒரு தலைமுசமுடைய ஒரு தோற் கருவி. ஒரு பக்கத்தில் மட்டுமே அடித்து இசைக்கப்படும் ஒருவகைப் பறை மாத்திரையைச் சொல்லும் தாளத்தையுடையது. அதாவது தாளந்தவறாமல் இசைக்கப்படுவது. பாணர் முதலிய இரவலர் இக்கருவியை இயக்குவர். இக்கருவியைச் சுமந்து செல்லவேண்டி இருந்தால் காவடித்தண்டின் ஒரு தலைக்கண் தொங்குமாறு சுமந்து செல்லுவர்.

யாழ், ஆகுளி இவையெல்லாம் பதலையோடு சுமந்து செல்லப் படும் மற்ற கருவிகளாம்.

பதலை என்றால் ஒருகட் பகுவாய்ப்பறை என்று பொருள் (பிங்கலம்).

71. பறை

பறை மற்ற தோற்கருவிகளைப் போலவே தோலால் போர்த்தப்பட்ட ஒரு கருவி. வாரால் விசித்து இறுதலுண்டாகக் கட்டப்பட்டது. இக்கருவி ஒருமுகமுடையதாகவும், இரட்டை முகங்களையுடையதாகவும் இருந்துள்ளது ஒரு முகமுடைய பறையை ஒருகண் இரும்பறை என்றனர். இரட்டை முகமுடைய பறையை இணைமுகப்பறை என்று வழங்கினர்.

குறுந்தடியை இட்டுப்பறையடித்து ஒலி எழுப்புவர். அக் குறுந்தடி நேரான குறுந்தடி. நாய்வால் போன்று இருந்தது.

பறையின் ஒலியைக்கொண்டு இதனைப் பேரோசைப்பறை எனக் கூறியுள்ளனர் போர்ப்பறை, வெருப்பறை, வெறியாட்டுப் பறை என்றெல்லாங்கூட வழங்கப்பட்டு வந்துள்ளது. தவளையின் குரலையுடைய பறை நட்டைப்பறை எனப்பட்டது.

அரித்தெழும் ஓசையையுடைய இப்பறையின் ஒலியைப் பலவாறு கூறியுள்ளனர். 'படுபடு' என்னும் ஒலியுண்டாகப் பறைகள் கொட்டி ஒலிக்கப்பட்டன. தண்ணகம் என்ற சாவுப் பறை ''தழீஇம் தழீஇம்'' என்று ஒலித்ததாம். சாவுமேளம் 'டொண் டொண் டொடு' என்று ஒலித்ததாக நான்மணிக்கடிகை கூறுகிறது.

அலையினைப் பறை வாத்தியமாகக் கூறியுள்ளனர். 'சமுத்திர கோஷம்'' என்றே ஒருவகைத் தோற்கருவி இருப்பதாகவும், அக் கருவி காஞ்சிபுரத்தில் கோவிலில் இருப்பதாகவும் கூறுகின்றனர்.

முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்ற முப்பிரிவில் கருப்பொருள்களுள் ஒன்றாக பறையைக் கூறுகிறது தொல்காப்பியம். ஒவ்வொரு நிலத்திற்கும் ஒவ்வொரு வகைப் பறை உரியதாகக் கூறப்பட்டுள்ளது.

குறிஞ்சிப்பறை	:	தொண்டகம், முருகியம், துடி
பாலைப்பறை	:	துடி
முல்லைப்பறை	:	பம்பை, ஏறங்கோட் பறை
மருதப்பறை	:	கிணை
நெய்தற்பறை	:	சாப்பறை.[1]

இசையைக் கேட்டு உருகித் தன்னை மறந்த நிலையில் இருக்கும் அசுணமா, பறையின் ஓசை செவியில் பட்டால் உயிர்வாழாது. ஆகவே அசுணத்தைப் பிடிக்க விரும்புவோர் அது இசையைக் கேட்டுக்கொண்டிருக்கும் பொழுது பறையைத் தட்டி ஒலி எழுப்பி, பின்னர் பிடித்துச் செல்லுவர்.

மிக்கு வரும்புனலை அடைப்பதற்கு, பறையை ஒலித்து உழவரை வருவித்து, அப்புனலை அடைப்பர். புதுப்புனல் மிக்குக் கரையையுடைத்துப் பெருகி வருங்கால் உடைமடையைக் கட்டுவதற்குப் பறையறைந்து; கடையரைத்தருவித்துத் கரையைத் தொகுத்தல் பண்டையோர் மரபு எனத் தெரிகிறது. அஃது அடைக்க ஆளேறுதற்குப் பறையறைக என்னும் கரை காப்பாருடைய காவலோடே அப்பறையொலி ஒலிப்பதாக நம் இலக்கியங்கள் கூறுகின்றன. கால்வாய்களைக் காத்து நின்ற உழவர்கள் வெள்ளம் வருதலைத் தெரிவிக்க மிக்க ஓசையையுடைய பறையை ஒலிப்பர்.

பறை மிக்கொலிக்கின்றமையான் ஆயர் ஏறுகோடல் தொழிலுக்கு ஏறுகள் எதிரே நிற்கும். போர்க்கெழுமாறு வீரரைப் பறையறைந்து அழைப்பர்.

பகைவர் பற்றியிருந்த நாட்டைக் கைக்கொண்டு பறை விடுதலும் பண்டைத் தமிழரின் மரபாம். தாம்மேற்கொண்ட போர்த் தொழிலை வென்று வெற்றிப் பறையறைவர்.

1. சூடாமணி நிகண்டு.

பறைக்குப் பலியிட்டு வணங்கும் மரபு உண்டு. பலியிடும் போது தன் பாலுற்ற ஊனின் சுவையை ஒலிக்கின்ற பறைகள் அறியாவாம் (ஊன் என்பது இங்குப்பலியிடும் குருதியையுணர்த்திச் சுவையைக் குறிப்பாகக் காட்டுகிறது.)

தோல்வியையும் பறையறைந்து தெரிவித்துள்ளனர். தோல்வியை அறிவித்தற்குரிய உரத்த ஓசைகளையுடைய பறைகளை முழக்குவித்துப் பற்பல வசைமொழிகளையும் கூறி வைதனராம். ஆகவே தோல்வியை அறிவித்தற்கென தனித் தன்மை உடைய உரத்த ஓசைகளைப் பறையறைந்து எழுப்பினர்

வயல்களிடத்தே தொழில் செய்யும் மள்ளர்கள் ஊக்கம் கொள்வதற்காக ஒலித்த பறை மருதப்பறையாகும். நெல்லினை அறுப்போரும் பறை கொட்டுவர். அது அரிப்பறையாகும். சேம்பு, மஞ்சள் இவற்றை விதைத்து இவற்றின் கிழங்குகளைப் பன்றி அகழாமல் காவல் காத்து நிற்கின்றவர்களும் பறையறைவர். பன்றியை விரட்டக் கொட்டப்படுதலின் இது பன்றிப்பறை எனப் பட்டது.

ஆறலைகள்வர்கள் வழிப்பறி செய்யுங்கால் வழிமறித்துப் பறை கொட்டுவர்.

பாகனுக்கு அடங்காமல் வருகின்ற மதவேகத்தையுடைய யானையின் வருகையை அறிவிக்க எங்கணும் பறை கொட்டுவர். நிறையழிகொல் யானையை நீர்க்கு விடும்போது பறையறைந்தே செல்லவேண்டும் என்பது பண்டைய மன்னர்களின் ஆணை.

கழைக்கூத்தர் கூத்தாடுகின்ற களத்தின்கண்ணும் பறை யொலித்தது.

செய்திகளை மக்களுக்கு அறிவிக்கும்பொழுது பறையறைந்தே அறிவித்தனர் பறையறையும்பொழுது மன்னன் தன் பெயரா லேயே பறை சாற்றுதல் மரபு. யானை மீது பறையை ஏற்றி, அறைந்து நற்செய்திகளைத் தெரிவிப்பார்கள். மணம் போன்ற நல்ல நாளில் மணப்பறை கொட்டப்படும்.

இறந்தவர் வீட்டுக்குப் போய்ப் பறையடிப்போர் ஒருமுறை பறை கொட்டுவர். சிறிது பொழுது நிறுத்தி, மீண்டும் அச்சாவு மேளத்தைக் கொட்டுவர்.

அருவியின் முழக்கம் பறையின் முழக்கத்தை ஒத்திருந்தது. பறை தன்னைக் கொட்டுகின்றவன் தன் மனத்தில் ஓர்த்த ஓசையைத் தானும் ஒலிக்கும் தன்மையுடையது. வாயொலியும் பறையொலிபோன்றதே என்ற கருத்தும் இடம்பெறுகிறது. வாகை வெண்ணெற்றின் ஒலி ஆரியர் கயிறாடும்பொழுது ஒலிக்கும் பறையொலி போன்றிருந்தது.

பேயின் கண்ணும் பறையின் கண்ணும் (அடிக்கும் இடம்) ஒன்றற்கொன்று உவமையாகக் கூறப்படுகின்றது. நீர் நிறைந்த சுனை, பறை என்ற தோற்கருவியின் கண்போன்றிருந்தது.

பந்தடிக்கும்போது நெஞ்சம் பறையடிப்பது போன்று அடிக்கிறது. பறையறைந்தாற் போன்று நெஞ்சு துடிக்கும் சமயங்களும் உண்டு.

பறை என்ற சொல்லுக்கு முரசு, தடாரிப்பறை, பம்பை, மருதநிலப் பறை என்றெல்லாம்கூடப் பொருள் கூறப்பட்டுள்ளது.

வளை, வயிர், வீணை, கோடு, துடி என்ற பிற கருவிகளுடன் இணைத்துப் பறை முழக்கப்படுவதாகவும் தெரிகிறது.

இசைநூல் பறையை வன்மைக்கருவி என்றும், கடைக்கருவி என்றும், புறப்புறமுழவு என்றும், நாண்முழவு என்றும், சணப்பறை என்றும் பல்வேறு வகைகளில் வகைப்படுத்திக் கூறுகிறது.[1]

'எம்மூர் பறை கொட்டிக் கல்மேடு செய்தாராவிக்குக் கொடுப்பாராக' என்று பறை என்ற தோற்கருவியின் பெயர் கல்வெட்டிலும் இடம்பெறுகிறது.

நெல்லூர் மாவட்டத்தைச் சார்ந்த கூடூரை அடுத்த மல்லத்திலுள்ள சுப்பிரமணியர் கோயிலில் இக்கல்வெட்டு உள்ளது. இக்கல்வெட்டு கம்பவர்மன் காலத்தது.

72. பாகம்

பாகம் என்ற பறை வகை அடியார்க்கு நல்லாரால் குறித்துக் கூறப்படுகிறது.[2] சிறுபஞ்ச மூலம் என்ற நூலின் மூலம் தப்பு என்ற கருவியே பாகம் என்ற தோற்கருவி என்று கருத இடமுள்ளது.

---

1. பஞ்சமரபு உரை.
2. சிலப் 3-27 உரை.

இசைநூல், பாகம் என்ற இந்தக் கருவியை வன்மைக்கருவி என்றும், கடைக்கருவி என்றும் புறப்புறமுழவு என்றும் வகைப் படுத்துகிறது. காளி, சாத்தன், காடுகாள் ஆகிய கடவுளர் மூவர்க்கும் இயற்றப்படுவனவாகக் கூறப்படும் தோற்கருவிகளுள் பாகம் என்ற இந்தக் கருவியும் ஒன்று.[1]

73. பூமாடு வாத்தியம்

சென்னை, எழும்பூர் அருங்காட்சியகத்தில் பூமாடு வாத்தியம் என்ற இந்தக்கருவி பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. இந்தக் கருவியின் பெயரிலேயே இந்தக்கருவி உபயோகப்படும் விதத்தை அறிந்து கொள்ளலாம்.

பூமாடு என்பதனைப் பெருமாள்மாடு என்றும் கூறுவர்.

74. பெரும்பறை

அடியார்க்கு நல்லார் இந்தப் பெரும்பறையைத் தம் உரையில் குறிப்பிடுகிறார்.[2]

பகைவரிடமிருந்து ஆநிரையைக் கவரும்போது பெரும்பறை அடிக்கப்படுகிறது.[3]

பஞ்சமரபு உரையில் பெரும்பறை வன்மைக்கருவி என்று வகைப்படுகிறது.

75. பெல்ஜியக் கண்ணாடி மத்தளம்

பெல்ஜியக்கண்ணாடி மத்தளம் என்ற இந்தவகைக்கருவி ஒன்று காட்சிப்பொருளாக வைக்கப்பட்டுள்ளது. இக்கருவி சாதாரண மிருதங்கத்தைப் போன்றது ஆனல் பெல்ஜியக்கண்ணாடி யால் செய்யப்பட்டது. இவ்வாத்தியக்கருவி நீளம் இருபத்தி யொரு அங்குலம் கொண்டது. வட்டம் ஒன்பது அங்குலம் கொண் டது. இக்கருவி உட்கார்ந்துள்ளவரின் மடியில் வைக்கப்பட்டு, இரு கைகளினாலும் இசைக்கப்படுகிறது.[4]

---

1. பஞ்சமரபு உரை.
2. சிலப் 3-27 உரை.
3. தமிழர் இசைக்கருவிகள் - அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.
4. அருங்காட்சியகம், எழும்பூர். சென்னை,

76. பேரி (பேரிகை)

பேரி என்பது ஒரு போர்ப்பறை. இராமாயணம் போன்ற பண்டைய நூல்களில் இக்கருவியின் பெயர் குறிக்கப்படுகிறது. இக் கருவிசெம்பு, பித்தளை, இரும்புத்தகடுகளை இணைத்துச் செய்யப் படுகிறது. உலோக வளையங்களின்மேல் தோல்பரப்பிப் போர்த்தப் பட்டிருக்கும். இரண்டு அடி முதல் மூன்று அடிவரை விட்டமுள் ளது. இரண்டு வளைந்த குச்சிகளால் தாக்கி முழக்கப்படுவது இக் கருவி.

பண்டைக்காலத்தில் கிராமத்தின் காவல்தளத்தில் இந்தப் பேரிகை வைக்கப்பட்டிருக்கும். திருடர்கள்,கொள்ளைக்காரர்களுக் குப் பயந்து இந்தக்காவல்தளத்திலிருந்துகொண்டு காவல்காரர்கள் காவல் காத்துவந்தார்கள். முறைவைத்துக் கொண்டு காவலர்கள் மாறிமாறிக் காவல்காத்தனர். இந்தக்காவலர்கள் தொலைவில் திருடர்களைக் கண்டுவிட்டால் உடனே இப்பறையினை உரத்த குரலெழுப்பி ஒலிப்பார்கள். உடனே கிராமமக்கள் தடி, அரிவாள் போன்ற தாக்குவதற்கேற்ற கருவிகளைக் கொண்டு விரைந்து சென்று தாக்குவர். அதன் மூலம் தங்களையும் தங்கள் கிராம மக்களையும் காத்துக்கொள்வார்கள்.

இரண பேரி என்பது போர்க்களத்தில் பயன்படுத்தப்பட்ட போர்ப்பறையாகும். ஜெய பேரி என்பது வெற்றிப்பறையாகும்.

பேரிகை என்பதும் பேரி என்னும் கருவியே.[1]

பேரி என்ற கருவியின் நீளம் இருபத்தேழு அங்குலம். ஒவ் வொருமுகமும் பதினெட்டு அங்குலம் அளவுடையது. வலக்கை யில் குறுந்தடி கொண்டு முழக்குவர். இடக் கையாலும் முழக்கு வர். ஆழ்ந்த உரத்த அதன் ஒலி போரில் பகைவரை நடுங்க வைத்தது.[2]

இசைநூல் இக்கருவியைப் பேரிகை என்றே குறிப்பிடுகிறது. வன்மைக்கருவி என்றும், தலைக்கருவி என்றும், அகமுழவு என்றும் பேரிகையை வகைப்படுத்துகிறது. அந்த இசைநூல் பிரமன், விட்டுணு, உருத்திரன் ஆகிய மூன்று கடவுளர்க்கும் இயற்றப்படு வனவாகக் கூறும் தோற்கருவிகளுள் பேரிகையும் ஒன்று.

---

1. A Dictionary of south Indian Music and Musicians, prof. P. sambamurthy, Vol I (A-F).
2. Musical Instruments of Indian Sculpture, G,H. Tarlekar and Mrs. Nalini Tarlekar, p. 78.

பேரிகை என்னும் இக்கருவி குரவம் என்ற மரத்தால் செய்யப் படும். பேரிகைக்கு நீளம் விரல் நாற்பத்தெட்டு. இதன் சுற்றளவு அறுபத்து நான்கு விரல். முகவளவு பன்னிரண்டு விரல். குண்டளவு பதினாறு விரல். மேலும் வலக்குண்டின் அளவு பெருவிரல். இடக் குண்டினளவு பெருவிரலிரட்டி. வார்த்துளை எட்டுக் கடிப்பு. நடு விரலினால் பருமையாய்ப் பதினாறு விரல் நீளமாகக் கொள்க.

உத்தமமான ஆவின்தோலை இரண்டு முகத்திலும் போர்த்தி வலமுகத்திலே வளையிட்டுப் போர்த்துத் தோலின் வாராலே எடுக்கை மரபு.[1]

சங்கு, ●த்தரி, கோடு, பம்பை, துடி, காளம், தாளம், சின்னம் ஆகிய பிற இசைக் கருவிகளுடன் சேர்ந்து பேரிகை முழங்கியதாகத் தெரிகிறது.

''பேரியாம் முழவொலித்தன''[2] என்ற தொடர் மூலம் கம்பர் பேரியை முழவு என்றே கருதியதாகத் தெரிகிறது.

சூர்ப்பனகை தனித்து நின்று அழுத ஒலி பேரிகையின் ஒலி போன்று இருந்ததாம். அதாவது அரக்கர்களுக்கு அழிவுகாலத்தை அறிவுறுத்த இயமன் ஆணையால் முழக்கப்பட்ட முரசொலி போன்றிருந்தாம்.[3]

''திடு திடென் றொலித்த பேரிகை''[4]

''ஜயபேரிகை கொட்டடா-கொட்டடா
ஜயபேரிகை கொட்டடா''[5]

77. மகுளி

மகுளி என்ற பறை துடியின் இனத்தது என்கிறது நம் இலக்கியம்.[6] இக்கருவியை இரு பறை என்று உரையாசிரியர்கள் கூறுகின்றனர். கடிப்பினால் உராய்ந்து ஒலி எழுப்பப்படுவது இது. அவ்வாறு முழக்கப்படும்பொழுது மகுளியின் ஓசை ஆந்தையின் ஓசையைப் போன்று இருக்கும்.

---

1. பஞ்சமரபு உரை.
2. கம்ப-அயோத்-சூழ்வினைப்படலம் 58.
3. ''தழங்கு பேரியெனத் தனித் தேங்குவாள்'' கம்ப. ஆரண்ய. கரன்வதைப்படலம் 363.
4. உதயண குமாரகாவியம்-துறவுக்காண்டம் 313-11;3.
5. பாரதியார் பாடல்கள்.
6. அகம் 19.

78. மத்தளம்

சிலப்பதிகாரத்தில் மத்தளம் என்னும் கருவியின் பெயர் இடம் பெறும் இடங்கள். [அடியார்க்கு நல்லார் உரை—]

1. சிலப். மங்கல வாழ்த்துப்பாடல் - 46
முரசியம்பின முருடதிர்ந்தன''—
முருடு — மத்தளம்.

2 சிலப். 3. அரங்கேற்றுகாதை - 27

தண்ணுமைக் கருவி முதலாயினவற்றுள்—மத்தளம் ஒன்று. மத்தளம் என்பது அகமுழவு. —மத்தளம் - மத்து -ஓசைப்பெயர். இசையிடனாகிய கருவிகட்கெல்லாம் தளமாதலான் மத்தளம் என்று பெயராயிற்று.

இக்கருவி பல கூத்துக்களுக்கு உரித்தாகலானும் பாடலெழுத் தான் உள்ளே பிறத்தலானும் முழவுகளெல்லாம் இதனுள்ளே பிறத்தலானும் இதனை நான்முகனென்பர்.

3. சிலப். 3. அரங்கேற்றுகாதை - 140 - 141

''தண்ணுமை நின்றது தகவே தண்ணுமைப்
பின்வழி நின்றது முழவே''

(யாழ்ப்பாடலின் வழியே அதற்குத்தகத் தண்ணுமையாகிய மத்தளம் நின்றதென்க) —என்றது மத்தளக் கருவியின் பின்வழியே குடமுழா நின்றதென்க.

4. சிலப். 14. ஊர் காண் காதை - 151

கூடிய குயிலுவக் கருவியுமுணர்ந்து—

நால்வகை உத்தமத் தோற் பெருங் கருவிகளாவன—மத்தளம், தண்ணுமை, இடக்கை, சல்லிகை என்பன என்னை; 'மத்தளந் தண்ணுமை இடக்கை சல்லிகையென வைத்த நான்கு முத்தமக் கருவி—என்றாராகலின்.

மத்தளத்தை இசைநூல் சமக்கருவி என்றும், தலைக்கருவி என்றும், அகமுழவு என்றும் வகைப்படுத்திச் செல்லுகிறது. பிரமன், விட்டுணு, உருத்திரன் ஆகிய கடவுளர் மூவர்க்கும் இயற்றப்படுவன வாகிய தோற்கருவிகளுள் மத்தளமும் ஒன்று.

மத்தளத்திற்கு நீளம் நாற்பது விரல். சுற்றளவு விரல் எண்பது. குண்டினளவு விரல் இருபது. முகவளவு விரல் பதினெட்டு,

குண்டின் பருமை சிறு விரல். வார்த்துளை பதினாறு. வலமுக மார்ச்சினைக்களவு பத்து விரல் இடமுக மார்ச்சினைக்களவு ஆறு விரல். இதற்குத் தொடிக்கையும் பிறக்கையுமெனக் கொள்க.[1]

மத்தளம் என்ற கருவி சுத்தமத்தளம் என்றும், கவண மத்தளம் என்று இரு வகைப்படும்

இக்கருவி தஞ்சை மாவட்டத்திலுள்ள தியாகராஜன் விடங்கத் தலங்களில் இறைவனைத் தாங்கிச் செல்லும் பல்லக்கைச் சுமந்து ஆடும்பொழுது, அந்த ஆட்டக்காரருக்குத் துணை இசைக் கருவியாக இசைக்கப்படுகிறது நாகபட்டினத்துக் கோயிலிலும் ஒரு கவண மத்தளம் உள்ளது. நாள்தோறும் இறைவழிபாட்டுச் சமயங்களில் முழக்கப்படுகிறது. இதில் மீட்டு சாபு கிடையாது. சங்கீத மத்தளத்திற்கு மட்டுமே ஒத்திருக்கும்.

மத்தளமானது சுற்றளவில் அடிப்பாகமும் மேற்பாகமும் சிறுத்து நடுப்பாகம் சற்றுப் பெருத்திருக்கும். இருபுறத்திலும் தோல்களால் மூடி வார்போட்டு இறுக இழுத்துப் பிணைக்கப் பட்டிருக்கும். மேற்புறத்தில் ஒருவகைக் கல்லைப் பொடிசெய்து சோற்றுடன் கலந்து தடவித் தேய்த்துப் பொருத்தப்பட்டிருக்கும். தமிழில் இதனை மண் அல்லது மார்ச்சனை என்பர். இதனால் தான் நாதமுண்டாகிறது

இடப் பக்கத்தைத் தொப்பி என்று சொல்வர். தொப்பியின் தோலைத் தண்ணீர் தடவிப் பக்குவமாக்கிக் கொண்டே வாசிப்பது தான் முன்பு வழக்கம். இந்த முறையை இன்றும் சில சிற்றூர்களில் பார்க்கலாம். தஞ்சையிலிருந்த நாராயணசாமிபிள்ளை என்பவர் சோறும் சாம்பல் தூளும் சேர்த்துப் பிசைந்து தொப்பியில் வைத்து வாசித்தனராம் அது முதல் தொப்பிக்கு மாறவைக்கும் வழக்கம் ஏற்பட்டுத் தற்காலம் ரவா மாவு வைத்து வாசிப்பது வழக்க மாயிருக்கிறது. இப்படி மாவு வைக்கப்படும் தொப்பியை வலந் தலைச் சுருதிக்குக் கீழ்ச் சட்சமத்தின் நாதத்திற்குச் சமமாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

பாடுகின்றவர்களுக்குத் தம்பூராவானது சுருதி சம்பந்தத்தில் உதவியளிப்பது போல் லய சம்பந்தத்தில் இம் மத்தளம் உதவி யளித்து வருகிறது. பாட்டில் எடுத்துக்கொண்ட காலம்

---

1. பஞ்சமரபு உரை.

வேகமாகாமலும் குறையாமலும் தடுத்துப் பாதுகாத்து வருகின்றது. பாட்டின் எடுப்பு அறுதி இவைகளைக் கேட்பவர்கள் நன்றாய் அறியும்படி எடுத்துக்காட்டி உதவி செய்கிறது. பாட்டை நன்றாய் அனுசரித்து வாசித்து வரும்போது பாடுவோருக்கும் கேட்போருக்கும் இன்பமும் உற்சாகமும் பிறப்பிக்கத்தக்கதாய் இருக்கின்றது.

தோற்கருவிகளுள் தனிமையாக வாசித்து வரும்போதும் கேட்பதற்கு வெறுப்பு உண்டாகாமல் வாசிக்கத்தக்க வாத்தியம் மத்தளம் ஒன்றேதான்.

சங்கீதத்திற்கும் மத்தளத்திற்கும் உள்ள சம்பந்தம்:-

இறைவன் காளியுடன் தாண்டவமாடிய காலையில் பாதச் சிலம்பு கழன்று மேலேபோய்க் கீழ் வரும்போது சிவனது தோள் தொடை பாதம் என்னும் இவற்றில் விழுந்தது. அப்போது உண்டாகிய சப்தமானது த-தி-தொம்-நம்- என்ற சொற்களை உடையதாயிற்று. அச்சொற்களை மத்தளத்தில் அடிக்கும் போது உண்டான நாதமானது ஏழுசுரங்களின் நாதமாகக் காணப்பட்டது எனக் கோகளமுனி விரித்துக் கூறியுள்ளார்.

சங்கீதத்தில் சுரத் தானங்களும் அவற்றிற்குப் பன்னிரண்டு, பதினாறு பெயர்களும் உள்ளன. மத்தளத்தின் வலப்பக்கத்தில் வார் கோப்பதற்குரிய இடம் கண்கள் என்று பெயர்பெறும். அதில் பதினாறு கண்களே முன்பு இருந்தன தற்காலத்தில் முப்பத்திரண்டு, நாற்பத்தெட்டு ஆக நாகரிக முதிர்ச்சியால் கண்கள் அமைக்கப்பட்டுள்ளன. சொற்கள் கொடுக்க வேண்டிய தானங்கள் பன்னிரண்டு ஆகும். வலக்கை விரல்களினால் எட்டு விதமும், இடக்கையினால் நான்கு விதமும்,ஆகப் பன்னிரண்டு தானங்களே காணப்படுகின்றன. முறையாக எந்த விதமான சொற்களை வாசித்து வந்தாலும் பன்னிரண்டு தானத்தில் பன்னிரண்டு வகையைத் தவிர வேறு இடங்களில் வேறு சொற்கள் வரமாட்டா என்பதை அனுபவத்தில் முதிர்ந்தோர்கள் அறிவார்கள். ஒருவன் தோற்கருவியை வாசித்துக் கொண்டே தானும் பாடுவது மிக அருமையான காரியம். ஆனால், முப்பது ஆண்டுகளுக்கு முன், தஞ்சையில் மிருதங்கம் நாராயணசாமி ஐயர் மத்தளத்தை வாசித்துக் கொண்டே நாமாவளிகளையும் மராட்டியப் பதங்களையும் வாசித்ததுண்டு என திரு. பொன்னையாபிள்ளையவர்கள் கூறுகிறார்.[1]

1. தமிழர் இசைக்கருவிகள்—அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

முதலாம் ஆதித்தன் கல்வெட்டில் 'மத்தளம்' இடம் பெற்றிருக்கும் செய்தியை முன்னமே ''கண்டிகை'' என்ற தலைப்பில் கூறியுள்ளோம்.

''மத்தளம் கொட்டுகிற பாவை''—பற்றிய கல்வெட்டுக் குறிப்பை உடுக்கை''—என்ற தலைப்பில் கூறியுள்ளோம்.

அடுத்து மத்தளக்காரர்கள், முட்டுக்காரர்கள் என்று ஒரு கல்வெட்டில் குறிக்கப்படுவதை நாம் அறிகிறோம்.

''அகரகவையிபோகத்துக்கு எம்பெருமான் அடியார் நட்டுவ முட்டுக்கரரைக் கட்டளையிட்டும்—என்பதே அத்தொடர்.
(SI.I. xvii No. 684)

கோயில் மத்தளம்—என்ற பெயருடன் ஒரு மத்தளம் சென்னை எழும்பூர் அருங்காட்சியகத்தில் காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளது.

79. மிருதங்கம்

மிருதங்கம் என்பது இசையரங்கிலும், பஜனையிலும், கதா காலட்சேபத்திலும் வாய்ப்பாட்டுக்குப் பக்க வாத்தியமாகவும், தாள லயத்திற்கும் நுட்பமான சுருதி பேதங்களுக்கும் இன்றியமையாததாயும் வெகுகாலமாகப் பழக்கத்தில் இருந்து வரும் ஓர் இன்னிசைக் கருவியாகும். ஒலியின் தத்துவங்களை நன்குணர்ந்த நம்முன்னோர்கள், தங்களது நீண்டகால அனுபவத்தைக் கொண்டு கரடு முரடாக ஒலிக்கும் தன்மையனவான பறைகளில் பல சோதனைகள் செய்து பார்த்து இறுதியில் இன்னிசையொலிக்கும் இக்கருவியை மாற்றி யமைத்திருக்க வேண்டுமென்பது தெளிவு. இக்கருவியின் சித்திரம் அஜந்தா ஓவியங்களில் காணப்படுவதும், தில்லை நடராசர் கோயிலில் பரதநாட்டிய சாத்திரத்தின் நான்காவது அத்தியாயத்தை அப்படியே கல்லில் செதுக்கிய சிற்பிகள் ''லலாட திலகம்'' என்னும் பெயருடைய சிற்பமொன்றில் ஒரு நடிகனோடு இரண்டு பாடகர் மிருதங்கம் வாசிப்பதைச் சித்தரித்திருப்பதும் திரிபுரம் எரித்த விரிசடைக்கடவுள் ஆடிய கூத்துக்குப் பக்கவாத்தியமாக இருப்பதன் பொருட்டே இதைப் பிரமன் படைத்தான் என்றும் இதை முதன்முதலாக வாசித்தவர் கண நாதனே என்றும் புராணம் கூறுவதும் இதன் தொன்மையையும் சிறப்பையும் வலியுறுத்துவனவாகும்.

மிருதங்கம் என்னும் தொடர்ச் சொல்லுக்கு மண்—உடல் என்பது பொருள். ம்ருத் + அங்கம் = மிருதங்கம்; ம்ருத் = மண்; அங்கம்: உடல். ஆதலால், இதன் உடல் ஆதியில் மண்ணால் செய்யப் பட்டிருக்கவேண்டும்' இப்போது இது பலா அல்லது தேக்கின் ஒரே கட்டைவிருந்து குடைந்தெடுக்கப் படுகின்றது. இரு வாய் களையும் மூடும் தோல்கள், தோல்வளையங்களுடன் பிணைக்கப் பட்டுத் தோல்வார்களால் இறுக்கிக் கட்டப்படுகின்றன. இவ் வார்களுக்கும் உடலுக்கும் இடையே செறுகப்படும் சிறு கட்டைத் துண்டுகள் கருவியின் சுருதியைத் தேவைக்குத் தக்கபடி மாற்றி யமைத்துக் கொள்ளப் பயன்படுகின்றன.

மிருதங்கத்தின் வலது வாய் ஒரே மையமுள்ள மூன்று தோல் அடுக்குகளால் ஆனது. வெளிவட்டத்தை மீட்டுத்தோல் என்றும், உள்வட்டத்தைச் சாப்புத்தோல் என்றும் கூறுவர். வெளிவட்டத்திற்குக் கன்றின் தோலையும், உள்வட்டத்திற்கு ஆட்டின் தோலையும் உபயோகிப்பர். சாப்புத்தோலின் மையத்தில் எப்போதும் கறுப்புப்பசை வட்டமாகத் தடவப் பட்டிருக்கும். இதைச் சோறு என்றும், கரணை என்றும், மருந்து என்றும் பல விதமாகக் கூறுவர். இக்கறுப்புப் பசையானது மாங்கனீஸ் என்னும் உலோகத்தூள், சோறு, புளியஞ்சாறு ஆகியவற்றின் சேர்க்கை யாகும். இதைத் தடவித் தேய்த்து விடுவர். பசை நடுவே கனமாயும் ஓரங்களில் இலேசாயுமிருக்கும். இக்கறுப்பு வட்டமே மிருதங்கத்திற்கே உரித்தான ஒலியைத் தருகிறது.

இட வாயில் இரண்டு வட்டங்களே யுள்ளன. வெளி வட்டம் எருமைத் தோலாலும் உள்வட்டம் ஆட்டுத் தோலாலும் ஆனவை. கச்சேரியின் தொடக்கத்தில் இதன் மத்தியில் சொஜ்ஜிப் பசையையோ அல்லது சோறும் சாம்பலும் குழைத்ததொரு பசையையோ தற்காலிகமாகத் தடவிக் கச்சேரி முடிந்த பின்னர் அதை விலக்கி விடுவர். வல வாயின் ஒலியை விட ஒரு ஸ்தாயி குறைவாக இருப்பதற்குத் தேவையான அளவுக்கே இப் பசை தடவப்படும்.

வாய்ப்பாட்டில் தாளங்களின் ஜதிபேதங்களைப் பயின்ற பிறகே இக்கருவியைப் பயிலுவர். மிருதங்கம் வாசிப்பவர் ஜதிகளைப் பலவிதமாகச் சேர்த்தும் மாற்றியும் தங்கள் திறமையைக் காட்டுவர். அவர்கள் பிரதானப் பாடகரின் குரலுக்கு இசைய மிருதங்கத்தின் சுருதியை அமைத்துக் கொள்வது

இன்றியமையாததாகும். அவர்கள் பாட்டின் காலப் பிரமாணத்தி லிருந்துசிறிதும் பிறழலாகாது. திறமையுடன் வாசித்தால் அவர்கள் தாளலயங்களின் அழகுகளை எல்லாம் எடுத்துக்காட்டலாம்.

வேணுகோபால் செட்டியார், தஞ்சாவூர் நாராயணசாமி ஐயர், துகாராம், சாந்தபுரம் சுப்பையா, கும்பகோணம் அழகநம்பிப் பிள்ளை, தட்சிணாமூர்த்தி, (1875—1936) பாலக்காட்டு மணி ஐயர், ஆகியோர் இவ்வாத்தியத்தை வாசித்துச் சிறப்பெய்தியவர்கள்[1].

மிருதங்கத்தின் வல வாயின் மூன்று தோல் அடுக்குகளில் வெளிவட்டம் 'வெட்டுத்தட்டு' என்றும், அடுத்த வட்டம் கொட்டுத்தட்டு, என்றும், உள்வட்டம், உட்கரைத்தட்டு,' என்றும் பெயர்பெறும்.

மிருதங்கம் தக்கு சுருதி என்றும், ஹெச்சு சுருதி என்றும் இரண்டு வகைப்படும். தக்கு சுருதி வகை மிருதங்கம் ஒன்று முதல் மூன்று வரையான சுருதிக்கும், ஹெச்சு சுருதி வகை மிருதங்கம் நான்கு முதல் ஐந்தரை வரையான சுருதிக்கும் பொருந்தும். தக்கு சுருதி வகை ஆண்களின் கச்சேரிகளிலும், ஹெச்சு சுருதி வகை பெண்களின் கச்சேரிகளிலும் உபயோகிக்கப் படுகின்றன.

தக்கு சுருதியின் நீளம் இருபத்துநான்கு அங்குலம். மத்திய பாகத்தின் விட்டம் பதினொரு அங்குலம். இடது வாயின் (தொப்பி) விட்டம் ஏழே முக்கால் அங்குலம். வலது வாயின் விட்டம் (வளர்தலை) ஆறே முக்கால் அங்குலம் இட வாயாகிய தொப்பி யிலிருந்து மிருதங்கத்தின் மத்திய பாகத்திலுள்ள "அரடா" என்ற வளையம் வரை நீளம் பத்தே முக்கால் அங்குலம். அந்த "அரடா" என்ற வளையத்திலிருந்து வல வாய் வரை நீளம் பதின்மூன்றே முக்கால் அங்குலம். மிருதங்கத்தின் உடல் பாகம் வலப்பக்கம் 9/16 அங்குலம் கனம் உள்ளது. இடப்பக்கம் 10/16 அங்குலம் கனம் உள்ளது. மத்தியில் சுமார் $\frac{7}{8}$ அங்குலம் கனம் இருக்கும்.

ஹெச்சு சுருதியின் நீளம் இருபத்திரண்டு அங்குலம். விட்டம் பத்து அங்குலம். வலப்பக்கம் ஆறேகால் அங்குல விட்ட முடையது. இடப்பக்கம் ஏழேகால் அங்குல விட்டமுடையது. இடப்பக்கமிருந்து மத்திய வளையம் வரை நீளம் ஒன்பதே முக்கால்

---

1. தமிழர் இசைக்கருவிகள், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

அங்குலம் நீளம். மத்திய வளையத்திலிருந்து வலப்பக்கம் வரை நீளம் பன்னிரண்டேகால் அங்குலம். உடல் பாகத்தின் வலப்பக்கம் அரை அங்குல கனம். இடப்பக்கம் 9/16 அங்குலம் கனம்.[1]

80. முரசு

முரசு என்ற கருவி வீரமுழவு. பண்ணமை முழவான முன் சொன்ன வீரமுழவு நான்கும் என்றும், அவையாவன முரசு நிசாளம், துடுமை, திமிலை யென இவை என்றும் கூறுகிறார் அடியார்க்கு நல்லார்.[2]

சாமரை தீபந் தமனியப் பொற்குடம்
காமர் கயலிணை முதலாத் — தேமருவு
கண்ணாடி தோட்டி கதலிகை வெண்முரசம்
எண்ணிய மங்கலங்க ளெட்டு

என்ற பாடல் அட்ட மங்கலங்களுள் ஒன்றாக முரசைக் கூறுகிறது.

தம் கொடியின் சின்னமாக முரசைக் கொண்டிருந்தான் தருமன்.

மலை, ஆறு, நாடு, ஊர், யானை, குதிரை, மாலை, கொடி, முரசு, ஆணை ஆகிய தலைவனின் தசாங்கங்கள் பத்தில் முரசு ஒன்று.

முரசு என்னும் தோற்கருவியின் மீது பரப்பப்படும் தோல் பற்றி நாம் அறியும் பண்டைய இலக்கியச் செய்தி:—

மாறுபாட்டை ஏற்றுக் கொண்ட கோறற் றொழிலையுடைய ஏற்றினது செவ்வித்தோலை மயிர் சீவாமல் போர்த்துவர்.[3]

புலியைப் பொருது கொன்று நின்று சிலைத்துக் கோட்டுமண் கொண்ட ஏறு இறந்துழி அதன் உரிவையை மயிர் சீவாமல் போர்த்துவர்.[4]

புலியொடு போரிட்டுப் புறங்கொடாது வென்ற அழகிய காளையினது தோலைப் போர்த்துக் கட்டுவர்.[5]

---

1. A Dictionary of south Indian Music and Musicians, Prof. P. Sambamurthi, vol III (L-N).
2. சிலப். அரங்கேற்றுகாதை - 3.27 உரை.
3. பத்துப்பாட்டு-மதுரைக்காஞ்சி 732.
4. சிலப். 5—ஆ. அடியார்க்கு நல்லார் உரை.
5. அகம். 334.

மண்ணைக் குத்திக் கொள்வதால் வரிவரியாகக் கீறப்பட்ட மிக்க கூரிய கோட்டினையுடைய பெருமை பொருந்திய நல்ல ஆனேறு இரண்டினைத் தம்முள் போர்செய்ய விடுத்து வெற்றி பெற்ற ஏற்றின் தோலை மயிர் சீவாது போர்த்துவர்.[1]

மயிர் சீவாமல் தோல் போர்த்தப்பட்ட செய்தியைப் பல இடங்களில் காண்கிறோம்.

பெரிய திண்ணிய தோலாகிய போர்வை வலித்துக் கட்டப் படும். குற்றந்தீர வலித்துப் பிணித்து வாரப்பட்ட வாரை யுடையது முரசு. வாரால் விசித்துக் கட்டப்பட்டதோடு தொழில் மாட்சிமையும் பொருந்தியது.

முரசு பெரிய கண்ணையுடையது. ஒலிக்கும் இடம் அகன்றது. உரல் போன்ற வட்டமான வாயையுடையது. மயிர் சீவாது போர்த்தப்பட்ட கண்ணையுடையது. குறுந்தடியால் தாக்கிப் புடைத்து ஒலிக்கப்படும் இழுமென்னும் ஓசையையுடையது. இன்னிசையுடையது. உருமேற்றினது இடிபோலும் ஓசையையும் உடையது.

முரசு செய்யும் மரபு: பகைவர் பலர் கூடி நின்று காத்த மலர்ந்த பூக்களையுடைய கடம்ப மரத்தினை, காவலமைந்த அடி யோடு தடிந்து ஒழிக்குமாறு வீரரை ஏவி, போரை வென்று முழங்கும் முரசு. பகைவரது காவல்மரத்தை வெட்டி அதைக் கொண்டு முரசு செய்தல் மன்னர் இயல்பு.[2]

கடலைக் கடந்து சென்று காவல்மரமாகிய கடம்பினை வெட்டி வீழ்த்தி, அதனால் செய்யப்பட்ட வெற்றி தரும் பெரிய முரசு.[3]

மோகூர் மன்னனுடைய காவல் முரசைப்பற்றி, அவன் உரைத்த வஞ்சினத்தைச் சிதைத்துத் தன்னையும் பணிவித்து, அவனுடைய காவல் மரமாகிய வேம்பினையும் அடியோடு வெட்டி வீழ்த்தி, முரசு செய்வதற்கேற்பச் சிறுதுண்டங்களாகத் தறித்து, வண்டியி லேற்றி யானைகளை அதனை யீர்க்கும் பகடுகளாகப் பூட்டிச் செலுத்தினான்.[4]

---

1. புறம் 288.
2. பதிற். இரண்டாம்பத்து-பதிகம்.
3. ,,-17.
4. பதிற். ஐந்தாம்பத்து 44.

வீர முரசு முழக்கும் மரபு : செந்தினையைக் குருதியோடு கலந்து தூவிப் பலியிட்டு, நீராடி வார்க்கட்டமைந்த முரசத்தின் கண்ணில் குருதி பூசி, வலக்கையில் கடிப்பினையேந்தி, வீரர் தொடி அணிந்த தம் தோளோச்சி, புடைத்து முரசினை முழக்குவர்.

போர்க்களத்தே அறப்போருடற்றிப் பெறும் புகழ் விருப்பால் அதனை நாடிச் செல்லும் வீரர், முதற்கண் தம் வென்றி முரசிற்கு வார்க்கட்டினைச் செவ்விதாக அமைத்துச் செந்தினையும் குருதியும் பலியாகத் தூவி, குருதியால் அதன் கண்ணைத் துடைத்துக் கடிப்பு கொண்டு முழக்குவர்.[1]

பரவுக்கடன் ஆற்றும் திறன் : இசைவிருந்திற் கலந்து சாற்றுணவாகிய பெரிய விருந்து உண்பிப்பதற்காக முழங்குகின்ற கொடை முரசம் எற்றப்படுகிறது. பெருஞ்சமம் ததைந்த வீரர்க்கு இசைவிருந்தும், பெருஞ்சோற்று விருந்தும் செய்தல் வேந்தர்க்கு இயல்பு.[2]

பெருஞ்சோற்று நிலை : அரிய திறல் படைத்த முறைமையினையுடைய முரசுறை கடவுளை வழிபடுவானாய் உயர்ந்தோன் படைத்த பெறுதற்கரிய பலியினை, பெரிய கண்களையுடைய பேய் மகள் தீண்டுதற்கு அஞ்சிக் கைகளைப் புடைத்துக் கொண்டு நடுங்க, குருதி தூவிய நிறைந்த கண்களோடு கூடிய பெரிய அப் பலியானது, எறும்பும் மொய்க்காத வியப்புத்தரும் முறைமையினையுடைத்தாகவும், தூவப்பட்ட அப்பலியினைக் கரிய கண்ணையுடைய காக்கையுடனே பருந்துகள் இருந்து உண்ணும்.[3]

கொற்ற முரசத்திற்கு நீராட்டி அணி செய்து பலியூட்டி வணங்குதல் மரபு. வீரர் திரும்பி வந்து முரசுக்கு அரிய பலியிட்டுப் பரவுவர். பகைவரை வென்று முரசு கொள்ளுவர். சில காலத்துப் பயன் கொள்வாரின்மையின் பண்ணழிந்து கிடந்த பழைய முரசினைத் தான் தோன்றி அதன் அழிவு தீர்த்து அதன் பயன் கொள்ளுதல் உண்டு.

தமது பசுந்தலையை 'வேந்தன் கொற்றங் கொள்க' எனப் பேசும்படி அரிந்து ஒப்பித்துப் பீடிகையிலே வைத்த அப்பொழுதே,

---

1. பதிற். இரண்டாம் பத்து. 19.
2. பதிற். மூன்றாம்பத்து. 30 உரை.
3. பதிற் மூன்றாம்பத்து. 30 உரை.

அக்குறையுடல்கள் தமக்கு வாயின்மையின், தத்தந் தோளிற் பூண்ட மயிர்க்கண் முரசின் வாயால் ''உயிர்க்கடன் தந்தோம் கொண்மின்'' என்று நின்று பலியூட்டுவர்.[1]

பாசறைகளில் பகையரசர் நடுங்குமாறு முரசு முழங்குகிறது. ஒலிக்கின்ற கண்ணையுடைய பள்ளியெழுச்சி முரசம் நாட் காலத்தே ஒலிக்கும். கடலொலிபோலே முழங்கும் ஓசையையுடைய நன்றாகிய முரசைச் சாற்றினராய் விழவினை நாட்டிலுள்ளார்க்குச் சொல்லுவர். பேயின் கண்ணை யொத்தது முழங்குகின்ற காவலையுடைய முரசம். பகைவரது முரசைக் கைக்கொண்டு அவராற் பாதுகாக்கப்படுகின்ற அரணையும் கைப்பற்றுவர். கடிப் பினை யோச்சி அறைதலால் முரசு, போர் வீரரை முன்னேறிச் செல்லுமாறு ஏவுதலைச் செய்கின்றது. வேந்தன் பணிக்கும் ஏவலைத் தன் முழக்கத்தால் உணர்த்தும் பெருமையுடைமை தோன்றப் போர் முரசை 'ஏவல்வியன்பணை' எனச் சிறப்பித் தனர். போரெனப்புகலும் மறவரின் வேட்கைக் கொப்பப் போர் மேற் செலவினை ஏவும் குறிப்பிற்றாதலின் முரசின் முழக்கம் 'இன்னிசை யிமிழ்முரசு' எனப்படுகிறது. போர்ப்பறையும் முரசும் பிற இசைக்கருவிகளும் கூடி இசைக்கப்படும். அது 'விரவுப் பணை முழங்கொலி'' எனப்பட்டது முரசு வெற்றியை உண்டாக்கும். வெற்றியும், விழவும், கொடையும் குறித்து முழங்கும் மூவகை முரசுகளுள் வெற்றி முரசே வேந்தர்க்குச் சிறந்தது. வலம்படு முரசு என்றதும் அதனால்தான். மன்னனின் எறிகின்ற முரசம் இவ்வுலகத்திற்குக் காவலென்று கூறும்படியாக ஒலியா நிற்கும். ஆகவே அது ஏமமுரசு. தோற்று ஓடும் மன்னர்கள் தம் முரசங்களைக் கைவிட்டு ஓடுவர். அரண்மனைக் காவலர் மாலையில் முரசம் முழங்குகின்றனர். அது மாலை முரசம் ஆகும். குருதிப் பலி கொள்ளும் விருப்பத்தையுடைய உட்குப் பொருந்தியது வீரமுரசம். முரசம் மூன்று. வீரமுரசு, நியாயமுரசு, தியாகமுரசு என்பன. மணமுரசுடனே ஏனைய இரண்டையும் கூட்டி மூன்றென்றும் கூறுவர்.

முரசமெல்லாம் பரிப்பார் (காப்பவர்) படுதலான் இருந்து கெடும். பராமரிப்பு இன்றேல் முரசம் கெடும். முரசும் அரசும் இயைந்தே கூறப்படும்.

---

1. சிலப். இந்திரவிழவூரெடுத்த காதை 88.

பெரிய குறுந்தடியால் அடிக்கப்பட்ட பெரு முழக்கத்தை யுடைய முரசம் மற ஒழுக்கமுடைய வீரரிடத்தே சென்று அரசாணை என்ற ஒரு குறிப்பே தோன்ற முழங்கும். அம் முழக்கம் இடி போன்று ஒலிக்கும் [அரசாணை—ஒருமொழி].

''கரிகாலன் வாளும் குடையும் முரசும் நாளொடு பெயர்த் தான்''— வாளும் குடையும் முரசும் பெயர்த்தல் வாணாட்கோள் குடை நாட்கோள், முரசு நாட்கோள் என அவை முறையே கூறப் பட்டன. முரசு நல்ல நாளில் இடம் பெயர்க்கப்படும்.

முதுகுடிப் பிறந்தோன்—வள்ளுவன். வச்சிரப்படை நிற்கும் கோயிலின் கண்ணுள்ள விழாமுரசினை, கச்சையை யணிந்த யானையின் பிடரி மீதேற்றி, வென்ற நல்லேற்றின் உரியாற் போர்த்தப்பட்டதும், இடியையொத்த முழக்கத்தையுடையதும், கூற்றுவனை யழைப்பதும், குருதிப்பலி கொள்ளும் விருப்பத்தினை யுடையதுமாகிய வீரமுரசத்தைக் குறுந்தடிகொண்டு அறைகின்ற தொல்குடிப் பிறந்தோன் வள்ளுவன்.[1]

செய்தி அறிவிக்கும் முறையும் மரபும் : வாளினையுடைய மறவரும், தேரும் குதிரையும், யானையும் சூழ்ந்து வர, முகத்தினை யுடைய முரசத்தினை அடித்து, மக்கள்பால் பசியும் நோயும் பகையும் நீங்கி, நாட்டிலே மழையும் வளமும் பெருக என்று வாழ்த்தி அந்நகரிடத்தே அழகிய விழாவைத் தெரிவித்தான்.[2]

பேய் பிடித்தாடுவோரின் பின் பறைகொட்டிச் செல்லுதல் உண்டு.

வெற்றிமுரசு வெள்ளிய துகிற் சேக்கைக் கண்ணே வைக்கப் பெறும். தன் வெற்றியைப் புலப்படுத்துவதற்கு அரசன் முரசை அதிர்ப்பித்தல் மரபு.

முரசு கண்கிழிதலும், கொடியற்று விழுதலும் தீய நிமித்தங்கள்.

ஒரு பெண்ணை மணக்கும் பொருட்டு ஆயர் தம் குல வழக்கப் படி காளையைத் தழுவும் போது முரசு கொட்டப்பட்டது (ஏறு கோட்பறை).

---

1. மணிமேகலை—விழாவறை காதை 27.
2. 69.

ஆரவாரிக்கும் வீரக் கழலினையுடையானது பரந்த மாளிகை யிடத்துப்பலியைப் பெறும் முரசின் தன்மையைச் சொல்லியது முரச வாகை எனப்பட்டது. பொன்புனை உழிஞை சூடி மறியருந்தும் திண்பிணி முரசநிலை யுரைத்தல் முரசவுழிஞை யாகும்.

தனக்கொரு பயனின்றியே ஊரவர்க்குச் செய்தி யுணர்த்தும் பொருட்டு முழங்கும் முழக்கத்தையுடைய முரசம்—என்று முரசின் குணம் காணக் கிடக்கின்றது.

கும்பகன்னன் சதை, தோல், எலும்பு என்று சொல்லப்படும் இவை அனைத்தும் உதிரத்துடன் கலந்து படுமாறு குரங்குக் கடலைக் காலாற் கலக்கினான். அச்செயல் திருவிக்கிரமப் பெருமாள் மேருமலையினை உள்ளே நன்குதுளைத்து ஒருமுரசாகச் செய்து, அதற்குத் தகப்பொருந்திய வலிய குறுந்தடியொன்றினை வலத்தேயேந்தி முழக்கினாற் போன்றிருந்தது.[1]

பறை, முழவு, பேரிகை என்றும் முரசு என்ற சொல்லுக்கு உரையாசிரியர்கள் பொருள் கூறியுள்ளனர்.

வன்மைக்கருவி என்றும், வீரக்கருவி என்றும், பன்மை முழவு (பண்ணமை முழவு) என்றும் இசைநூலில் முரசு வகைப்படுத்தி யுள்ளது. சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் மூவர்க்கும் உரியது முரசு என்றும் அந்நூல் கூறுகிறது.

பறைப்பொது என்றும், மருதநிலப்பறை என்றும், போர்ப் பறை என்றும் பொருள் கூறுகிறது சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி.

முரசு — சில கல்வெட்டுக்களிலும் குறிக்கப் பெறுகிறது.

1. "பள்ளற்கு தவிலும் முரொசும் சேமக்கலமும்"-IPS. 956.
2. "வெற்றி முரசும் க்ஷீண வீரபத்திர மல்லாரி முதலாய மேளங்களும் சேவிப்பிச்சு"

கன்னியாகுமரி-கல்குளம்-பத்மநாபபுரம்-ஓலை.

"வெங்கலமுரசு"—என்றும் ஒரு கல்வெட்டில் குறிக்கப் படுகிறது.

"வெங்கல முரசும் கொம்பும் வெள்ளி கெட்டின பொந்தியும் கல்பிச்சுத்தந்து"

---

1. கம்ப-கும்பகருணன் வதைப்படலம் - 1550-339.

TASE P. 222-27.

81. முருடு

முருடு என்றால் பத்தல் என்றும், மத்தளம் என்றும் பொருள் கூறுகிறார் அடியார்க்கு நல்லார்.

(சிலப். 1- மங்கல வாழ்த்துப்பாடல். 46)

மங்கலமான செயல்கள் நடைபெறும்பொழுதும், முடிவிலும் மங்கல வாத்தியங்கள் முழங்குதல் மரபு. அத்தகைய கருவிகளுள் முருடு என்ற தோற்கருவியும் ஒன்று. ஆகவே முருடு என்பது மங்கல வாத்தியமாகும். இதைப் போர்ப்பறை என்றும் கூறுகின்றனர்.

முரசு, சங்கு, காளம், ஆகுளி ஆகிய பிற இசைக் கருவிகளுடன் முருடு என்ற இந்தக் இசைக் கருவியும் ஒலிக்கப்படுகிறது.

82. முழவு

முரசு என்ற தோற்கருவியைப் போலவே முழவு என்ற தோற்கருவியும் நம் பண்டை இலக்கியங்களில் பயின்றுவரும் ஒரு கருவி என்பது குறிப்பிடத்தக்கது.

அகமுழவு, அகப்புறமுழவு, புறமுழவு, புறப்புறமுழவு, பண்ணமை முழவு, நாண்முழவு, காலைமுழவு என இதை எழு வகையாகப் பிரிக்கின்றனர்.[1]

முழவு,தோல் போர்க்கப்பட்டுத் திண்ணியவார்களால் விசித்துக் கட்டப்பட்டது. மார்ச்சனை அமைந்தது திண்ணிய வாராலே இறுக வலித்துக் கட்டும் முறையில், அடிக்கும் இடமாகிய தன் கண்களில் இசை அமைக்கப்பட்டது. அடிக்கும் இடமாகிய தன் கண்ணின் (அடிக்கும் இடத்தில்) நடுவில் விரல்கள் பதிந்த சுவடுகள் தெரியும். குருதிப் பலியூட்டிய வட்டமான கண்ணையுடையது. மயிர் மறையும் படியாய்த் தோல்போர்த்த கரியகண் அமைந்தது. கொல்லேற்றுரிவையின் மயிர் சீவாது அகத்தே அம்மயிர் மறையும் படியாகத் தோல் போர்த்த முரசு. ஒருதலைக் கண்ணே துளையை அகத்தேயுடைய சிறிய முழா என்று புறநானூறு கூறுகிறது.

குறுந்தடியால் அடித்து ஒலி எழுப்புவர். மிகவும் குளிர்ந்த குடமுழாவின் கண் எறிகின்ற குறுந்தடி அதன் கண்ணை விதிர்ப்

1. சிலப். 3. 27. அடியார்க்கு நல்லார் உரை.

புறச் செய்யும் என்று ஒரு செய்தி கூறுகிறது. முழவினை இடையறாது இசைத்தால் சூடேறி அது கிழியும். அவ்வாறு இடையறாது இசைக்கும் பொழுது சூடேறிக் கிழியாதபடி மார்ச்சனையை ஈரப் படுத்துவர். தாளக்கருவியைத் தழுவி ஒலிக்கும் இயல்பினது முழவு. முழவின் ஒலி, கேட்போர் மகிழும் தன்மையது. ஆனால் அதே சமயத்தில் மார்ச்சனையில்லாத முழவின் ஒலி துன்பத்தைத் தரும் என்றும் தெரிகிறது.

'தோற் பொலி முழவும் யாழும்'' (675) என்ற சீவக சிந்தாமணிச் செய்யுளுக்கு உரையெழுதும் நச்சினார்க்கினியர், தோற்கருவியின் இலக்கணத்தைக் கூறுகிறார்.

மார்ச்சனை முதலியவு முளதாய்,

''இடக்கண் இளியாய் வலக்கண் குரலாய்

நடப்பது தோலியற் கருவியாகும்''—என்ற ஓசையுமுடைத் தாய் அமைவது தோற்கருவி கஞ்சத்தால் செய்ததென்பது தோன்றப் பொலிமுழவு எனக் கூறியதாகவும் நச்சினார்க்கினியர் விளக்குகிறார்.

கல்லாடம் என்ற நூலில் ஐந்து முகங்களையுடையதாக ஒரு வகை முழவு கூறப்படுகிறது. தனது பெரிய உடலின் மேல் தலையினைப் பெற்ற முழவம் என்னும் தோற்கருவி, தன் நான்கு முகங்களிலும், நடுமுகத்திலும் தட்டுதலாலே முழங்கும் என்று கூறப்படுகிறது இதனாலே முழுவம என்ற தோற் கருவி உச்சி யிலே ஐந்து முகங்களையுடையது என்றும், அதனை முழக்கு வோர் அவ்வைந்து முகங்களிலும் மாறிமாறிப் புடைத்து முழக்குவர் என்றும் தெரிகிறது.

தன் ஐந்து முகங்களும் வெவ்வேறு ஓசையாக முழங்கும் குடமுழா என்னும் தோற் கருவியினை (வாணசுரன் தன் ஆயிரம் கைகளாலும்) முழக்கினான் என்று கூறப்படும் செய்தியின் மூலம் ஐந்து முகங்களும் வெவ்வேறு ஒலியாக முழங்குவது குடமுழா என்றும் அறிகிறோம்[2]

'பஞ்சமுக வாத்தியம்' என்ற பெயருடன் ஓர் இசைக் கருவி காட்சிக்காக வைக்கப்பட்டு, கீழ்க்கண்டவாறு குறிப்பும் எழுதி வைக்கப்பட்டுள்ளது.

---

1. கல்லாடம். 8.
2. ,, 21.

''இந்த இசைக் கருவி ஐந்து முகங்களைக் கொண்டது. முக்கியமாகக் கோயில்களில் வாசிக்கப்படுகிறது. அருணகிரிநாதர் இவ்வாத்தியத்தைக் ''குட பஞ்சமுகி'' என்று அழைக்கிறார். '**பாசிவர்**' எனப்படும் தனிப்பட்ட வகுப்பினர் இந்த வாத்தியத்தை வாசிப்பர். இக்குறிப்பிட்ட வாத்தியம் திருவாரூரிலிருந்து கொண்டு வரப்பட்டது.''[1]

இம்முழவு ஐந்து முகங்களையுடையது. நிலையான ஓர் உயர்ந்த சட்டத்தின்மீதோ, நான்கு சக்கர வண்டியிலோ வைக்கப்பட்டிருக்கும். இது ஒரு கோயில் வாத்தியம். சிவபெருமானின் சத்யோ ஜாதம், ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம் என்ற ஐந்து முகங்களைக் கொண்டே, ஐந்து முகங்களையுடைய இந்தக்கருவி பெயர் பெற்றது. இக் கருவியின் உடல் வெண்கலத்தால் ஆனது மேற்பகுதி ஐந்து உள்ளீடற்ற கூம்பு வடிவங்களைக் கொண்டது. இவற்றின் மேற்பகுதி தோலால் போர்த்தியிருக்கும். ஐந்தும் ஒரே மட்டத்தில் இருக்கும். சில கருவிகளில் இடையிலுள்ள ஒன்று சற்று உயர்ந்துள்ளது. மத்தியிலுள்ள கருவியின் விட்டம் மற்ற நான்கையும் விடச் சற்று பெரியது இரு கைகளாலும் இப்பறை இயக்கப்படுகிறது. சுத்தமத்தளத்துடன் இணைந்தும் இக்கருவி முழக்கப் படுகிறது. 'பரசிவர்' என்ற வகுப்பினரே இக்கருவியை வாசிக்க உரிமையுடையவர்.[2]

கோயில் வாத்தியங்களுள் ஐம்முகமுடைய சிறப்பு வாய்ந்த முரசும் ஒன்று. அது பஞ்சமுக வாத்தியம் என்றும், பஞ்சானன முரசு என்றும் வழங்கும். சங்க இலக்கியத்திலும்,பெருங்கதையிலும்' தேவாரத்திலும் கூறப்படும் குடமுழா இதுவே யென்பர். இம் முரசு உலோகத்தினால் செய்யப்பட்ட ஒருபெரிய காலிக் குட வடிவில் அமைந்துள்ளது. இதற்குத் தலையில் ஐந்து வட்டமான வாய்கள் உண்டு நடுவேயுள்ள வாய் மற்ற வாய்களை விடப் பெரிது. ஒவ்வொரு வாயும் தோலால் மூடப்பட்டிருக்கும். இதை வாசிப்போன் இருகைகளாலும் இவற்றின் மீது அடிப்பான். ஒவ்வொரு வாயினின்றும் ஒரு தனி இசைபிறக்கும் இதன் காரணமாகவே இவ்வாத்தியத்தைப் '**பஞ்ச மகாசப்தம்**' எனவும் கூறுவர். இவ்வாத்தியம் கோயிலுக்குள் இதற்கெனச் செய்யப்பட்ட ஒரு சட்டத்தின் மீது வைக்கப்பட்டிருக்கும். தமிழ்நாட்டில்

1. அருங்காட்சியகம், எழும்பூர், சென்னை.
2. சென்னை அருங்காட்சியக இசைக்கருவிகளின் கையேடு

இவ்வாத்தியம் இப்போது வெகு அபூர்வமாகவே காணப்படுகிறது. திருத்துறைப்பூண்டியில் ஸ்ரீபாவ அவுஷதேசுவரசுவாமி கோயிலிலும், திருவாரூர் ஸ்ரீ தியாகராஜ சுவாமி கோயிலிலும், திருவானைக்காவிலுமே காணப்படுகிறது.

திருத்துறைப்பூண்டியில் தியாகராஜசுவாமி உற்சவத்தின் போது இது முழக்கப்படுகின்றது. இது வெண்கலத்தாலானது. சற்றேறக்குறைய முட்டை வடிவமானது, வாய்கள் மான்தோலால் மூடப்படுள்ளன. இதன் உயரம் இரண்டி மூன்றங்குலம். மிகவும் பருத்துள்ள இடத்தில் இதன் குறுக்களவு இரண்டடி மூன்றங்குலம். நடுவாயின் குறுக்களவு எட்டு அங்குலம். இதரவாய்களின் குறுக்களவு ஐந்தங்குலம். திருவாரூரிலுள்ள பஞ்சமுகவாத்தியம் இப்பொழுது முழக்கப்படுவதில்லை சென்னைப் பொருட்காட்சிச் சாலையில் இவ்வகை முழவு ஒன்று காணப்படுகின்றது. இந்த அபூர்வமான முழவு மறைந்து போகாமலிருக்க வேண்டி வானொலி நிலையத்தார் இதையும் பிரபலப்படுத்த வேண்டும்.[1]

பஞ்சமுக வாத்தியம் என்பது பழங்கால முழவு வாத்தியங்களின் வளர்ச்சியே. இருகைகளாலும் முழக்கப்படுகின்றது. ஒவ்வொரு முகமும் வெவ்வேறு ஒலியைத் தருகிறது. பொதுவாக இவ்வொலி மிருதங்க ஒலியை ஒத்தே உள்ளது தமிழ் நாட்டில் திருவாரூர், திருவானைக்கா ஆகிய இடங்களில் உள்ளது. சிதம்பரம் கோயிலில் பஞ்சமுக வாத்தியத்தின் சிற்பம் ஒன்று உள்ளது. இந்த வகையான கருவி கி. மு மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்ததென்று ராஜ்கோட் என்னுமிடத்தில் நடந்த புதைபொருள் ஆய்வாளர்கள் கண்டுபிடிப்பு மூலம் தெரிகிறது.[2]

பண்டைத் தமிழர், மணவிழாவில் பல இசைக் கருவிகளை முழக்கினர். அவற்றுள் முழவும் ஒன்று. அவ்வாறு திருமணத்தில் முழங்கும் அந்த வகை முழவு மணமுழவு எனப்பட்டது.

விழாக்காலங்களிலும் முழவு முழக்கினர். மார்ச்சனை பொருந்திய முழவினது தாளத்திற்கு இயைய விறலியர் ஆடினர். முதற்சாமத்திலே வாசித்தற்குரிய நன்றாகிய யாழ்களுக்கு நடுவே அவற்றிற்கேற்பத் தாழ்ந்து தம் வயிற் செறிந்த ஓசையை யொக்க

1. தமிழர் இசைக்கருவிகள், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.
2. Musical Instruments of India, S. Krishnasamy, P. 9.

நின்ற முழவாலே மனம் மகிழ்ந்தாடினர். விழாக்காலங்களில் தொடர்ந்து ஆடினர். முழவின் மார்ச்சனை புலர்ந்து உகும் அளவுக்குத் தொடர்ந்து ஆடிக் கொண்டே இருப்பர். விழாக் காலத்து முழங்கப்படுகின்ற இவ்வகை முழவு மீண்டும் அதனுடைய இருக்கையாகிய கட்டிலிலே ஏற்றப்பட்டது. முழவைக் கட்டிலிலே ஏற்றிப் பாதுகாத்து வைக்கும் மரபு இருந்தமையையும் அறிகிறோம். இடையறாது முழங்கும் பொழுது சூடேறிக் கிழியாதபடி, மார்ச்சனையை ஈரப்படுத்தும் முறையும் இருந்தது. முழவின் மார்ச்சனையையுலராமல் பாதுகாப்பது முக்கியமான செய்தியாகத் தெரிகிறது.

குருதிப் பலியைக் கொள்ளுவதால் முழா, சோரிமுழா எனப் பட்டது. இசைக்கருவிகளைத் தமிழர்கள் ஓரிடத்திலிருந்து மற் றோரிடத்திற்குச் செல்லும்போது காவடியில் சுமந்து சென்றனர்.

தென் மதுரை மன்னன் மேகவாகனன் மனைவி இலக்குமி. மகள் சிரீமதி. அவள் தான் நடனமாடும் பொழுது தன்னை யாவனொருவன் முழவு வாத்தியத்தால் கூர்ந்து வாசித்து வெற்றியடைவானோ அவனே தனக்குரிய நாயகனாவான் என வஞ்சினம் செய்துள்ளாள் இசைக்கருவி, அதிலும் சிறப்பாகத் தோற்கருவி முழக்கும் திறமையை வைத்து மணமகனைத் தேர்ந் தெடுக்கும் முறை இருந்துள்ளமை தோற்கருவி வாசிக்கும் திறமைக்கு அருமையும் பெருமையும் அளிக்கும் உயர்வாகும்.

மறவனின் தோளிற்கு முழவு உவமையாகக் கூறப்படுகிறது. தாழையின் தாள் குடமுழா போன்றிருந்தது. பனை மரத்தின் அடி முழவினைப் போன்றது. பலாப்பழம் முழவு போன்றது. முழவு ஓசையை அளவறுத்து இசைக்கும் தாள அறுதி போல அலைகள் நீர்ப்பரப்பில் அசைந்து கொண்டிருந்தனவாம் சமுத் திரம் போல் முழங்கும் மங்கல முழவுகள்—சமுத்திர கோஷம்— என்ற கருவியின் பெயர்ப்பொருத்தம் நோக்கி இன்புறத்தக்கது. குயிலோசைக்குக் கூட முழவினொலி உவமையாகிறது. இரு சிறகரீர்க்குப் பரப்பி எருவை, குருதிப்பிணம் கவரும் தோற்றம் அதிர்விலாச்சீர் முழாப் பண்ணமைப்பான் போன்று இருந்தது.

முழவு என்ற சொல்லுக்குத் தடாரி, குடமுழா, வீரமத்தளம், மத்தளம், முரசு, பணை, தண்ணுமை என்றும் பொருள் கூறுகின்றனர் உரையாசிரியர்கள்.

யாழ், ஆகுளி, மத்தரி, தடாரி, தண்ணுமை, மகுளி, குறிய தூம்பு, நெடிய தூம்பு, குழல் போன்ற மற்ற இசைக்கருவிகளுடன் சேர்த்தும் இசைக்கப்படுகிறது முழவு.

முழவின் பெயர் குளிர் என்றும், வாச்சியப் பொதுப் பெயர் என்றும் சூடாமணி நிகண்டு கூறுகிறது.

முழவை மென்மைக் கருவி என்றும், தலைக்கருவி என்றும் அகமுழவு என்றும் வகைப்படுத்துகிறது இசை நூல் பிரமன், விட்டுணு, உருத்திரன் ஆகிய மூன்று கடவுளர்க்கும் இசைக்கப் படும் தோற்கருவிகளுள் ஒன்றாக முழவையும் கூறுகிறது.

முழவு என்ற சொல் தோற்கருவிகளில் ஒரு வகையைக் குறிப் பதாக இருந்தாலும். தோற்கருவிகள் எல்லாவற்றையும் குறிக்கும் பொதுப்பெயராகவும் இசைநூல் கருதுவதாகத் தெரிகிறது.[1] அடியார்க்கு நல்லார் முழவு ஏழுவகை என்று கூறியுள்ள செய்தியும் இக்கருத்தை வலியுறுத்துவதாகத் தெரி கிறது.

முழவு என்ற சொல்லுக்கு முரசு என்றும், குடமுழா என்றும், தம்பட்டம் என்றும் பொருள் கூறுகிறது சென்னைப் பல்கலைக்கழக அகராதி. குடமுழா என்ற பொருளுக்குப் பிங்கலத்தை மேற்கோள் காட்டுகிறது.

இந்தப் பஞ்சமுக வாத்தியம் ''பஞ்சமுதை'' என்று கல்வெட்டில் இடம் பெறுகிறது.

''நெல்நாழி........''

TAS. VII P 22.

83. மேளம்

நாகசுரம், ஒத்து, தவில், தாளம் ஆகிய இசைக்கருவிகள் இணைந்துள்ள தொகுதி மேளம் என்று கூறப்படும்.

மேளம் என்பது இரு முகம் கொண்ட ஒரு தோற்கருவி. தவில் வாத்தியம் என்றும் கூறப்படும்.

மேளம் நாகசுரத்துடன் வாசிக்கப்படுகிறது. வலப் பக்கம் கையாலும் இடப் பக்கம் குச்சியாலும் அடித்து வாசிக்கப்

1. பஞ்சமரபு—உரை.

படுகிறது. காட்சிக்காக வைக்கப்பட்டுள்ள பல தோற் கருவிகளுள் இதுவும் ஒன்று.[1]

மேளங்களும், மேளக்காரர்களும் கன்னியாகுமரி - கல்குளம் - பத்மநாபபுரம் ஓலையில் இடம் பெற்றிருப்பது அறியத்தக்கது.

1. 'வெற்றிமுரசும் க்ஷீணவீரபத்திர மல்லாரி முதலிய மேளங்களும் சேவிப்பிச்சு'
2. மேளக்காறர்க்கு தலையில் சந்திரகாவியும் கைய்யில் கைச்சுவடியும்,—

84. மொந்தை

மொந்தை என்பது ஒருகட்பறை. யானையின் காலைப் போன்ற அமைப்பு உடையது. கையால் முழக்கி ஒலி எழுப்பப் படுவது.[2]

கல்லவடத்திரள், தண்ணுமை, கல்லலகு, துத்திரி முதலிய பிற இசைக்கருவிகளுடன் சேர்த்து ஒலிக்கப்படும்.

தமிழிலக்கியங்களில் குறிக்கப்படும் மொந்தை என்ற தோற் கருவி ஒரு முகத்தையுடையது. ஒரே வகையான ஸ்வரம் மட்டுமே இசைக்க வல்லது.[3]

85. விரலேறு

விரலேறு என்ற ஒரு தோற்கருவி இசைநூலில் இடம் பெறுகிறது. மென்மைக் கருவி என்ற வகையில் இதைச் சேர்த்துக் கூறும்பொழுது பாங்கி என்ற பெயரில் குறிப்பிட்டு—விரலேறு பாங்கி என உரையாசிரியர் குறிப்பிடுகிறார். இடைக்கருவி என்றும், புறமுழவு என்றும் வகைப்படுத்துகிறது. வயிரவன், முருகன், துர்க்கை என்ற கடவுளர் மூவர்க்கும் இயற்றப்படும் தோற்கருவிகளுள் ஒன்றாக விரலேறு கூறப்படுகிறது.[4]


---

1. அருங்காட்சியகம், எழும்பூர், சென்னை.
2. கல்லாடம். 30.
3. இசையகராதி, பேராசிரியர் P. சாம்பமூர்த்தி.
4. பஞ்சமரபு-உரை.

86. ஜமலிக்கா

ஜமலிக்கா என்ற இக்கருவி பித்தளையால் செய்யப்பட்டது. உள்ளீடில்லாத உருளை வடிவமானது இருமுகங்களையுடைய ஒரு கருவி. சுமாராக ஒன்பது அங்குல விட்டமும், பத்து அங்குல நீளமும் கொண்டது. இக்கருவியின் ஒரு பாகம் மெல்லிய தோலினால் மூடப்பட்டது. அந்தத் தோலின் நடுவே சிறுதுளையில் பதினெட்டு அங்குலம் நீளமுள்ள நரம்பு இணைக்கப் பட்டுள்ளது. அந்த நரம்பு மறுமுனையில் உள்ள ஒரு கட்டையில் சுற்றப் பட்டுள்ளது. அக்கட்டை சுமார் எட்டு முதல் பத்து அங்குலம் வரை நீளமும், ஓர் அங்குல கனமும் கொண்டது.

இக்கருவியை உட்கார்ந்தோ அல்லது நின்ற நிலையிலோ வாசிப்பார்கள். வலக்கையினால், ஆள்காட்டி விரலினால் நரம்பு மீட்டப்படுகிறது.[1]



1. அருங்காட்சியகக் கையேடு.

பின்னிணைப்பு. 1.

தமிழ் நூல்களில் தோற்கருவிகள் ஆட்சி

அரிக் கூடு (சல்லி,கரடி)

1 பத்து. மதுரைக், 612. அரிக்கூடு இன்னியம் கறங்க.

ஆகுளி

1.	பத்து. மதுரைக்.	3	திண்வார் விசித்த முழவோடு ஆகுளி
2.	,, ,,	606	நுண்ணீராகுளி யிரட்ட
3.	,, மலைபடு.	140	விரலூன்று படுகண் ஆகுளி கடுப்பக் குடிஞை யிரட்டும் நெடுமலை.
4.	புறம்.	64:1	நல்யாழ் ஆகுளி பதலையொடு
5.	,,	152:14	ஆகுளி தொடுமின்
6.	,,	371:19	ஆகுளி தொடாலின்
7.	கம்ப..யுத்.	810:12	பேரியங்கள் முருடு ஆகுளி பெட்கும்
8.	,, ,,	990:2	உரைசெய் காளமும் ஆகுளி ஓசையும்.
9	,, ,,	2883:1	சங்கொலி வயிரினோசை ஆகுளி தழங்கு கானம்.
10.	சூளா.	872:2	அரியொ டாகுளி ஆலித்த.

ஆவஞ்சி

1.	சிலம்பு.	1.3:27	ஆவஞ்சி எனினும் குடுக்கை எனினும் இடக்கை எனினும் ஒக்கும்—அடியார்க்கு நல்லார். உரை.

ஆமந்திரிகை


2. சிலம்பு. 1.3:142 கூடிநின்றிசைத்தது ஆமந்திரிகை(ஆமந் திரிகை-இடக்கை)

இடக்கை


1. திருப்புகழ். 5. திமித திமிதிமி...இடக்கைகள்
2. ,, 296 இடக்கை முழக்கொலி
3. ,, 977 தக்குவென மத்தளம் இடக்கை துடி
4. ,, 1002 தரரரரிரிரிரிரி......இடக்கையும் உடுக் கையும்...அதிர
5. திருப்புகழ். 215 தத்தனத னத்தனத னத்தனவெ னத்திமிலை யொத்த முரசத்துடியிடக்கை முழவுப்பறைகள் சத்த மறைய.
6. திருப்புகழ் 967 திமித்தி மிந்திமி திமிதிமி யென்றிட் டிடக்கை துந்துமி முரசுமுழங்க
7. தேவா-திருமுறை பதிகம் 334. பாடல் 5 3. கத்திரிகை துத்திரிகறங்கு துடி தக்கை யொடிடக்கை படகம் எத்தனை புலப்பில் கருவித் திரளலம்ப விமையோர்கள் பரச

உடுக்கை


1. உத. குமா. 1.72:76 உலரிய உடுக்கையன்.
2. தேவா.. திரு. 1.65.10 தண்டுடுக்கை தாளந்தக்கை சார நடம் பயில்வார்.
3. திருப்புகழ். 1002 தரரர ரிரிரிரி...இடக்கையும் உடுக்கை யும்...அதிர.
4. திருப்புகழ். 537 திமிலையுடுக்குடன்முரசுப்பறைதிமிதித் திமிதிமெனட் டிமி டிமி டிட் டிடுர் திமிதித் தொலிதாளம்
5. திருப்புகழ். 583 தீத கத்திமித தோவுடுக்கைமணி முரசோதை




கிராமிய டோலக்



தப்பு



தமுக்கு



தாசரிதப்பட்டை & சேமக்கலம்

6. திருப்புகழ் 412 திகுத்த தீதிகு திகுர்த்த தாவென
உடுக்கை பேரிகை தவிற் குழாமுழமி
ரங்குபோரில்

7. திருப்புகழ் 498 தித்தி மித்தி மீத்த னத்த னத்த மூட்டு
சிற்றுடுக்கை சேட்டை தவில்பேரி

8. திருப்புகழ் 655 தத்த னானத னத்தன தானெனு
டுக்கை பேரிமு ழக்கிட வேகடல்

உறுமை

கம்ப. யுத்த 2381: கம்பிலி உறுமை தக்கை கரடிகை துடி

எல்லரி

பத்து. மலைபடு. 10. கடிகவர்பொலிக்கும் வல்லவர் எல்லரி

ஏறங்கோள்

சீவக. 489:1 ஏறங்கோள் முழங்க.

ஒருவாய்க்கோதை (ஒருகட்பறை)

கல். 8:27 மரக்காலன்ன ஒருவாய்க் கோதை.

கணப்பறை

1. திருப்புகழ் 156 சிறுபறையு முரசுதுடி சத்தக் கணப்
பறையு மொகு மொகென அதிர

2. திருப்புகழ் 927 திக்குத்தி குத்திகுர்தி தக்குத்த
குத்தகுர்தி என்றுபேரி
திமிலை கரடிகை பதலை சலரி தவில்
தமரமுரசுகள் குடமுழவொடு துடி
சத்தக் கணப்பறைகள் மெத்தத்
தொனித்ததிர

கண்டிகை

நீலகேசி. புத்தவாத. 2. ....படுகண்டிகையும்

கரடிகை

1. பார கன்ன.16ம் 24:241 முரசு,கரடிகை,கிணை,துடி,பெருமரம்,
முருடு, படுபறை முதலிய கருவிகள்

2. திருப்புகழ். 349 தபலை குடமுழவு திமிலை படகம
தபுத சலிகை தவில் முரசு கரடிகை
மத்தளித வண்டையறவத் தகுணி
துந்துமிகள்
மொகு மொகு மொகுவென அலற

3. திருப்புகழ். 369 தொகுவெகு முரசு கரடிகை டமரு
முழவு தவில்
தம்பட்ட மத்தள மினப்பட்
டடக் கைபறை
பதலை பல திமிலை முதலத்ரளதிர

4. திருப்புகழ். 927 திக்குத்தி குத்திகுர்தி தக்குத்த
குத்தகுர்தி என்று பேரி
திமிலை கரடிகை பதலை சலரி தவில்
தமரமுரசுகள் குடமுழவொடு துடி
சத்தக் கணப்பறைகள் மெத்தத்
தொனித்ததிர

5. திருப்புகழ். 616 தபலை திமில்கள் பூரிகை பம்பைக்
கரடி தமருகம் வீணைகள் பொங்கத்

கல்லவடம்

1. தேவ-திருமுறை பாடல் 212 4 நிலவெண் சங்கும் பறையு மார்ப்ப
நிற்கில்லாய்
பலருமிட்ட கல்லவடங்கள்
பரந்தெங்கும்

கரடிகை

1. சிலம்பு. 1.3.27 கரடி கத்தினாற் போன்று ஓசையுடைத்
தாதலால் கரடிகை என்று பெயரா
யிற்று. —அடியார்க்கு நல்லார்

2. கல் 85: 31 வள்ளப்பிணைத்த செங்கரடிகை மல்க

கல்லல்

1. கல் 85: 23 தெண்கடிப்பு விசித்த கல்லல் செறிய

கல்லலகு

1. கல் 30:10 மொந்தை கல்லலகு துத்திரியேங்க.

கல்லவடத்திரள்

1. கல் 8: 26 மயிர்க்கயிறு விசித்த, கல்லவடத்திரள் விரல் தலை கறங்க.
2. ,, 30:9 கல்கலடத்திரள் மணிவாய்த் தண்ணுமை.

கிணை

1. பு. வெ. மா. வெட்சி. 16.2:1 அங்கட் கிணையன் துடியன்
2. ,, கரந்தை. 2. 12:3 தடாரிப் பறையைக் கேட்டு (தடாரி-கிணை)
3. ,, வாகை 186.2:2 தெண்கிணைவன் திருந்து புகழ்
4. ,, பாடாண் 18. 2:2 வயல்யாமை அள்ளகட்டன்ன வரிக் கிணை
5. ,, ,, 206. 2:2 அரிக்கிணைவன்வளம்
6. பத்துப்சிறுபாண். 186 வளைக்கைக் கிணைமகள்
7. நற்றி 108:4 கணையர் கிணையர் கைபுனை கவணர்
8. அகநா. 226:15 பாடின்தெண்கிணைப் பாடு கேட்டஞ்சி
9. ,, 249:3 தெண்கிணை இன்குரல் அகவுநர்
10. ,, 301:10 பாடின் தெண்கிணைகறங்க
11. ,, 375:9 வள்ளுயிர் மாக்கிணை
12. ,, 356:4 யாமை...தெண்கட்கிணையின் பிறழும் ஊரன்
13. பதிற்று. 90 வெம்போர் மள்ளர் தெண்கிணை கறங்க
14 பரி 8:81 எழுதும்கிணை முருகன் தாள் தொழு தண்பரங்குன்று
15. புறநா. 70:3 நுண்கோற்றகைத்த தெண்கண்மாக் கிணை

16.	புறநா	76:8	பாடின் தெண்கிணை கறங்க
17.	,,	78:12	தெண்கிணை கறங்கச் சென்றான்
18.	,,	79:3	தெண்கிணை முன்னர்...இயல
19.	,,	111:4	கிணை மகட்கெளிதால் பாடினள் வரினே
20.	,,	373:31	அங்கண் மாக்கிணை
21.	,,	374:6	தெண்கண் மாக்கிணை
22.	,,	375:5	கிணையொடு சுருக்கி
23.	,,	375:12	யாவரும் இன்மையிற் கிணைப்ப
24.	,,	376:23	தோன்றல் செல்லாதென் சிறு கிணைக் குரலே
25.	,,	377:4	இனையல கற்றவென்கிணை தொடாக் குறுகி
26.	புறம்	377:14	சேய்நாட்டுச் சொல்கிணை ஒனை
27.	,,	378:8	அரிக்கூடு மாக்கினை
28.	,,	379:7	வில்லியாதன் கிணையேம் பெரும
29.	,,	379:11	கொன்வரல் வாழ்க்கைநின் கிணைவன் கூற
30.	,,	381:20	இதற்கொண்டறிஞை வாழியோ கிணைவ
31.	,,	382:19	கிடைக்காழன்னதெண்கண்மாக்கிணை
32.	,,	383:3	நுண்கோல் சிறுகிணை சிலம்பஒற்றி
33.	,,	384:10	கரும்பனூரன் கிணையேம் பெரும
34.	,,	387:4	வீங்குவிசிப்புதுப்போர்வைத்தெண்கண் மாக்கிணை
35.	புறநா	388;3	இரும்பறைக் கிணை மகன்
36.	,,	388:11	வினைப் பகடேறம் எழீஇக்கிணை தொடர
37.	,,	392:5	பொருகளிற்றடி வழியன்ன வென்கை ஒருகண் மாக்கிணை
38.	,,	393:20	மதிபுரைமாக்கிணை தெளிர்ப்ப
39.	,,	394:7	ஒண்கருமாக்கிணை தெளிர்ப்ப

40.	புறநா	395.21	அறப்பெயர்ச் சாத்தன்கிணையேம்
41.	,,	396.14	எழினியாதன் கிணையேம்
42.	,,	397.10	தெண்கண்மாக்கிணை தெளிர்ப்பஒற்றி
43.	,,	399.14	கிணைமகள் அட்டபாவற்புளிங்கறி
44.	,,	399.25	வள்பரிந்துகிடந்த என் தெண்கண் மாக்கிணை
45.	,,	400 8	கேட்டோன் எந்தையென் தெண் கிணைக் குரலே
46.	கல்	51.13	ஆயமோடார்ப்ப வரிக்கிணை முழக்கி
47.	,,	59.13	நெடுநகரிரட்டும்களியரிக் கிணையே
48.	சிலம்பு	1.10:138	தெண்கிணைப் பொருநர்
49.	சீவக.நாமகள்	61.1	கிணைநினல்பொருநர் தம் செல்வம் கீழ்ப்பட
50.	வில்லிபார.சபா.	3.4	கிணைவருமோதை மூதூர்
51.	,, உத்தி	15.2	கிணையுரற்றின

கிளை

1.	,, கன்ன-16-ம்	24.24:1	முரசு கரடிகை கிணை துடி பெருமரம் முருடு படுபறை முதலிய கருவிகள்

கொட்டு

1	திருப்புகழ்.	332.	தரிகிட தந்தத்......கொட்டுடனாடி

கொடுகொட்டி

தேவா. திருமுறை பதிகம்	2 220.7	கொடுகொட்டி வீணைமுரல

கோட்பறை

பெருங்.	4.5:62	கொள்ளென் குரலொடு கோட்பறை கொளீஇ
தேவா. திருமுறை பதிகம்	3 361.2	கொடுகொட்டி கொண்டொருகை

தேவா. திருமுறை 3 பதிகம்	5.62	கொக்கரை குழல்வீணை கொடு கொட்டி
,, ,,	5.515	குரவனார் கொடு கொட்டியும்
,, ,,	5.903	கொண்டபாணி கொடு கொட்டி தாளங்கள்
,, ,, திருவினாத் திருத் தாண்டகம்	6 8.	கொடு கொட்டி கையலகு கையிற் கண்டேன்
,, ,, திருவெண்காடுதிருத் தாண்டகம்	6. 5	பூதம் கொடு கொட்டிக் கொட்டிக் குனித்துப்பாட
,, ,, திருவாரூர் திருத்தாண் டகம்	6 6	கொடு கொட்டிக் கொண்டதோர் கையான் தன்னை

கைத்திரி (துடி), (இடக்கை)

1. கல்லாடம்.	8. 10	கயந்தலை அடியெனக். கயிறமை கைத்திரி
2.	8. 12	குழையுடற்றலைவிரி கைத்திரி கறங்க

சல்லிகை

1. திருப்புகழ்.	349	தபலை குடமுழவு திமிலை படகம தபுத சலிகை தவில் முரசு கரடிகை மத்தளிதவண்டை யறவைத் தகுணி துந்துமிகள் மொகு மொகு மொகுவென அலற

சிறுபறை

(ஆண்பாற் பிள்ளைத் தமிழ் நூல் அனைத்திலும் ஒரு பருவமாக அமையும்)

1. நவநீதி. பாட்	31	சொன்ன சிறுபறையே முதல் மூன்றும்
2. ,,	32	சிறுபறையே முதல் மூன்றும்
3. பன்லிருபாட்	102	அம்புலி சிற்றில் சிறுபறை சிறுதேர்

4.	பத்து.மலைபடு	321	மான்றோற் சிறுபறை கறங்க
5	சிலம்பு	2.12:1	துடியொடு சிறுபறை வயிரொடுதுவை செய
6.	,,	3.24:16	தொண்டகந் தொடுமின் சிறுபறை தொடுமின்
7.	சிவக.	458:1	வள்வரிச் சிறுபறை கறங்க
8.	,,	2:88:3	அரிப்பறை மேகலையாகி ஆர்த்தவே
9.	,,	26.8:4	செருக்குரற் சிறுபறை சிலம்புகிண்கிணி
10.	சூளா.	34:1	கலவர்தம் சிறுபறை யிசையின்
11.	,,	872:2	அரியொடு ஆகுளி ஆலித்த (அரி-சிறு பறை)
12.	,,	936:1	துடியொடுசிறுபறை...கிளர்தர
13	பெருங்	1.37:90	யாழும் குழலும் அரிச்சிறுபறையும்
14.	,,	1 38:174	யாழும் குழலும் அரிச்சிறு பறையும் தாழ
15.	திருப்புகழ்.	156	சிறுபறையு முரசுதுடி சத்தக் கணப்பறையு மொகுமொகென அதிர
16.	திருப்புகழ்	868	இடுகுபறை சிறுபறைகள்திமிலையொடு தவிலறைய

தகுணிச்சம்

1.	சீவக. குணமாலை யாரிலம்பகம்	965-115	தண்ணுமை முழவ மொந்தை தகுணிச்சம் பிறவுமோசை

தக்கை

1.	தேவா. திருமுறை பதிகம் 75 பாடல்	1 5	மேனி நீறதுபூசித்தக்கை கொள் பொக் கணமிட்டு
2	தேவா-திருமுறை பதிகம் 334-பாடல்	3 5	கத்திரிகை துத்திரி கறங்கு துடிதக்கை யொடிடக்கை படகம் எத்தனை யுலப்பில்கருவித் திரளலம்ப விமையோர்கள் பரச

3. கம்ப.. யுத்த 5 கம்பலி உறுமை தக்கை. கரடிகை துடி

தண்டோல்

நற்குடிவேளாளர்வரலாறு மூவேந்தர் புதிய ஆட்சிப் படலம் 23:2 தண்டோல்ஆங்குக்கிட்டியது ஓர்ந்தார்

தருணிதம்

கல் 85:20 இதழவிர் தாமரையெனும் தருணிதம் துவைப்ப

தட்டை

குறுந். 193 பகுவாய்த் தேரை தட்டைப் பறையிற் கறங்கு நாடன்

,, 223 தழலும் தட்டையும் முறியும் தந்திவை

புறநா. 49:4 புனவர் தட்டை புடைப்ப

நற்றி. 206:5 தட்டையும் புடைக்க கவணும் தொடுக்கென

தடாரி

1. பு.வெ மா. வாகை 33:2 ஆமை, அகடுபோல் அங்கட்டடாரி
2. ,, பாடாண். 30:1 தெருவிலலமரும் தெண்கட்டடாரி
3. பத்து. பொருந. 70 கைக்கச டிருந்தவென் கண்ணகன் தடாரி
4. புறம் 249:4 அரிக்குரல் தடாரியின் யாமை மிளிர
5. ,, 368:15 கடாஅயானைக் கால்வழி யன்ன என் தடாரித் தெண்கண் தெளிர்ப்ப
6. ,, 369:21 அரிக்குரற் றடாரி யுருப்ப
7. ,, 371:18 மதியத் தன்னவென் விசியுறுதடாரி
8. ,, 372:1 விசிபிணித் தடாரி
9. ,, 376:4 செறிபிணிச் சிதாஅர் வள்பின்என தெடாரிதழீஇப்
10. ,, 381:12 சிதாஅர் வள்விற் சிதர்ப்புறத் தடாரி
11. ,, 385:4 அகன்கண் தடாரிப் பாடுகேட்டருளி

12. புறம். 390:8 அரிக்குரல் தடாரி
13. ,, 395;25 அரிக்குரல் தடாரி
14. ,, 398:12 மதியத்தன்னஎன் அரிக்குரல் தடாரி
15 பெருங். 1.48;165 தண்ணுமை ஒலியும் தடாரிக் கம்பலும்

தண்ணுமை

1. பு.வெ.மா.ஒழிபு 10.2 விட்டோட வேண்டுமோ தண்ணுமை
2. பத்.பெரும்பாண் 144 மடிவாய்த்தண்ணுமை நடுவட்சிலைப்ப
3. ,, மலைபடு 471 வெண்ணெல் அரிநர்தண்ணுமை
4. அகம் 40.14 தண்ணுமை வெரீஇயதடந்தாள்நாரை
5. ,, 63.18 வேட்டக்கள்வர் ... சேக்கோள் அறையும் தண்ணுமை கேட்குநர்கொல்
6. ,, 87.8 குறும்பின் எழுந்த தண்ணுமை
7. ,, 106.13 பாணன் எறியும், தண்ணுமை கண்ணின் அலைஇயர் தன் வயிறே
8. ,, 174.4 பூக்கோள் ஏய தண்ணுமை
9. ,, 204.10 வெண்ணெல் அரிநர் மடிவாய்த் தண்ணுமை...படுபுள் ஓப்பும்
10. ,, 297. 6 சிறுகுடிமறவர் சேக்கோள் தண்ணுமைக்கு, எருவைச்சேவல் இருஞ்சிறை பெயர்க்கும்
11. ஐங்குறு. குறிஞ்சி 215.3 தட்டை தண்ணுமை
12. கலித் (முல்லை34) 102 தண்ணுமைப் பாணிதளராது எழூஉ
13. குறுந்தொகை 390.5 மிளைவந்து பெயரும் தண்ணுமைக் குரலே
14. தொல்.சொல்.எச். சூ 13 சேனாவரையம் (மேற்கோள்) ஆரியமன்னர் பறையி னெழுந்தியம்பும் பாரி பறம்பின் மேற்றண்ணுமை—
15. நற்றிணை 130.2 மடிவாய்த்தண்ணுமை நடுவண்ஆர்ப்ப
16. ,, 298.3 மடிவாய்த்தண்ணுமைத் தழங்கு குரல்

17.	நற்.	310.10	வள்ளுயிர்த் தண்ணுமைபோல
18.	,,	347.6	பேழ்வாய்த் தண்ணுமை இடந்தொட் டன்ன
19.	,,	350.1	வெண்ணெலரிநர் தண்ணுமை வெரீஇ
20.	பதிற்று	51	தூக்கணை கிழித்த மாக்கட்டண் ணுமை
21.	,,	84 15	போர்ப்புறு தண்ணுமை
22.	புறம்	39.7	பொதுவில்தூங்கும்விசியுறு தண்ணுமை
23.	,,	270.8	மறப்படைநுவலும் அரிக்குரல் தண் ணுமை
24.	,,	293.2	குறும்பர்க்கெறியும் ஏவல் தண்ணுமை
25.	,,	348.1	வெண்ணெலரிநர் தண்ணுமை வெரீஇ
26.	கல்லாடம்	8.21	இருதலை குவிந்த நெட்டுடற்றண் ணுமை
27.	,,	30.9	கல்லவடத்திரள் மணி வாய்த்தண் ணுமை
28.	சிலம்பு	1.3:27	தாழ்குரல் தண்ணுமையாடலொடு
29.	,,	1 3;55	அத்தகு தண்ணுமை யருந்தொழில் முதல்வனும்
30.	,,	1 3:62	தண்ணுமை முதல்வன் தன்னொடும்
31.	,,	1 3:140	யாழ்வழித் தண்ணுமை நின்றதுதகவே
32.	மணிமே. ஊரலர்	21	தண்ணுமைக் கருவியும்
33.	,, சிறைகோட்	82	தண்ணுமைக் கருவி கண்ணெறி தெரிவோர்
34.	சீவக.	965:1	தண்ணுமை முழவமொந்தை
35.	,,	1255.1	தண்ணுமை முழவம் வீணை
36.	,,	2393:3	யாழ்குழல் தண்ணுமை
37	பெருங்கதை	1.37 91	தண்ணுமைக் கருவியும்
38.	,,	1.44:47	பாடற்றண்ணுமைப் பாணியிற் பிழையா
39.	,,	1.48:165	தண்ணுமை ஒலியும்

40. பெருங் 1.38:175	முழவமும் தண்ணுமைக் கருவியும்
41. ,, 1.46.317	வெண்ணரை சூழ்ந்த தண்ணுமைப் பறைதலை
42. கம்ப.இரா 89:2	தண்ணுமை வீச்சிற்றாக்குறும் விளியும்
43. ,, 145:1	பதங்களில் தண்ணுமை பாணி பண்ணுற
44. ,, 563:2	தைவரு மகரவீணை தண்ணுமை தழுவித்தூங்க
45. ,, அயோத் 501.1	தண்ணுமை வாரொலி நீத்தன.
46. ,, ,, 811.2	ஊனடைந்து உடற்குயிரா மெனத் தானளைந்து தழுவின தண்ணுமை
47. ,, ,, ஆரணி 575	வார்விசைக் கருவியோர் (வார்விசைக் கருவி தண்ணுமை)
48. ,, கிட்கிந் 908	பொருநர் தண்ணுமைக்கு அன்னமும் போகல
49. ,, சுந்தர 281	பண்ணக மகளிர் வள்வார்த் தண்ணுமைப் பாணி
50. ,, யுத்த 4277:2	சங்கினம்குமுறப் பாண்டில்தண்ணுமை யொலிப்ப
51 ,, ,, 4290 2	சங்கினம்குமுறப் பாண்டில்தண்ணுமை துவைப்ப
52. நாலாயிர. பெரியாழ் 3.ஆம் பத்து.நான்காம் திருமொழி 1	தண்ணுமை எக்கம் மத்தணி

டமரு (தமருகம்)

1. திருப்புகழ் 369	தொகுவெகு முரசு கரடிகை டமரு முழவு தவில் தம்பட்ட மத்தள மினப்பட் டடக்கை பறை பதலை பல திமிலை முதலத்ரளதிர
2. ,, 23	திமிதமென முழவொலிமு ழங்கச் செங்கைத் தமருகம ததிர்சதியொடன்பர்க்கின்பத்

3. திருப்புகழ் 616 தபலை திமிலைகள் பூரிகை பம்பைக்
கரடி தமருகம் வீணைகள் பொங்கத்

தவண்டை

1. திருப்புகழ் 349 தபலை குடமுழவு திமிலை படகம
தபுதசலிகை தவில் முரசு கரடிகை
மத்தளிதவண்டையற வைத்தகுணி
துந்துமிகள்
மொகு மொகு மொகுவென அலற

தம்பட்டம்

1. திருப்புகழ் 23 அது வருகு மளவிலுயிரங் கிட்டிங்குப்
பறைதிமிலைதிமிர்தமிகுதம்பட்டம்பற்
கறைய வுறவினரலற வுந்திச்சந்த்
தெருவூடே

2. திருப்புகழ் 106 தகக தகதகக தந்தத்த தந்தகக
என்றுதாளம்
பதலை திமிலை துடி தம்பட்டமும்
பெருக

3. திருப்புகழ் 369 தொகுவெகு முரசு கரடிகை டமரு
முழவு தவில்
தம்பட்ட மத்தள மினப்பட்டக்
கைபறை
பதலை பலதிமிலை முதலத்ரளதிர

தவில்

1. திருப்புகழ் 276 வீராணம் வெற்றிமுர சோடேதவிற்றி
மிலை
வேதாகமத் தொலிகள்

2. ,, 349 தபலை குடமுழவு திமிலை படகம
தபுத சலிகைதவில் முரசு கரடிகை
மத்தளிதவண்டையறவைத்தகுணி
துந்துமிகள்
மொகு மொகு மொகுவென அலற

3. திருப்புகழ் 369 தொகு வெகு முரசு கரடிகை டமரு
முழவு தவில்
தம்பட்ட மத்தள மினப்பட் டடக்கை
பறை
பதலை பலதிமிலை முதலத்ரளதிர

4. ,, 559 தவில்முரசு பறைதிமி லை டிங்குடிங்
குந்தடர்த் தண்டர்பேரி

5. ,, 602 முரசு பேரித்திமிலை துடிகள் பூரித்
தவில்கள்
முருகு காளப்பறைகள் தாரை
கொம்புவளை

6 ,, 927 திக்குத்தி குத்திகுர்தி தக்குத்த
குத்தகுர்தி என்றுபேரி
திமிலை கரடிகை பதலை சலரி தவில்
தமரமுரசுகள் குடமுழவொடு துடி
சத்தக்கணப்பறைகள் மெத்தத்
தொனித்ததிர

7. ,, 240 தகுத குந்தகி தாகுதோ வெனமுழவு
வளைபேரி
தவில்கணம் பறைகாளமோ டிமிலை
தொனி
யினமுழங் கெழு வேலைபோ லதிர

8. ,, 652 தானத னந்தன ஞெவெ னும்பறை
செந்தவில் சங்குடனே முழங்க

9. ,, 368 இடுகுபறை சிறுபறைகள்திமிலையொடு
தவிலறைய

10. ,, 412 திகுத்த தீதிடு திகுர்த்த தாவென
உடுக்கை பேரிகை தவிற்குழாமுமி
ரங்குபோரில்

11. ,, 498 தித்தி மித்தி மீத்த னத்த னத்த மூட்டு
சிற்றுடுக்கை சேட்டை தவில்பேரி

12. ,, 337 திமிலை தவிற்றுந்துமிகள் முழக்குந்
சிரகிரி யிற்றங்கும் பெருமாளே

திமிலை

1.	திருப்புகழ்	215 தத்தனத னத்தனத னத்தனவெ னத்திமிலை யொத்த முரசத் துடியிடக்கை முழவுப் பறைகள் சத்தமறைய
2.	,,	276 வீராணம் வெற்றி முரசோடே தவிற்றிமிலை வேதாகமத் தொலிகள்
3.	,,	349 தபலைகு டமுழவு திமிலை படகம திபுதச லிகை தவில் முரசு கரடிகை மத்தளித வண்டை யறவைத் தகுணி துந்துமிகள் மொகு மொகு மொகுவென அலற
4.	,,	369 தொகு வெகு முரசு கரடிகைடமரு முழவு தவில் தம்பட்ட மத்தள மினம் பட்டடக்கை பறை பதலைபல திமிலை முதலத்ரளதிர
5.	,,	537 திமிலை யுடுக் குடன்முரசுப் பறை திமிதித் திமிதிமெனட் டிமிடி மிடிட் டிடுர்திமிதித் தொலி தானம்
6.	,,	559 தவில் முரசு பறைதிமிலை டிங்குடிங் குந்தடர்த் தண்டர் பேரி
7.	,,	602 முரசு பேரித்திமிலை துடிகள் பூரித் தவில்கள் முருடு காளப் பறைகள் தாரை கொம்பு வளை
8.	,,	927 திக்குத்தி குத்திகுர்தி தக்குத்த குத்தகுர்தி என்று பேரி திமிலை கரடிகை பதலை சலரிதவில் தமரமுரசுகள் குடமுழவொடு துடி சத்தக் கணப்பறைகள் மெத்தத் தொனித்ததிர

9. திருப்புகழ் 1059 உறவின் முறை கதறியழ ஊராரு
மாசையற
பறைதிமிலை முழவினிசை யாகாச
மீதுமுற

10. ,, 1163 டிமிலை பறை முழவு துடிபம்பையுஞ்
சங்கமுந்தவதமோதச்

11. ,, 23 அது வருகு மளவிலுயிரங் கிட்டிங்குப்
பறை திமிலைதிமிர்தமிகு தம்பட்டம்பற்
கறையவுற வினரலற வுந்திச் சந்தித்
தேருலூடே

12. ,, 77 திகுர்தி தகிர்ததிந் திந்தித் திந்தித்
திரிரி தரராவென் றென்றொப்பின்றித்
திமிலை பறையறைந் தெண்டிக்
கண்டச் சுவர் சோர

13. ,, 534 கலைகனக வட்ட திமிலைபறை
கொட்ட
கனகமயில் விட்ட கதிர்வேலா

14. ,, 774 திரள்படை யலகைகள் பொங்கு
கோடுகள்
திமிலையொ டறைபறை நின்று
மோதிட

15. ,, 868 இடுகுபறை சிறுபறைகள் திமிலையொடு
தவிலறைய்

16. ,, 106 தக்க தக தகக தந்தத்த தந்தகக
என்று தாளம்
பதலை திமிலை துடி தம்பட்டமும்
பெருக

17. ,, 153 தகுடத்தத் தகுடத் தட்டுட்டிடிபோல
திமிலை கைத்துடி

,, 337 திமிலை தவில் துந்துபிகள் முழக்கும்

,, 536 டமடமவெனக் குமுற திமிலை

,, 616 தபலை திமிலைகள் தூரிகை...பொங்க

,, 995 திமிலை கல முருகு திந்தந் திமித் திமித

துடி

1. பார. கன்ன. பதினாரும்	24-24:1	முரசு கரடிகை கிணை பெருமரம் முருடுபடு பறை முதலிய கருவிகள்
2. திருப்புகழ்	156	சிறுபறையு முரசுதுடி சத்தக் கணப்பறையு மொகு மொகென அதிர
3. ,,	215	தத்தனத னத்தனத னத்தனவெ னத்திமிலை யொத்த முரசத் துடி யிடக்கை முழவுப் பறைகள் சத்த மறைய
4. ,,	370	துடியிடை நுடங்க
5. ,,	602	முரசு பேரித்திமிலை துடிகள் பூரித்தவில்கள் முருடு கானப்பறைகள் தாரை கொம்புவளை
6. ,,	927	திக்குத்தி குத்திகுர்தி தக்குத்த குத்தகுர்தி என்று பேரி திமிலை கரடிகை பதலை சலரி தவில் தமர முரசுகள் குடமுழவொடு துடி சத்தக் கணப்பறைகள் மெத்தத் தொணுத்ததிர
7. ,,	551	துடி முழவு மறவரிட சேவற் காட்டினில் துணைமல ரினணிகிதினை காவற் காத்தனை
8. ,,	1163	டிமிலை பறைமுழவுதுடி பம்பையுஞ் சங்கமுந்தவமோத
9. தேவா-திருமுறை பதிகம் 28 பாடல்	1 6	துடிகளோடு முழவம் விம்மவே பொடிகள் பூசிப் புறங்காடரங்காகப்
10. தேவா-திருமுறை தனித்திருத் தாண்டகம் பாடல்	6 3	துடிகொண்டார் கங்காளந் தோள் கொண்டார்

துத்திரி

கல்	30:10	மொந்தை கல்லலகு துத்திரியோங்க.

துடி

1. தொல்.பொ அகத். 42 இடிதுடிக் கம்பலையும் (நச் உரை. மேற்)
2. ,, ,, புறத் 58 போர்க்கும் துடியொடுபுக்கு (நச்.உரை மேற்)
3. ,, ,, ,, 59 தத்தந் துடியரோடு ஊர்ப்புறம் சூழ்ந்தார் மறவர் (நச். உரை.மேற்)
4. நவநீத. செய்யுள். 34 துடியை வென்ற மின்னிடை
5. பு.வெ.மா.வெட்சி. 3.2.2 துடிபடுத்து, வெட்சிமலைய
6 ,, ,, 12.2:2 மையணற்காளை மகிழ்துடி... உய்த்தன்று உவகையொருங்கு
7. ,, ,, 13.1:1 வார்வலந்த துடி விம்ம
8. ,, ,, 16.2.1 அங்கட்கிணையன் துடியன்
9. ,, ,, 19.2:1 முந்தை முதல்வர் துடியர் இவன் முதல்வர்
10. ,, ,, 19.1:2 தொடுகழல் மறவர்தொல்குடிப் பிறந்த படுகண்இமிழ்துடிப்பண்புரைத்தன்று
11. ,, கரந்தை. 8.2:3 துடியிரட்டிவிம்ம...ஆடும் ஆட்டு
12. ,, ,, 9.2:4 வேல்திரிய விம்மும்துடி
13. ,, ,, 29.1:1 கண்மகிழ்ந்து துடிவிம்ம...ஆடின்று
14. ,, காஞ்சி. 2.2:4 துடிக்கண் புலையன் தொடும்
15. ,, ,, 25.2:2 கொடிமலி கொல்களிறேவித்-துடிமகிழ ஆர்த்திட்டு
16. ,, பொது. 12 2:3 தோலாத்துடிகறங்கப்,புக்கான்விடலை யும்போர்க்கு
17. ,, ,, 248.1.1 மண்மருளத் துடிகறங்க
18. ,, ஒழிபியல். 17.2:4 தொடுகழல் மன்னன் துடி
19. யா.விருத்தி. ? துடியாடல் மங்கை எழுவரதாடற் கடியாம் உறுப்புக்கள் ஐந்து
20. பத்து பட்டின. 265 தொடுதோலடியர் துடிபடக்குழீஇ

21. ,, பெரும்பாண். 124 கருந்துடி தூங்கும் கணைக்காற்பந்தர்
22. ,, பொருந. 125 துடியடியன்ன தூங்குநடைக்குழவி
23. ,, ,, 210 துடிக்குடிஞை
24. பத்து.மதுரைக். 320 கொழுமீன்குறைஇய துடிக்கட்டுணியல்
25. ,, மலைபடு. 458 செங்கண்வரால் துடிக்கண்அன்னகுறை யொடு விரைஇ
26. அகநா. 9:4 உருள்துடி மகுளியில் பொருள்தெரிந் திசைக்கும்
27. ,, 35:3 நடுகல்பீலிசூட்டித் துடிபடுத்து
28. ,, 62:7 மறையாமை புணர்ச்சிப், பூசல்துடியில் புணர்பிரிந்திசைப்ப
29. ,, 79:3 ஆடுதொறுகனையும் அவ்வாய்க் கருந் துடிக்கொடுவில் எயினர்
30. ,, 89:14 துடியிடுத்தருங்கலம்தெறுத்த பெரும் புகல் வலத்தர்
31. ,, 159:9 கனைகுரற் கருந்துடிப்பாணி தூங்கி
32. ,, 196:3 துடிக்கட்கொழுங்குறை நொடுத்துண்டு
33. ,, 261:15 வல்வாய்க் கருந்துடிப் பாணியும்கேட்டு
34. ,, 372:12 ஆடுகொள் பூசலிற்பாடு சிறந்தெறியும் பெருந்துடிவள்பின் வீங்குபு நெகிழா மேய்பணியிழந்த பாம்பின்
35. கலி.பாலை. 11.8 துடியடிக் கயந்தலை
36. நற்றி. 77:2 புலையன், பெருந்துடி கறங்கப் பிற புலம்புக்கவர்
37. பதிற்று. கடவுள். 7 நுண்ணூற் சிரந்தையிரட்டும் விரலன் (சிரந்தை-துடி)
38. பரி. 7:28 தொடுபுனல் பரந்தெனத் துடிபட ஒருசார்
39. ,, 21:69 துடியின் அடிபெயர்த்து
40. புறநா. 170:6 இழிபிறப்பாளன் கருங்கை சிவப்பி வலி துரந்து சிலைக்கும் வன்கண்கருந்துடி
41. ,, 260:14 விடுகணை நீத்தம் துடிபுணையாக
42. ,, 269:6 உவலைக் கண்ணித்துடியன்

43 புறநா. 285:2 துடியன் கையதுவேலே
44. ,, 287:1 துடியெறியும் புலைய
45. ,, 291:1 சிறாஅஅர் துடியர்
46. ,, 369:26 துடியடிக்குழவிய பிடி
47. ,, 370:6 அத்தக் குடிஞைத் துடிமருள் தீங்குரல்
48. ,, 385:7 துடியன் பாணன்
49. தி.மா.நூற். 125:2 தூக்கோல்துடியொடு
50. தி.மொ.ஐம். பாலை. 17 1 கல்லதர்வாயிற் கருந்துடிகள் பம்பும்
51. நாலடி. 380:2 துடியின் இடக்கண் அனையம் யாம் ஊரற்கு
52. பழ. 28:2 சொற்குறிகொண்டு துடிபண்உறுத்துவ போல்
53. ,, 389:2 வையெற்றுப் பட்டார் துடியிடையார்
54. கல். 1:19 தவமெனத் தேய்ந்தது துடியெனும் நுசுப்பே
55. ,, 59:12 எயினர் மரத்துடி நெடுநகரிரட்டும்
56. ,, 69:20 காகளப் பூசல்துடியொலி ஏற்றின்
57. ,, 83:20 துடியிற் கண்ணிற்றுஞ்சாக் கண்ணினர்
58. ,, 85:30 துடியெறிந்திசைப்ப
59. ,, 92:10 துடியிடையகத்தனை
60. ,, 99:32 பார்ப்பதிப் பாணியைத் துடிமணி யெடுப்ப
61. சிலம்பு. 1.6 26 துவரிதழ்ச் செவ்வாய்த் துடியிடையோரும்
62. ,, 1.6 51 சூர்த்திறங்கடந்தோன் ஆடியதுடியும் (துடி—துடிகொட்டியாடும் கூத்து)
63. 2.12 அவிப்பலி 1 துடியொடு சிறுபறை...துவைசெய
64. ,, 2.12 பலிக்கொடை 1 துண்ணெனன் துடியொடுதுஞ்சூரெறிதரு
65. ,, 2.12 வேட்டுவவரி 15.3 கொல்லன் துடியன் கொளைபுணர்சீர்

66. மணிமே. 69 ஊர்காப்பாளர் எறிதுடியோதையும்
துயிலெழுப்.
67. ,, கச்சிமா துப்படு செவ்வாய்த் துடியிடை
நகர்புக்க. 105 யாரோடும்
68. சீவக. 418 2 தொண்டகப் பறை துடியோடார்த்
தெழ
69. ,, 1202 1 கருந்துடிக் குரலொடு கடையுங்கட்
குரல்
70. ,, 1847:2 துடியொடு சிறுபறை துவைத்த
71. ,, 2123.3 துடியொடு நுண்ணிடை
72. ,, 2294 1 துடியிடை மகளிரார்ப்ப
73. ,, 2767:1 துடிக்குரல் குரலபேழ்வாய்த்...செந்
நாய்
74. ,, 3141:2 உருவத்துடியிடையார்
75. நீல. 19 22 துடிகடியுமிடை
(மொக்கல 285-19)
76. ,, 62 3 ஒப்படுதுடியிடைஓசிக்கும்
(தருமவுரை 72-76)
77. ,, 119 2 தோளும் துடியிடையும்
(தருமவுரை 128.1 9)
78. உதயகுமா.
உஞ்சை. 77.3 துடி, இடியென முழங்க
79. ,, ,, இலாவா 14.134 துடியிடை விரிசிகை
80. ,, ,, வத்தவ.53.238 துடியிடைத்தத்தை
81. குளா. 936.1 துளைபடுகுழலிசை குடியொடு...
கல்யாண. 110 கிளர்தர
82. நாக.காவி. 113 3 சுரிகுழல்கருங்கண்...துடியிடைக் குண
நான்காம்சருக்கம் 12 வதியை
83. யசோ. 119.4 துடியிடை துவளவீழ்த்து
84. பெருங். 3.5.18 துடிதோம் கூறிய இடுகிய நடுவிற்கு
85. கம்ப.பால. 37 130.1 துடியிடை...அன்னவர்
86. ,, பால. 12. 901:3 துடிபுக்காயிடைத் திருமகள்.

87. ,, அயோத். 648.1 துடியனாயினன்
88. ,, ,, 665.2 துடியுடைச் சேனைவெள்ளம்
89 ,, ,, 708:4 துடிபுரையிடை
90. ,, ,, 901:2 வார்விசிபம்பையும் துடியும்...சென்ற
91. ,, ,, 1010 1 துடியெறி நெறிகளும்
92. ,, ஆரணிய. 1052.1 துடியினேரிடை
93. ,, சுந்தர. 527.3 துடியிடை
94. ,, யுத்த. 1423 3 துடிகளின் நடுவண் வட்டவாய்களில் வயங்கிய வருணசாமரைகள்
95. ,, ,, 2387.5 தக்கை கரடிகை துடி
96. பார ஆரணிய. 53.2 துங்கமாமுழவும் துடியீட்டமும்
97. ,, உத்தி. 15 3 துடியரற்றின
98. திருப்புகழ் 5 துடிகளிடமிகவொத்து முழக்கிட
99. ,, 106 ததத் ததத்தத...பதலை திமிலை துடி பெருக
100. ,, 150 வஞ்சிக்கொடியிடை துடியோ பியோடி
101. ,, 153 இடிபோலத் திமிலைக் கைத்துடி தட்டெக்கை
102. ,, 189 இடைதுடியதுவென
103. ,, 261 ஓசையற்ற துடிக்கொள் இடைக்கிணை
104. ,, 278 தடுட்டுடு டுடுட்டுண் டெனத்துடிமுழக் கிர்
105. ,, 739 துடியிடையாலும்
106. ,, 860 டுடுங்குடு டிடுடிங்குடு படர்துடி
107. ,, 923 எய்த்த இடையது கொடியோ துடியோ
108. ,, 1129 துடிபட அலகைகள்இமை கொட்டிட
109. ,, 1215 துடியிடையொவகுறக்குல மயில்
110. ,, 1577 துடிநேரொத்திலங்கு...யிடை
111. ,, 1287 துடியைநேரிடை
112. தேவா.திருமுறை..1
பதி.34. பாடல் 3 துடியாரிடையாளொடு

113.	,, ,,	2.230,1	தோகை மாமயிலனைய துடியிடை மாக முடையார்
114.	,, ,,	3.261:7	துடியிடையகலல்குல்தூ மொழியார்
115.	,, ,,	3.334.5	கத்திரிகை...கறங்குதுடி
116.	,, ,,	4.248	செவ்வாய்த் துடியிடைப் பரவையல்குல்
117.	,, ,,	4.269	தொடக்கினார் தொண்டைச் செவ் வாயத்துடியிடை
118.	,, ,,	4 486	துடியிடைவேடராகித் தூயமந்திரங்கள் சொல்லி
119.	,, ,,	4.786	துடிகொண்டகையும் துதைந்த வெண் ணீறும்
120.	,, ,, திருவிழி, திருத் தாண்டகம்	6 1	கொடி துடிகைக்கொண்டார்போலும்
121.	,, ,, திருக்கன்றாப்பூர்த் திருத்தாண்டகம்	6 2	துடியனைய இடைமடவாள் பங்கா
122.	,, ,, திருக்குடந்தைக்கீழ்க் கோட்டம் திருத் தாண்டகம்	6 6	துடிகொண்ட இடைமடவாள்
123.	,, ,, திருப்புறம்பயம் திருத் தாண்டகம்	6 6	துஞ்சிடையே வந்து துடியும் கொட்டி
124.	,, ,, திருக்கருகாவூர் தாண்டகம்	6 8	துடியார்துடியின் முழக்கந்தானாம்
125.	,, ,, கைலாய போற்றித் திருத்தாண்டகம்	6 8	துடியாரிடையுமை
126.	,, ,, திருப்பூவணம்	7 5	துடியிடைநன்மடவாளொடு
127.	நாலாயிர.பெரிய. 3ஆம்பத்து	6	துடியிடையார் முகக்கமலச்சோதி

128. திருமங்கை.பெரிய. முதற்பத்து 3 துடிகொள் நுண்ணிடை
129. ,, ,, ,, ,, 2 பலைத்த செல்சாத்தெறிந்த பூசல்வன் துடிவாய்கடுப்ப
130. ,, தொண்டரடிப் திருப்பள்ளி 10-2 துடியிடையார் சுரிகுழல்
131. ,, திருவாய்மொழி-மூன்றாந்திரு.ஐந்தாம் பத்து 5 துடிகொளிடை மடத்தோழி
132. ,, ஐந்தாம்திரு. எட்டாம் பத்து 3 துடிசேரிடையும்

துந்துபி

1. சீவக. 2397:1 தேவதுந்துபி தேவர்கட்கு ஓகையுய்த் துரைப்பான்
2. கம்ப-பால. 466.2 அந்தர துந்துபி முகிலினார்த்தன
3. நீல. குண்ட (15:-7)7:1 அரிய வாயின செய்திட்டு அமரர் துந்துபி யறைந்து
4. யசோத. 3.7:2 மந்த மாருதம் துந்துபி வளரிசை மலிந்தன
5. பார. ஆதி. 41:4 துந்துபியின் குலம் முழங்க
6. ,, ,, 59:2 துந்துபிக்குழாம் அதிர் ஒலியும்
7. ,, ,, 58:1 அந்தர துந்துபி முழங்க
8. ,, ஆரணிய. 60:1 அந்தர துந்துபி முழங்க
9. ,, ,, 111:3 துந்துபி கொட்ட அளப்பில்சேனைசூழ
10. ,, ,, 13 :2 மோக துந்துபி முழங்க
11. ,, ,, 14:1 அந்தர துந்துபி அதிரும் பேரொலி
12. ,, ,, 149:2 துந்துபிக் குழாம் நின்றார்ப்ப
13. ,, உத்தி. 8:3 சோனை மாமுகிலேயும் ஒத்ததிர்ந்த துந்துபிக்குலம்
14. ,, ,, 243:1 அந்தர துந்துபியார்ப்ப
15. ,, வீட்டும. 69:2 வழிமொழிந்துளம் மகிழ்ந்தார் அந்தர துந்துபி முழங்க வானோர் உள்ளார்

16. ,, துரோண 145:4 துருபதன் மைந்தனும் நின்றனன்
அந்தரதுந்துபி மீதெழவே

துந்துமி

1. திருப்புகழ் 349 தபலை குடமுழவு திமிலைப டகம
தபுதசலிகை தவில் முரசு கரடிகை
மத்தளி தவண்டை யறவைத்தகுணி
துந்துமிகள்
மொகு மொகு மொகுவென அலற
2. திருப்புகழ் 967 திமித்தி மிந்திமி திமிதிமி யென்றிட்
டிடக்கை துந்துமி முரசு முழங்க
3. தேவா-திருமுறை 3 காலை யொடு துந்துமிசங்கு குழல்
பதிகம் 330 பாடல் 3 யாழ் முழவு காமருவுசீர்
4. திருப்புகழ் 14 சருவுங் கடல் துந்து மியுங்குட
முழவங்கள் குமின் குமினென்றிட
5. தேவா-திருமுறை 7 கொட்டிப்பாடு மித்துந்து மியொடு
திருமுருகன் பூண்டி குடமுழா நீர் மகிழ்வீர்
பாடல் 6
6. திருப்புகழ் 337 திமிலை தவிற்றுந் துமிகள் முழக்குந்
சிரகிரி யிற்றங்கும் பெருமாளே.

தூரியம்

1. பாரதம். சபா. 90:3 தோரண வீதிதோறும் தூரியம் முழங்க
2. ,, கன்ன. 43.3 தூரியம் பலகோடி கோடிதுவைப்ப
3. ,, ,, 182:3 தூரியம் கறங்க
4. ,, துரோண. 160:2 களம் செய்தூரியம் எழ
5. கம்ப. கிட்கிந்தை. 463 துனிக்குரல் மேகம் வள்வார்த்தூரியம்
துவைப்பபோன்ற
6. " யுத்த. 810 தூரியம் கடலினின்று துவைப்ப

தொண்டகச்சிறுபறை

1. பத்து.திருமுருக. 197 தொண்டகச் சிறுபறை குரவையயர
2. நற்றி. 104 5 குறக்குறுமாக்கள்...தொண்டகச் சிறு
பறைப் பாணி

3. குறுந். 378:4 தொண்டகச் சிறுபறை பானாள் யாமத்தும் கறங்க
4. அகநா. 118:3 தொண்டகச் சிறுபறைச்சீர் பெண்டி ரொடு விரைஇ
5. கல். 7:12 தொண்டகம் துவைப்ப
6. ,, 24:14 திரிகல் ஒப்புடைத்தாய வட்டவாய்த் தொண்டகம்
7. ,, 51:15 இவளே, தொண்டகம் துவைப்பத் தொழிற்புனம் வளைந்து
8. சிலம்பு. 3.24:16 தொண்டகந் தொடுமின் சிறுபறை தொடுமின்
9. சீவக. 418:2 தொண்டகப் பறை துடியோடார்த் தெழ

படகம்

1. திருப்புகழ் 349 தபலைகு டமுழவு திமிலை படகம்
தபுதசலிகை தவில் முரசு கரடிகை
மத்தளி தவண்டை யறவைத் தகுணி துந்துமிகள்
மொகு மொகு மொகுவென அலற

2. திருப்புகழ் 860 திதிதிந்திமி தனதந்தன டுடுடுண்டுடு பேரி
டகு டங்குகு டிகு டிங்குகு படகந் துடி வீணை
செகணஞ் செக வெனவும் பறை திசை யெங்கினு மோத

3. தேவா. திருமுறை 3 கத்திரிகை துத்திரி கறங்கு துடிதக்கை
பதிகம் 334 யொடிடக்கை படகம்
பாடல் 5 எத்தனை புலப்பில் கருவித் திரளலம்ப விமையோர்கள் பரச

படவம் (படகம்)

1. பெருங். 1.57:58 சங்க படவமும் கம்பலவிதானமும்
2. கல். 8:14 பெருவாய் ஒரு மூகப்படகம் பெருக்க

படலிகை

1. சூளா.கல்யாண. 936 கிணையொடு படலிகை கிளையொடு
(110) இனம்தர

பதலை

1. புறநா. 103:1 ஒருதலைப் பதலை தூங்க
2. குறுந். 59:1 பதலைப் பாணிப் பரிசிலர்
3. பதிற்று. 41:3 பண்ணமை முழவும்பதலையும்பாறவும்
4. பத்து மலைபடு. 11 நொடிதரு பாணிய பதலையும்
5. புறநா. 64 நல்யாழாகுளி பதலை யொடு சுருக்கிச்
செல்லாமோதில் சில்வளை விறலி
6. 152 மண்முழா அமைமின்பண்யாழ் நிறுமின்
கண்விடுதூம்பிற்களிற்றுயிர் தொடுமின்
எல்லரி தொடுமின் ஆகுளி தொடுமின்
பதலையொடுகண்ணையெனஇயக்குமின்
7. திருப்புகழ் 106 தக்க தகதகக தந்தத்த தந்தகக என்று
தாளம்
பதலை திமிலை துடி தம்பட்டமும்
பெருக
8. குறுந் 59:1 பதலைப் பாணிப் பரிசிலர் கோயின்

பம்பை

1. சீவக. 2222:2 பம்பை வெம்பின
2. பெருங் 1.36:159 நெய்தற் புலையன் நெறியிற் சாற்றிய
பைதற் பம்பையிடங்கள் நெருக்கி
3. ,, 3.26:36 இன்கட் பம்பையெருஉக் குரல்உறீஇ
4. கம்ப.அயோத். 649.2 பம்பை பம்பு படையினன்
4. ,, ,, 971:2 வார்பிசி பம்பையும் துடியும்
6. கம்ப.யுத்த 2381 பம்பைதார்முரசம் சங்கம்

7.	திருப்புகழ்	616	தபலை திமிலைகள் பூரிகை பம்பைக் கரடி தமருகம் வீணைகள் பொங்கத்
8.	திருப்புகழ்	1163	டிமிலை பறை முழவு துடி பம்பையுஞ் சங்கமுந்தவமோத
9.	திருப்புகழ்	590	பம்பைச் சலிகைகள் சங்கப் பறைவளை

பறை

1.	தொல்.சொல்.	409	ஆரியமன்னர் பறையின் (சேனாவரையர் மேற்கோள்)
2.	,, பொருள்.	18	தெய்வம் உணாவே மாமரம் புள்பறை
3.	,, ,,	60	வாள்மலை...பறை தூங்க
4.	,, ,,	60	சீர்சால்பறைகெழுவாரணப் போர்(நச் மேற்)
5.	அமுத.	72	மாமரம் புள்பறை
6,	பன்னிரு.	110	மலையே . பறையே பரியே
7.	பு.வெ.மா கரந்.	3:2	எங்கும் பறையோ டெழுந்தார்ப்ப
8.	,, ஒழிபு.	5:3	மன்றம் கறங்க மயங்கப் பறைபடுத்து
9.	பத்து.பொருந.	171	வெரூஉப்பறை நுவலும் பரூஉப்பெருந் தடக்கை
10.	,, மதுரைக்.	262	வன்கை வினைஞர் அரிபறையின் குரல்
11.	,, ,,	523	கொடும்பறைக் கோடியர்
12.	,, மலைபடு.	236	கடும்பறைக் கோடியர்
13.	,, ,,	344	சேம்பு மஞ்சளும் ஓம்பினர் காப்போர் பன்றிப் பறையும்
14.	அகநா.	23:2	பாகுலந்தன்றே பறைக்குரல் எழிலி
15.	,,	76:5	அவைபுகுபொருநர் பறையின் ஆனாது
16.	,,	151:10	அரிக்கோற் பறையின் ஐயெனஒலிக்கும்
17.	,,	178:3	பறைக்கண் அன்ன நிறைச்சுனை
18.	,,	194:8	கறங்கு பறை
19.	,,	221:3	பறைகண்டன்னபாவடி...களிறு
20.	,,	281:13	பறையறைந்தன்ன அலர்


21.	அகநா.	231:3	விசித்து வாங்கு பறை
22.	,,	364:3	ஆடுகளப் பறை
23.	ஐங்குறு. மருதம்	81	அரிப்பறை வினைஞர்
24.	கலி. கடவுள். வரி.	5	படுபறை பலவியம்ப
25.	,,	56	பறையறைந்தல்லது செல்லற்க
26.	,,	92:21	ஓர்த்த திசைக்கும் பறைபோல்
27.	,,	104:29	அவ்வழிப் பறையெழுந்தியம்ப
28.	,,	14[illegible]:15	மான...ஆருயிரெஞ்சப் பறையறைந் தாங்கு
29.	,,	149:1	நிரை திமில்களிறாகத் திரையொலி பறையாக
30.	குறுந்.	7:4	ஆரியர், கயிறாடு பறையின்...வாகை வெண்ணெற்றொலிக்கும்
31.	,,	15:1	பறைபடப் பணிலம் ஆர்ப்ப
32.	நற்றி.	46:7	பறையறை கடிப்பின் அறையறை யாத் துயர்வர
33.	,,	83:4	வாய்ப்பறை யசாஅம் வலிமுந்து கூகை
34.	பதிற்று.	21:20	போர்த்தெறிந்த பறையாற் புனல் செறுக்குநரும்
35.	,,	70:24	இழுமெனஇழிதரும் பறைக்குரல்
36.	பரி.	6:24	உரைச் சிறைப்பறையெழ ஊர் ஒலித் தன்று
37.	,,	10:7	பறையறையப் போந்தது வையைப் புனல்
38.	,,	2[illegible]:14	ஊரூர்பறையொலி கொண்டன்று
39.	புறநா.	68:14	தணிபறையறையும் மணிகொள் தேர் வழி
40.	,,	126:8	பறையிசையருவி
41.	,,	225:10	இன்னிசைப் பறையொடுவென்றிநுவல
42.	,,	229:14	பறையிசையருவி
43.	,,	262:2	பெருங்களிற்றடியிற்றோன்றும் ஒருகண் இரும்பறை

44.	புறநா.	279:7 செருப்பறைகேட்டு விருப்புற்று
45.	,,	371:5 பறையொடு தகைத்த கலப்பை
46.	,,	371:20 பணை(பறை)மருள்நெடுந்தாள்...
47.	,,	395:7 அரிப்பறையறைபுள் ஓப்பி
48.	,,	39 :4 அரிப்பறையாற் புள் ஓப்புந்து
49.	,,	396:6 மென்பறையாற் புள் இரியுந்து
50.	,,	398:30 பறையிசையருவிப் பாயற் கோவே
51.	இன்னிலை.	28:1 கறங்குபறை காணா வுறுவூனை
52.	கார்.	17:2 பறைக் குரலனொடு
53.	தி.மா.நூற்.	50:1 திரைபறையா
54.	,,	53:2 தேறு திரைபறையா
53.	தி.மொ.ஐம்.	31:2 கழனி விளைநர்க்கெறிந்த பறை கேட்டு.
56.	குறள்	1076 அறைபறையன்னர்கயவர்
57.	,,	1115 நுசும்பிற்கு நல்ல படாஅபறை
58.	,,	1180 எம்போல் அறைபறை கண்ணாரகத்து
59.	நாலடி.	6:4 தழீஇத் தழீஇத் தண்ணம்படும் (தண்ணம்—சாப்பறை)
60.	,,	23:1 மன்றம் கறங்க மணப்பறை யாயின
61.	,,	23:2 அன்றவர்க் காங்கே பிணப்பறையாய்
62.	,,	24:2 சிறுவரை நின்றே எறிய பறையினை
63.	,,	25:4 டொண் டொண் டொடென்னும்பறை
64.	,,	86:1 பல்லாரறியப் பறையறைந்து நாள் கேட்டு
65.	,,	392:4 நெய்தல் அறைந்தன்ன நீர்த்து (நெய்தல்-சாப்பறை)
66.	நான்மணி.	4:1 பறைபட வாழா அசுணம்
67.	,,	15:1 பறைநன்று பண்ணமையா யாழின்
68.	பழ.	37:4 ஓர்த்தது இசைக்கும் பறை
69.	,,	84:4 பறையறையார் போயினாரில்
70.	,,	178:4 பறைக்கண் கடிப்பிடுமாறு


71. கல் 56:25 பறையும் தேரும் பறிபட்டணங்கியும்
72. சிலம்பு. 2.12:40 ஆறெறிபறையும்
73. ,, 2.14:29 நாக்கடிப்பாக வாய்ப்பறை
அறையினும்
74. ,, 2.15:46 பாகுகழிந்து யாங்கணும் பறைபட
வரூஉம் வேகயானை
75. ,, 3.25:23 பறையிசை யருவி
76. ,, 3.25:177 அறைபறை யென்றே அழும்பில் வேள்
உரைப்ப
77. ,, 3.25:194 அறைபறை யெழுந்தநால்
78. ,, 3.26:1 அறைபறை யெழுந்தபின்
79. ,, 3.26:193 வடித்தோற் கொடும்பறை வால்வளை
80. ,, 3.29:208 பறைக்கட் பேய் மகள்
81. ,, 3.28:68 பரிதரு செய்கையிற் படுபறை
யார்ப்பவும்
82. மணிமே. 41 பாடும் பறையும்...விளிப்ப
பளிக்கறை.
83. ,, பீடிகை. 26 பறையிற் சாற்றி...செல்வோன்
